Chloramphanicol Bypz

உ

கணபதி துணை

# போற்றி அருளுக

செ. தனபாலசிங்கன், B. A. (Lond.)

பதிப்பகம் :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,

யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு 1976.

உரிமை நூலாசிரியருக்கு உரியது.

## சமர்ப்பணம்

ஈன்று எடுத்த அன்னை இல்லாமல் போகவே எளியேனைப் பரிவுடன் தாங்கிப் பண்புடன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய பெருமாட்டி கர்மயோகி சிற்றன்னை அமரர் நாகலிங்கம் சிவபாக்கியம்.

நிலவுலக வாழ்வு நில்லாதது என்பதை எடுத்துக் காட்டி இவ்வுலக வாழ்வை நீத்தவர் என் அருமைச் சகோதரர் அமரர் செ. சோமசுந்தரம்.

**இந்நூல் இருவருக்கும் சமர்ப்பணம்.**

விலை ரூபா 6/-

உ

முருகன் துணை

# அணிந்துரை

'கலைமகள்' ஆசிரியர்
வாகீச கலாநிதி, வித்துவான்

## கி. வா. ஜகந்நாதன் M. A; M. O. L.

பண்பு என்றும், பண்பி என்றும் இரண்டு சொற்கள் உண்டு. அவற்றை வடமொழியில் குணம் என்றும், குணி என்றும் கூறுவர். உலகில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் குணங்கள் உண்டு. சடப் பொருளுக்குக்கூடக் குணம் (Property) உண்டு என்று விஞ்ஞான உலகம் கூறும். மெய்ஞ்ஞான உலகமும் அதைச் சொல்லும். மண் என்பது பஞ்சபூதங்களில் ஒன்று. அதைப் பிருதுவி தத்துவம் என்பர். அதற்கு என்ன குணம்? "மண் கடினமாய்த் தரிக்கும்" என்பது சாத்திரம். அதற்கு மணம் உண்டு; அதுவே அதன் சிறப்புக் குணம்.

சடப்பொருள் இருக்கட்டும். சித்துப் பொருள்களாகிய உயிர்களுக்குக் குணம் உண்டா? உண்டு. உயிர்க்குணம் என்று அவை சொல்லப்படும். அப்படியே இறைவனுக்கும் குணம் உண்டு என்று சொல்லலாமா? இறைவனைக் குணக்கடல் என்றும், அநந்த கல்யாண குணங்களை உடையவனென்றும் கூறுகிறார்கள். ஆகவே, அவனுக்கும் பல குணங்கள் உண்டு என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆனால், பல இடங்களில், அவன் குணமும் குறியும் இல்லாதவன் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். "ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தமிலான் வரக் கூவாய்" என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். "கோளில்

பொறியிற் குணமிலவே எண்குணத்தான், தாளை வணங் காத் தலை'' என்று திருவள்ளுவர் இறைவனை எண் குணத்தான் என்கிறார்.

அப்படியானால் எதை உறுதியாகக் கொள்வது? அவனுக்குக் குணம் உண்டா? இல்லையா?

சகுணம், நிர்க்குணம் என்று இறைவனுடைய உரு வங்களில் இரண்டு வகையைச் சொல்கிறார்கள். இவற் றையே தடஸ்தம், சொரூபம் என்றும் வேறு பெயர் களாற் சொல்கிறார்கள். சகுணம் என்றால், குணத்தோடு கூடியது என்று பொருள்; நிர்க்குணம் என்றால், குணம் அற்றது என்று பொருள்.

இந்த இரண்டு சொற்களையும் பார்த்தால், இறை வன் குணத்தோடும் இருப்பான், குணம் இல்லாமலும் இருப்பான் என்று தெரிகிறது. ஆகவே, "அவனுக்கு வடிவு, பண்பு ஆகிய குணங்கள் உண்டு; அவை இல்லை" என்று இரண்டு வகையாகவும் சொல்லலாம் போல் இருக்கிறது.

பிற சமயத்தார் அவனுக்கு வடிவே இல்லை என் கிறார்கள். நாமோ வடிவம் இல்லை, வடிவம் உண்டு என்று மாறி மாறிச் சொல்கிறோம். இந்த முரண் பாட்டை நீக்குவது எப்படி?

இதை முரண்பாடு என்று சொல்வதைவிட, இந்த இரண்டு வகைக்கும் உள்ள வேறுபாட்டைச் சற்றே ஆராய்ந்தால் உண்மை புலனாகலாம். இரண்டும் இறை வனுக்கு உண்டு என்று வைத்துக் கொள்வோமானால் அவனுக்குக் குணமற்ற நிலை, குணமுள்ள நிலை என்று இரு வேறு நிலைகள் உண்டு என்று ஒருவாறு தீர்மானஞ் செய்து கொள்ளலாம். இரண்டும் அவனுக்கு இயல் பாக அமைந்தவை என்று சிலர் சொல்வதுண்டு. சைவ மும் அத்துவிதமும் அவனுடைய இயல்பான நிலை குண மற்றதென்றும், அருளினால் மேற்கொள்ளும் நிலை சகுணம்

என்றும் சொல்லும். இயல்பாலும் மேற்கொண்ட தாலும் இரண்டைப்பற்றியும் நூல்கள் பேசுகின்றன. அவனுடைய இயல்பான நிலையை நேரே சுட்டிக் காட்ட முடியாது; ஆகையால், எதிர்மறை முகத்தால் 'உருவில்லாத நிலை, பெயர் இல்லாத நிலை, குணம் இல்லாத நிலை, இயக்கம் இல்லாத நிலை' என்றுதான் சொல்ல முடியும். அவன் மேற்கொள்ளும் நிலையை விரித்துச் சொல்லப் புகுந்தால் எல்லையே கிடையாது எந்த உருவத்தைச் சொல்வது? எந்தப் பண்பைச் சொல்வது? எந்தத் திருவிளையாட்டைச் சொல்வது? எப்படிச் சொன்னாலும் முழுவதும் சொல்லி எல்லை காண முடியாது. இயல்பான நிலையைப் பற்றி ஒன்றுமே சொல்ல முடியாது; எடுத்துக் கொள்ளும் நிலையைப் பற்றிச் சொல்லி முடிவு கட்ட முடியாது. இரண்டுமே சொல்லிறந்த நிலைகள்; இரண்டும் சொல்லுக்குள் அகப்படாத நிலைகள். ஒன்று அணுக முடியாதது; மற்றொன்று எல்லை காண முடியாதது.

இந்த இரு வேறு நிலைகளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு எப்படி இருக்கிறது? அவனுடைய இயல்பான நிலை, சொரூபம், நிர்க்குணம் நம் பொறிகளாலும் அறிவாலும் எட்டிப் பார்க்க முடியாதது. மற்றொன்றோ எண்ணுவதற்கும், பார்ப்பதற்கும், வழிபடுவதற்கும், புகழ்வதற்கும் உரியதாக இருக்கிறது. புராணங்கள், அடியார்களின் வரலாறுகள், சாத்திரங்கள், துதிப்பாடல்கள் ஆகிய அனைத்தும் அந்தச் சகுணத்தைப் பற்றியே, இறைவனுடைய அருட்குறிகளைப் பற்றியே படர்கின்றன. அந்த நிலை அறிவு முதலியவற்றால் எல்லை கட்ட முடியாமல் இருப்பதனால் அவனுடைய புகழ், துதிகள், வடிவங்கள் வளர்ந்துகொண்டே போகின்றன.

குணங் குறிகளை உடைய நிலையில் உள்ள இறைவனை நாம் வணங்குகிறோம். அதற்குப் பயன் என்ன? குணங் குறி கடந்த நிலையில் உள்ள அவனோடு நாமும் குணங் குறி கடந்து ஒன்றுவது, இரண்டறக் கலப்பது என்று

சாத்திரங்கள் கூறுகின்றன. அப்படிக் கலந்த பின்னர்ச் செயல் இல்லை; வேறுபாடு இல்லை; இயக்கம் இல்லை; வரலாறு இல்லை. ஆகவே முயற்சிகளும், சாதனங்களும், பக்தியும், வழிபாடும் அந்த எல்லைக்கு முன், இறைவன் குணங் குறிகளுடன் உள்ள நிலையில் நிகழ்வன. அப்போது உயிர்களுக்கும் குறி குணங்கள் உளவாகும்.

ஆகவே, இறைவனுடைய தடத்த நிலையில் தோற்றும் அத்தனையும் முடிந்த முடிபாகிய மூத்தியின்பத்தை உயிர்க் கூட்டங்கள் அடைய உதவும் கோலங்கள் என்று சொல்லவேண்டும். உயிர்க் கூட்டங்கள் குறியும் குணமும் கோலமுங் கொண்டு உலவுவதனுல் அவற்றிற்கு அருள் பாலிப்பதற்காக இறைவனும் அவற்றைக் கொண்டு எழுந்தருளுகிருன். அவனுடைய இயல்பான நிலை இவை கடந்த நிலை ஆனுல் உயிர்களுக்கு அருள் புரிவதற்கு அவன் இறங்கி வந்து நடந்த நிலையே குண முங் குறியும் பெற்ற நிலை கடந்த நிலை அநுபவத்துக்கு உரியது; சாத்தியம். நடந்த நிலை தொடர்வதற்குரியது; சாதனம்.

கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ இருக்கின்ற பிராணவாயுவும் ஜலவாயுவும் இணைந்து மேகமாகின்றன. வெள்ளை மேகம் குளிர்ச்சியினுல் கரிய மேகமாகிப் பின்னும் குளிர்ந்து மழை பெய்கிறது; தண்ணீராகிறது. அது பின்னும் குளிர்ந்தால் பனிக்கட்டியாகிறது. வாயு நிலையில் கண்ணுக்குத் தெரியாது. மேக நிலையில் கண்ணுக்கு எட்டும்; கைக்கு எட்டாது. நீரான நிலையில் கண்ணுக்கும் எட்டும்; கைக்கும் எட்டும்; ஆனுல் கையில் பிடிகக வராது. பனிக்கட்டி நிலையிற் கண்ணுக்கும் எட்டும்; கைக்கும் எட்டும்; கையிற் பிடிக்கலாம். நீருக்கு உருவம் உண்டு; வடிவம் இல்லை. (Water has a form but not a shape); பனிக்கட்டிக்கு வடிவம் உண்டு.

இறைவன் இயல்பாக வாயு வடிவத்தைப்போல பொறிகளுக்கு எட்டாதவனுக இருக்கிருன். பிறகு

மேகத்தைப்போலச் சோதி வடிவாக எழுந்தருளுகிறான். பிறகு தண்ணீரைப்போல் உருவத்துடன் எழுந்தருளுகிறான். அப்பால் பனிக்கட்டியைப்போல நாம் வணங்கும் வடிவத்தில், விக்கிரகங்களாக இலங்குகிறான்.

இவ்வாறு இறங்கி வருவதற்குக் காரணம், அவனுக்கு நம்மிடம் உள்ள அருள். அவன் குறிகளும் குணங்களும் உடையவனாக வருவதற்கு மூலமான பண்பு அருள். எனவே, இவை எல்லாவற்றிற்கும் மூலம் அருள் என்றே சொல்லி விடலாம். அருளின் விரிவே இறைவன் மேற்கொள்ளும் வடிவங்களும் அநந்த கல்யாண குணங்களும். அருள் என்னும் மூலப் பண்பிலிருந்து விரிந்தது சகுணம்; தடத்தம்; நடந்த நிலை அதனால்தான் இறைவனுடைய வடிவங்களை அருட்குறிகள் என்று சொல்கிறார்கள்.

இறைவன் பண்பியானால் அவனிடம் உள்ள பண்பு - எல்லாவற்றுக்கும் மூலமான குணம் - அருள். அவன் வடிவு எடுத்து வருவதும், விளையாடல்கள் புரிவதும், வீரச் செயல்களை ஆற்றுவதும், அடியார்களை ஆட்கொள்வதும் எல்லாமே இந்த அருளால் விளைவது. பொல்லாதவர்களை ஒறுப்பதுகூட அருள்தான்; அதை மறக் கருணை என்பார்கள். அவன் எது செய்தாலும் அது அருட்செயல்தான். அதனால்தான், இறைவன் எழுந்தருளினான், இருந்தருளினான், நின்றருளினான், அடித்தருளினான், அடிபட்டருளினான், மணம்புரிந்தருளினான், படைத்தருளினான், காத்தருளினான், சங்கரித்தருளினான், மறைத்தருளினான், கருணை வழங்கியருளினான் என்று அவனுடைய செயல்கள் எல்லாவற்றிற்கும் அருளினான் என்பதைச் சேர்த்துச் சொல்கிறோம்.

இறைவனிடம் அருள் இணைந்திருக்கிறது. இறைவனே அருள் மயமானவன். ஆனால், அந்த அருள் வெளிப்படும்போதுதான் இறைவனுக்கு இயக்கம் உண்டாகிறது; செயற்படுகிறான். அந்த அருளையே சத்தி என்று சொல்கிறோம் "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" என்பது சாத்திரம். சிவமும் சத்தியும் வேறு

பாடின்றி ஒருவருள் ஒருவர் இணைந்து நிற்பர். சிவத் துக்குள் சக்தி கரந்து நிற்பாள். இதைப் புறநானூறு,

"அவ்வுருத், தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

என்று சொல்கிறது. அவ்வாறு அருளை வெளிப்படுத்தா மல் தன்னுள் அடக்கிக் கரக்கும் நிலையில் சிவத்தால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. அது வெளிப்பட் டால்தான் சிவமே தொழிற்படும்; உயிர்க் கூட்டங் களுக்கு நலம் உண்டாகும். முதலில் சிவத்தினின்று இந்த அருட்சத்தி வேருகப் பிரியாமல் இணைந்தே வெளிப்படுகிறது. இந்தக் கோலமே மாதிருக்கும் பாதி யனுடைய கோலம். இந்தக் கோலத்திலிருந்தே மற்ற எல்லாக் கோலங்களும், பிரபஞ்சங்களும் வெளியாகின் றன.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாழ் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"

என்று சங்க நூலாகிய ஐங்குறுநூறு சொல்கிறது. இந் தக் கோலத்தைத் தொன்மைக் கோலம் என்று மாணிக்கவாசகர் சொல்கிருர்.

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

பிறகு அருள் பின்னும் மலர்ச்சி பெறும்போது இறைவன் உமையை இடப்பக்கத்தில் வீற்றிருக்கச் செய்து இடபாருடஞக எழுந்தருள்கிருன். நாயன்மார் களுக்கு அருள் புரியும்போது இறைவன் உமாதேவி யாரோடு இடபவாகனத்தில் தோன்றினன் என்று சேக் கிழார் கூறுவதைப் பார்த்தால் இக்கருத்துத் தெளி வாகும். இதற்கு மேலும் அருள் கனியும்போது கந்த வேள் அவ்விருவர்களிடையே தோன்றுகிருன். இன்ப

வடிவாகிய சிவத்துக்கும் அருள் வடிவாகிய அம்மைக்கும் இடையே இரண்டும் இணைந்த கோலமாக இருக்கிறான் முருகன். அப்போது சிவபெருமான் ஸோமாஸ்கந்த மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறான். அருள் வெள்ளம் எங்கும் பொங்கிப் பரவுவதற்கு வழி காட்டுவது இந்தத் திருக்கோலம். அதனால்தான் திருக்கோயில்களில் நிகழும் பெருந் திருவிழாவாகிய தேர்த் திருவிழாவில் எல்லோரும் கண்டு நலம் பெறும்படி ஸோமாஸ்கந்த மூர்த்தி எழுந்தருளுகிறார். கோயிலுக்குள் சென்று வழிபட இயலாதவர்களும் அந்த மூர்த்தியைக் கண்டு, தம் கையாலேயே தேர் வடம் தொட்டு இழுத்து அருளைப் பெறலாம். இது சமரசத் திருவிழா; இறைவனுடைய அருள், இன்னார் இனியார் என்ற வேறுபாடு இன்றிப் பெருகிப் பரவும் திருவிழா. இந்த விழாவில் அருளை வழங்க எழுந்தருளும் அருட்கோலம் எல்லா அருட்கோலத்திலும் சிறந்து நிற்கிறது. சிவத்தினின்றும் வேறுபடாதவள் சத்தி; அந்தச் சத்தியினின்றும் வேறுபடாதவன் முருகன். மூவரும் ஒருவராய மூர்த்தி ஸோமாஸ்கந்தத் திருக்கோலம்.

"ஆதலின், நமது சத்தி அறுமுகன்"

என்று கந்தபுராணம் இந்த உண்மையைச் சொல்கிறது. சிவம் அருள் மணம் வீசி மலர்ந்தால் உமாபாகனாக வருகிறான்; கனிந்தால் ஸோமாஸ்கந்தனாக எழுந்தருளுகிறான்.

ஆடவன் தனியாக இருந்தால் அறம் புரிய இயலாது. இல்லறம் நடாத்த இன்றியமையாத துணை மனைவி. மனைவியை மணந்து இல்லறம் நடத்தும்போது அந்த வாழ்வு மலர்ச்சி பெறுகிறது. அதோடு நின்றால் பயன் இல்லை. மக்கட்பேறு உண்டானால்தான் வாழ்வு நிரம்புகிறது; சிறப்பை அடைகிறது.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்பார் திருவள்ளுவர். இல்லற வாழ்வுக்கு மனைவியும் மக்கட்பேறும் மலர்ச்சியையும் பயனையும் தருவதுபோல, இறைவன் அருளை உயிர்க் கூட்டங்களுக்கு வழங்கும் அறத்தைப் புரியும்போது அதற்கு மங்கலமாக இறைவியும் நன்கலமாக முருகனும் வாய்க்கிறார்கள். அருள் வழங்கும் அறம் அப்போது நிறைவடைகிறது.

ஆருயிர்க் கூட்டங்களுக்கு நலம் உண்டாக்குவது இறைவனுடைய திருவருள். அவன் வேறு, அருள் வேறு அல்லாவிட்டாலும் அருள் மலர்ச்சி பெறும்போதுதான் உயிர்களுக்கு நலம் விளைக்கிறது பூவின் மணமும் நிறமும் வேறாக இல்லாவிட்டாலும் மணம் என்றும் நிறம் என்றும் தனித்தனியே பேசுகிறோம் பொருளைப் பிரிக்க முடியாவிட்டாலும் சொல்லுலகத்தில் பிரித்துச் சொல்ல முடிகிறது. அதுபோலத்தான் அருளையும் பிரித்துச் சொல்கிறோம். அதை இறைவனிடமிருந்து வேறாகப் பிரிக்காவிட்டாலும், அதை மட்டும் தனியே சொல்லிலே பிரித்துச் சொல்கிறோம். அவன் அருள் பெற்று அவனை அடைய வேண்டும். அந்த அருளைப் பெற, அருளின் விரிவாகிய குணங் குறிகளோடு குணமும் குறியும் உடைய நாம் தொடர்பு கொண்டு வழிபடுகிறோம்; மூன்று கரணங்களாலும் வழிபடுகிறோம். மனம், வாக்கு, காயம் என்பவற்றால் வழிபட வேண்டுமானால், அவனுடைய அருளின் விரிவாகிய குணங் குறிகளோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

ஆகவே, சிவத்தை அடைய வேண்டுமானால் நேரே சிவத்தைப் பற்ற முடியாது. அவனுடைய அருளை, அந்த அருளின் விரிவான கோலங்களைப் பற்றி வழிபட வேண்டும். அருட் பொதுமையையே சத்தியாகச் சொல்கிறார்கள். இறைவன் குணியாகிய சத்தன்; அவன்பால் உள்ள மூலப் பண்பாகிய அருள் சத்தி. அருளே அவனை அடையச் செய்யும் வழியானால், சத்தியே சிவனை அடைய வழி காட்டுவாள் என்று சொல்வது பொருந்தும். "தாயை அறிந்து பின் தந்தையைக் கூடி" என்று

உருவகமாகச் சொல்வதை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

அந்த அருட் சத்தியின் தொடர்பு இல்லாவிட்டால் நமக்கு இறைவனுடைய தொடர்பு உண்டாகாது. தாயை முதலிற் குழந்தை தெரிந்து கொண்டு, பிறகு தந்தையை அறிவது போன்றது இது. அன்னையே முன்னறி தெய்வம். ஆகவே சத்தியின் வழிபாட்டால், அதன் பயனாகிய சிவத்தோடு கலக்கும் பிராப்தி உண்டாகும்.

சாத்திரங்கள் இறைவனுடைய திருவடியே சத்தி என்றும் சொல்கின்றன. ஞானமே சத்தி என்றும் சொல்கின்றன.

இறைவன் அருளே சத்தி என்பதைப் பற்றி முன்பு பார்த்தோம். அவன் அடியே சத்தி என்பதன் உட்பொருள் யாது? இறைவனுடைய அடியவர்கள் அவன் அடியைப் பற்றிக்கொண்டு நிற்பர்.

"அடியார் பவரே அடியவ ராமால்"

என்பது திருமந்திரம். இறைவனுடைய திருப்பெரு வடிவம் முழுவதையும் நாம் அளந்து காண முடியாது. அவன் எவ்வளவு பெரிய வடிவமுடையவனானாலும் நம்மை ஆட்கொள்வதற்காக அடியிட்டு நடந்து வருகிறான். நாம் நடக்கும் நிலத்தில் கால்தோய நடந்து வருகிறான். அவன் வடிவத்தை அணுகிப் பார்க்க நமக்குத் திறமை இல்லை. அவன் திருவடி நமக்கு அணிமையில் இருக்கிறது. ஆகவே, அதைப் பற்றிக்கொள்ளுதல் நமக்கு எளிது; உரியதும் அதுவே. ஆறடி உயரமுள்ள அன்னையின் தோள் மேல் ஏற எண்ணுகிறது இரண்டடி உயரமுள்ள குழந்தை. தோள் அதற்கு எட்டுமா? ஆகவே, தனக்குப் பக்கத்திலுள்ள தாயின் காலைக் கட்டிக்கொள்கிறது. தாய் அதை அன்பினால் இடுப்பில் எடுத்துக்கொள்கிறாள்; தோளிலும் ஏற்றிக்கொள்கிறாள்.

இறைவனுடைய திருவடியைப் பற்றிக்கொண்டால் மிக மிக உயர்ந்த நிலைக்கு நாம் செல்லலாம். ஆனால், அந்த நிலைக்குப் போக வேண்டுமானால் அவன் திருவடியைப் பற்றுவது ஒன்றுதான் நம்மால் இயலும் செயல். அவன் திருக்கோலத்தில் நமக்கு அணிமையில் இருப்பது, நமக்குச் சிறந்ததாக இருப்பது, திருவடி.

"நின்னிற் சிறந்தநின் திருவடியவை"

என்று பரிபாடல் கூறுவது காண்க.

அப்பனை அணுகுவதைவிட அன்னையை அணுகுவது குழந்தைக்கு எளிது; இயல்பானது. அன்னையை விட்டு அப்பனைக் காண முடியாது. திருவடியை அணுகுவதனால் இறைவன் வழங்கும் உயர்நிலையைப் பெறலாம். அவன் அருள் பெற்றால் ஆனந்தம் அடையலாம். அருளே சத்தி; அருளே திருவடி; இவை இரண்டும் சாதனங்கள்; இலட்சியத்தை அடையும் வழிகள்.

இறைவனை அடைவதற்கு ஞானம் வேண்டும். ஞானம் இன்றி இறைவனை அடைய முடியாது. வழிபாட்டுவகைகளெல்லாம் கடைசியில் ஞானமென்னும் மேற்படியை அடையச் செய்யும். அதிலிருந்து இறைவனை அடைய வேண்டும்.

ஆகவே, இறைவனென்னும் இன்பப் பிழம்பை அடைய அவன் அருள் வேண்டும்; அவன் திருவடியைப் பற்ற வேண்டும்; ஞானம் பெற வேண்டும். இந்த மூன்றும் — அருள், அடி, ஞானம் என்பவை — ஒன்றே. சத்தியே அருளானால், சத்தியே அடி, சத்தியே ஞானம் என்று சொல்லி விடலாம்.

நுட்பமான பொருள்களைத் திட்பமாகக் காட்டுவது பெரியோர்கள் மரபு. இறைவனே நுட்பமான அருளையும் ஞானத்தையும் திருவடியாகவும் சத்தியாகவும் காட்டி, உயிர்களுக்கு நலம் செய்கிறான்.

சாக்தர்கள் சத்தியே எல்லாவற்றையும் செய்வது என்று சொல்கிறார்கள். திரிபுர சுந்தரியாகிய பர

தேவதை பிரமன் முதலிய ஐந்து மூர்த்திகளின் பிரேதங்களின் மேல் அமர்ந்திருக்கிருள் என்று சாக்த நூல்கள் கூறும். பிரமன், திருமால், ருத்திரன், மகேசுவரன் என்பவர்கள் கட்டிற் கால்களாகவும், சதாசிவம் அம்மை அமரும் இருக்கையாகவும் இருப்பார்களாம். இதைக் கேட்கும்போது சைவர்களுக்குக் கோபம் வரும். "பரமசிவன் பிணமாஞ்ஞ? தன்னுடைய கணவஞ்கிய பிணத்தின் மீது அமர்ந்திருப்பவள் எப்படிச் சுமங்கலியாக முடியும்?" என்று கேட்கத் தோன்றும் உண்மை யாது?

நுட்பமானவற்றை உருவக வகையால் திட்பமாகச் சொல்வது புராணம், ஆகமம் யாவும் "அருளது சத்தியாகும்" என்று சாத்திரம் சொல்லும்போது அருள் என்னும் நுட்பத்தைத் திருவுருவத்தோடு கூடிய உமாதேவியாகக் கொள்ள வேண்டும் என்பது நமக்கு விளங்குகிறது. "அருள் புடைவை கட்டிக் கொள்ளுமா?" என்று கேட்க மாட்டோம்.

அதுபோலவே சாக்த நூல்கள் கூறும் தத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும் பரதேவதையாகிய காமேசுவரியோடு காமேசுவரன் இணைந்திருக்கிருன் என்று சாக்த நூல்கள் சொல்லும். சைவர்கள் சொல்லும் பரசிவமே காமேசுவரன். சிவத்தினின்றும் சத்தி பிரிந்தால் சிவன் செயலற்றவஞகி விடுகிருன் என்று சொல்லும்போது அதை நாம் ஒருவாறு தெளிந்து கொள்கிறோம் "சிவமெனும் பொருளும் ஆதிசக்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதாம்" என்ற சௌந்தரியலகரியும் நமக்குச் சிறிது விளங்குகிறது.

'சிவத்துக்குள் சக்தி ஒடுங்கியிருந்தால் சிவம் தொழிற்படாது; அருட்சத்தி வெளிப்பட்டால்தான் சிவத்தின் அருட் செயல்கள் நிகழும்' என்றே இதற்கு நாம் பொருள் கொள்வோம். சாக்தர்கள் எப்படிப் பொருள் கொள்கிறூர்கள் என்பதை ஆராய வேண்டும்.

சிவம் பொருள் (Matter); அதில் உள்ள ஆற்றல் (Energy) சத்தி. சத்தி இல்லாமல் சிவம் இயக்கமில்லாமல் கிடக்கும். "சத்தியிருந்தால் செய்; இல்லாவிட்டால் சிவனே என்று கிட" என்ற பழமொழியும் இந்தக் கருத்தைக் குறிப்பிக்கிறது. "சக்தியிருந்தால் செய்; இல்லாவிட்டால் சவம்போலக் கிட" என்று சொன்னாலும் நமக்கு விளங்குகிறது. இந்த இரண்டையும் இணைத்துப் பார்த்தால், சக்தியில்லாத சிவமும் சவமும் ஒன்றென்றே சொல்லத் தோன்றுகிறது.

சவம் என்றவுடன் நாம் அமங்கலமான, அருவருக்கத் தக்க பிணத்தை நினைக்கிறோம். இயக்கமற்ற பொருள் என்பதையே அது குறிப்பதாகக் கொள்ள வேண்டும். மின்சாரம் இணைந்து தொழிற்படும்பொது ஒலி பரப்பிக் கருவியாக இருப்பது, அதன் தொடர்பு இல்லாவிட்டால் வெறும் இரும்பாகி விடுகிறது. மின்சார ஓட்டம் இல்லாத கம்பி வெறும் இரும்புக் கம்பியாகி விடுகிறது. அதுபோலச் சிவத்தினின்றும் சக்தியைப் பிரித்து விட்டால் எஞ்சியிருப்பது வெறும் ஜடம் போன்ற பொருள்தான் கரும்பில் சக்கையும் சாறும் இருக்கின்றன. சக்கை வேறு, சாறு வேறு ஆகிவிட்டால் சக்கை ஒரு பக்கமும் சாறு ஒரு பக்கமும் இருக்கும். சக்கைக் குவியலின் மேல் சாறு நிரம்பிய குடத்தை வைத்தால் கீழே சக்கையும் அதன் மேலே சாறும் இருப்பது தெரியும். அப்படியே அருளென்னும் சக்தி பிரிந்து பெண் உருவாகும்போது, அருளற்ற சக்கையாக, பிணமாக, சிவம் கீழே கிடக்கும். இப்படி அந்தக் கோலத்துக்குப் பொருள் செய்து கொண்டால் ஒருவாறு உட்கருத்துப் புலனாகும். இவ்வாறு தத்துவத்தை உள்ளிட்ட உருவகங்கள் எல்லாச் சமய நெறிகளிலும் இருப்பது இயல்பு.

சைவமும் சாக்தமும் சிவசக்தி அபேதத்தை மறுப்பதில்லை. சைவம் இறைவியை அருள் மயமாகப் பார்க்கிறது. அந்த அருளே முடிந்த முடிபாகிய முத்தியின்பத்

லைத் தருவது என்று சைவ சித்தாந்தம் சொல்கிறது. இறைவனுடைய அருள் இல்லாமல் முத்தியின்பம் கிடைக்காது என்பதை எல்லாச் சமயங்களுமே ஒப்புக் கொள்கின்றன. சைவம் அந்த அருளையே சத்தியாகப் பார்க்கிறது.

மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவெம்பாவையின் கருத்தை, "சக்தியை வியந்தது" என்ற தொடர் காட்டுகிறது. அது மாணிக்கவாசகர் அமைத்ததா, அன்று என்ற ஆராய்ச்சி இங்கே வேண்டாம். பாவை நோன்பு நோற்கும் கன்னிப் பெண்கள் அம்பிகையைப் போலப் படிவம் அமைத்து நோன்பிருந்து நாள்தோறும் வைகறையில் நீராடி அம்மையை வழிபடுவது தொன்றுதொட்டுவரும் முறை. சங்க கால நூலாகிய பரிபாடலில் இந்தப் பாவை நோன்பைப்பற்றிய செய்தி வருகிறது. மார்கழி முழுவதும் நோன்பு இருந்து தை மாதத் தொடக்கத்தில் நோன்பை நிறைவேற்றுவார்கள். மார்கழி நீராடல் விரத நீராட்டு. தை நீராட்டு விரதம் நிறைவேறிய மகிழ்ச்சி நீராட்டு. அதை அவபிருத ஸ்நானம் என்று வடமொழியில் வழங்குவார்கள்.

இந்த நோன்பு தைம்மாத நீராட்டில் நிறைவு பெறுவதால் இதை தவத்தைந்நீராடல் என்று பரிபாடல் குறிக்கிறது. விரதம் இருக்கும் அருமையை நோக்கி மார்கழி நீராடல் என்று திருவெம்பாவையும் திருப்பாவையும் குறிக்கின்றன. பாவை நோன்பு நோற்கும் கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பித் துயிலுணர்த்திச் சென்று நீராடி அம்பிகையை வேண்டித் துதிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது பாவைப்பாட்டு. பாவைப்பாட்டு மிகப் பழங்காலத்திலே இருந்திருக்க வேண்டும். சைவசமயத்தைச் சார்ந்த பாவைப்பாட்டு ஒன்று இப்போது கிடைக்கிறது.

பாவை வடிவில் உள்ள அம்பிகையை விளித்துப் பாடுவதாக அமைந்தமையின் இந்தப் பாடல்கள்,

"எம்பாவாய்" என்ற விளியோடு முடியும். திருவெம்பாவையும் திருப்பாவையும் "ஏலோரெம்பாவாய்" என்று முடியும் பாடல்களை உடையவை. இப்பாடல்கள் கடல் கடந்தும் சென்று தாய்லந்து முதலிய இடங்களிலும் வழங்கின என்று தெரிய வருகிறது.

பாவைப் பாடல்களில் இரண்டு விண்ணப்பங்கள் சிறப்பாக அமைந்திருக்கும். கன்னிப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவர் வேண்டுமென்றும், நாட்டில் நல்ல மழை பொழிய வேண்டுமென்றும் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வார்கள். நாடு நன்றாக இருக்க வேண்டுமானால் வீடு நன்றாக இருக்க வேண்டும். நாட்டின் அடிப்படை உறுப்பு (unit) வீடு. வீடு விளங்க வேண்டுமானால் இல்லாளாகிய மனைவி வேண்டும். அவளே வீட்டுக்குத் தலைவி. பிரமசாரியோ, கன்னிப் பெண்ணோ இல்லற வாழ்வை நடத்த முடியாது. இல்லற வாழ்வு திருமணத்தில் தொடங்குகிறது. ஆகவே, வீடு விளங்கக் கன்னிப் பெண்கள் மணம் புரிந்து கொண்டு மனைக்கு விளக்கமாகத் திகழ வேண்டும். நாடு வளம்பெற வேண்டுமானால் வீட்டில் இல்லறம் நடைபெற வேண்டும். இல்லறம் நடத்துவதற்கு உறுதுணையாக இருப்பது பொருள். விருந்தோம்பல் இல்லறத்தின் உயிர் நாடி. அதற்கு உணவு வளம் வேண்டும். பொருள் வளமும் உணவு வளமும் வேண்டுமானால் நாட்டில் மழை பெய்ய வேண்டும் ஆகவே, வீட்டு வளத்துக்கு மணமும், நாட்டு வளத்துக்கு மழையும் இன்றியமையாதவை. இந்த இரண்டும் வேண்டுமென்று கன்னிப் பெண்கள் இறைவனிடம் வேண்டுவதைப் பாவைப் பாடல்களிற் காணலாம்.

திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் காட்டும் கன்னிப் பெண்கள் தங்களுக்குச் சிவபக்தர்களே நாயகர்களாக வேண்டுமென்று வேண்டுகிறார்கள். இரண்டு பாடல்களில் இந்த வேண்டுகோள் வருகிறது. ஆண்டாள் அருளிய திருப்பாவையில் வெளிப்படையாகத்

திருமணத்தைப் பற்றிய பேச்சு இராவிட்டாலும், குறிப்பாகக் கண்ணனோடு இணைந்து வாழ்வதையே லட்சியமாகக் கொண்டு ஆண்டாள் பாடுகிறாள். திருவெம்பாவை பாகவதபக்தி அல்லது அடியார் அன்பை வற்புறுத்துகிறது. திருப்பாவை பகவத்பக்தி அல்லது இறைவனுடைய அன்பை வற்புறுத்துகிறது.

திருவெம்பாவை இறைவனுடைய பேரருளின் திறத்தைப் பலபடியாகப் பாராட்டுகிறது. ஆண்டவன் எளிவந்த கருணையனாக இறங்கி வருவதைச் சொல்கிறது. இவை குறிப்பாக அருளாகிய சக்தியை வியந்ததாகக் கொள்ளலாம். இவற்றையன்றி வெளிப்படையாகவே அம்பிகையின் சிறப்பைப் பல இடங்களில் இணைத்துச் சொல்கிறது. "ஏழை பங்காளன்" (8), "பேதை ஒரு பால் திருமேனி" (10, "மையார் தடங்கண் மடந்தை மணவாளா" (11) "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு" (13), "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" (14), "உடையாள்...எம்மை ஆளுடையாள் ... எம்பிராட்டி ... நந்தம்மை ஆளுடையாள்..." (16) என்பவற்றைக் காண்க.

"போற்றி அருளுக" என்ற தொடர் திருவெம்பாவையின் இறுதிப் பாட்டில் பலமுறை வருகிறது. அதையே முதல் கட்டுரையின் பெயராகவும் புத்தகத்தின் பெயராகவும் அமைத்து என் நண்பர் திரு. செ. தனபாலசிங்கன் இந்தக் கட்டுரைத் தொகுதியை வெளியிடுகிறார். இந்த நூலில் உள்ள இறுதிக் கட்டுரைகள் இரண்டைத் தவிர மற்ற எல்லாம் அம்பிகையின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றவை.

முதற் கட்டுரை பொதுவகையில் திருவெம்பாவையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. "இறைவன் திருவடி இறை அருளாகிய சிவசக்தியைக் குறிக்கும். திருவடி வாழ்த்துச் சக்தியையே வாழ்த்தியதாகும். இறைவன் திருவடியை இறையருளாகிய சிவசக்தி என்று சிவஞானபோத மாபாடியம் கூறுகின்றது" என்று எழுது

ருர். திருவெம்பாவையின் உட்கருத்தை இவர் தெளிவாக எடுத்துச் சொல்கிருர்; "ஆன்ம நாயகனுகிய இறைவனை அடைவதற்கு உரிய பக்குவம் முதிர்ந்த உயிர்களைக் கன்னிப் பெண்களாகவும், ஆணவ மல இருளில் பிணிப்புண்டிருத்தலை உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றல் ஒழியப் பெறும் நிலையைத் துயில் நீத்து எழும் நிலையாகவும், மலபரிபாகம் உடைய உயிர்கள் அஃது இல்லாத உயிர்களை உணர்த்தி அன்பு நெறிப்படுத்தி இறையருளில் தோய்வித்தற்கு அழைத்தலை நீராட அழைத்தலாகவும் அமைத்துக் கொண்டு பாடுகிருர்" என்பது காண்க.

அடுத்த கட்டுரை 'சத்தியை வியந்தது' என்பது' அம்பிகை வெவ்வேறு சக்தியாக நின்று பல்வேறு பெயர்களில் பல தொழில்களை ஆற்றுவதையும், காளிதாசன், பாரதி ஆகிய கவிஞர்கள் அவளைப் பாராட்டியிருக்கும் பான்மையையும் விளக்குகிருர்.

"பேதித்து வளர்த்தெடுக்கும் பெய்வளை" என்ற மூன்ருவது கட்டுரையில் மாணிக்கவாசகரின் வரலாற்றை முதலிற் சொல்லிப் பிறகு திருவாசகம், திருக்கோவையார் பாடியதைக் கூறுகிருர். பிறகு சிவசக்தியே ஆன்மாவின் பக்குவ நிலைக்கு ஏற்றபடி வேறுபட்டு நின்று தொழிற்படுதலையே, பேதித்து வளர்த்தெடுத்தல் என்று மணிவாசகர் குறிப்பதாகத் தெரிவிக்கிருர். "பேதித்தல், கன்ம நுகர்ச்சியில் ஈடுபடுமாறு வேறுபடுத்தலாகும். இது மறைத்தலாகும். கன்மக் கழிவில் வளர்த்தெடுத்தல் அருளலாகும். மறைத்தலைச் செய்யும் நிலையில் சத்தி திரோதாயி எனப்படும். அஃது உயிர்களுக்கு மல பரிபாகத்தை உண்டாக்கிப் பாச நீக்கத்தில் அருட் சத்தியாக நின்று உபகரிக்கும். தாய் குற்றம் கண்ட இடத்துச் சினப்பாள். குணம் கண்டபோது இன்புறுவாள். அதுபோலே, சிவசக்தி மறக் கருணை காட்டிச் சினந்து, குற்றம் ஒழிந்தபோது அறக் கருணை காட்டி அன்புடன் ஆட்கொள்வாள்; இது பேதித்து வளர்த்தெடுத்தலாகும்" என்பது இவர் கூறும் விளக்கம்.

"மழை பெய்யாமல் இருக்க முடியுமா?" என்ற கட்டுரை, கற்புடை மகளிர் மழை வேண்டுமென்றால் பெய்யச் செய்யும் ஆற்றலுடையவர்கள் என்று பண்டை நூல்களின் வாயிலாக முதலில் எடுத்து இயம்புகிறது; பிறகு கன்னிப் பெண்கள் மழை வேண்டுமென்று இறைவனை வேண்டுவதாகப் பாடும் பாடல்களைத் திருப்பாவை, திருவெம்பாவை என்னும் இரண்டிலிருந்தும் எடுத்துக் காட்டி விளக்குகிறது. "சிவசக்தி" என்ற கட்டுரையில் ஆறு சமயங்களைப் பற்றிய செய்திகளும் சாக்தத்தின் பெருமையும் ஆதிசக்தி, சிவசக்தி ஆகியவற்றுக்குரிய விளக்கங்களும் வருகின்றன.

"சக்தி தழைக்கும் சிவம்" என்னும் கட்டுரையில் சங்க இலக்கியங்களில் சிவபெருமானையும் சக்தியையும் பற்றி வரும் கருத்துக்களையும், சக்தியின் அருட்பெருக்கத்தையும், சௌந்தர்யலஹரியில் சங்கராசாரியார் அம்பிகைக்குக் கூறும் ஏற்றங்களையும், லலிதாம்பிகையின் பெருமைகளையும் எடுத்து விரிக்கிறார் ஆசிரியர். 'அமாவாசையில் பூரண சந்திரன்' என்ற கட்டுரை அபிராமிபட்டரின் வரலாற்றைச் சொல்கிறது; பிறகு அபிராமி அந்தாதியைப் பற்றியும் அதில் அபிராமிபட்டர் கூறும் அநுபவங்கள், பிற அருளாளர்களின் அநுபவத்தோடு ஒத்து நிற்றலையும் எடுதது விளக்குகிறது. 'வெற்றிச் சக்தி வீரமாகாளி' என்ற கட்டுரையில் நவராத்திரி வழிபாட்டையும், மாகாளியின் தத்துவத்தையும், சிலப்பதிகாரத்தில் கொற்றவையைப் பற்றி வேட்டுவ வரியில் வரும் நுட்பமான கருத்துக்களையும், களவேள்வி பற்றிய செய்தியையும், பாரதியார் காளியைப் பாராட்டும் முறையையும் பார்க்கிறோம்.

இப்படி எட்டுக் கட்டுரைகளிலும் சத்தியோடு தொடர்புடைய கருத்துக்கள் மிகுதியாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். இறுதியில் உள்ள இரண்டு கட்டுரைகள் முறையே கோதையின் இலட்சியக் காதலையும், திருப்பாவையின் சிறப்பையும் எடுத்துக் காட்டு

கின்றன. இந்த இரண்டும் ஆசிரியரின் சமரச மனோ பாவத்துக்கு எடுத்துக் காட்டாக உள்ளன.

இந்தக் கட்டுரைகளின் நடையில் முதன்முதலாக நாம் கண்டு மகிழ்வது அதன் தெளிவு. சொல்லுகிற கருத்தைச் சிடுக்கில்லாமல் தெள்ளத் தெளியச் சொல் லத் தெரிந்தவர் இவ்வாசிரியர். அடுத்தது காழ்ப்பில் லாத வகையில், கருத்துக்களைச் சொல்லும் முறை. இந்த நூலில் சிவஞானபோதமும், சிவஞானசித்தியாரும் இடையிடையே மேற்கோளாக வருகின்றன. திருவாச கம் நூல் முழுவதுமே உடம்பில் குருதி போல விரவி விளங்குகிறது. திருமந்திரம், அபிராமி அந்தாதி, கந்த புராணம், திருவிளையாடற் புராணம், கந்தர் அலங்காரம் ஆகியவற்றில் உள்ள பாடல்கள் இடையிடையே கேட் கின்றன. சங்கநூற் பாடல்களும் சிலப்பதிகாரச் செய் யுட்களும் உரிய இடங்களில் அமைந்துள்ளன. வைணவ சம்பிரதாயக் கருத்துக்களையும் ஆசிரியர் எடுத்துச் சொல்கிறார். வடமொழி நூல்களிலுள்ள கருத்துக்களைப் பலவிடத்தில் எடுத்து விரிக்கிறார்.

பல நூல்களைப் படித்தறிந்து சிந்தித்துத் தெளிந்து, சொல்வதைத் தெளிவாகச் சொல்லிப் படிப்பவரைச் சிந்திக்க வைக்கிறார் இந்த ஆசிரியர்.

இந்தக் கட்டுரைத் தொகுதியைப் புலவர்களும் படித்து இன்புறலாம்; மற்றவர்களும் பயின்று பயன் பெறலாம்.

ஞானபண்டிதனாகிய முருகன் திருவருளால் அன்பர் திரு. தனபாலசிங்கனுடைய நூலறிவும் இயற்கையறி வும் இவ்வாறே இன்னும் பல நூல்களை வழங்கி உலகுக் குப் பயன்பட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

"காந்தமலை", கி. வா. ஜகந்நாதன்
சென்னை - 28.
10-10-75.

# வாழ்த்து

## திரு. கி. வா. ஜகந்நாதன்

என்றும் இளைய பிரானடியில்
இணைந்த நெஞ்சன், செந்தமிழில்
துன்றும் நூல்கள் பலபயின்ற
துரிசில் லாத பேரறிஞன்,
நன்றின் பாலே செலுத்துகின்ற
நாட்ட முடையான்; காழ்ப்பென்ப
தின்றி எந்தச் சமய நூல்
எனினும் பயிலும் விருப்புடையோன். (1)

இலங்கைத் தீவத் தின்வடக்கில்
யாழ்ப்பா ணத்தில் உரும்பராய்
துலங்கும் வேலன் சிதம்பரசுப்
பிரம ணியன்தாள் தொழுதுயர்வோன்;
நலங்கொண் டிடவே அத்தேவை
நயந்து பாடும் படிஅன்பு
விலங்கிட் டெனக்குப் பணித்திட்ட
மேலாம் நண்பன், சீலத்தோன். (2)

பலநூல் எழுதித் தமிழ்மக்கள்
பாராட் டெடுக்கும் எழுத்தாளன்,
உலகில் வேறு பற்றெல்லாம்
ஒழிய முருகன் தனைப்பற்றி
இலகும் வாழ்க்கை நெறியுடையான்,
என்பால் தீரா அன்புடையான்,
நலமார் குணத்தான், தனபால
சிங்கன் என்னும் நாமத்தான். (3)

யாரும் படித்துத் தெளிவுறுமா
　　றினிய தெளிந்த நடையினிலே
ஆரும், "போற்றி அருளுக" என்
　　றமைந்த இந்த நூலெழுதிச்
சீரும் சிறப்பும் உடைச்சக்தி
　　திறமிவ் வாறென் றுணர்த்துகின்றான்;
தேரும் பலநூற் செல்வமெலாம்
　　திரட்டி இதன்பால் வைத்திட்டான். (4)

திருவா சகத்தில் தோய்ந்தஉள்ளம்,
　　தேவா ரத்தில் படிந்தமனம்,
ஒருவா ஞானப் பனுவல்களை
　　உணர்ந்து தெளிந்த உயரறிவு,
பெருமா மகிமை உடையஅபி
　　ராம பட்டர் திருவாக்கின்,
அருமா மறையைத் தெளிந்தமதி
　　அனைத்தும் இதன்பால் விளையாடும். (5)

பத்தி நலமும், நூல்கள்பல
　　பயின்ற அறிவும், பிறர்க்கெங்ஙன்
நத்து மாறு சொலல்வேண்டும்
　　என்னும் நயமும், உத்திகளும்,
மெத்த நுட்ப மானவற்றை
　　விளங்கும் எடுத்துக் காட்டதனால்
சித்தம் கொளவே எடுத்துரைக்கும்
　　திறலும் இதன்பாற் கண்டோமே. (6)

இன்ன வண்ணம் நூல்இயற்றி
　　ஈந்த அன்பன், வடிவேலன்
பொன்னென் றியசீ ரடிமறவாப்
　　பொற்பன், தமிழில் உயர்புலவன்,
என்நல் நண்பன் தனபால
　　சிங்கன் பலநூல் எழுதிநல்கி
மன்னும் பன்னாள் நலமோங்க
　　வாழி வாழி வாழியவே! (7)

உ

# முன்னுரை

திருவாசகத்துள் ஒவ்வொரு பகுதிக்கும் இறை தொடர்புடைய தலைப்புக்களை நாம் காணலாம். திருவெம்பாவைக்குச் 'சத்தியை வியந்தது' என உள்ளுறைப் பொருள் குறித்திருப்பது சிந்தனைக்குச் சீரிய விருந்தாகும். இறைவன் திருவடி இறை அருளாகிய சக்தியாகும் எனவே, திருவடி வாழ்த்து சக்தியை வாழ்த்தியதாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" என்று திருவெம்பாவையைப் பாடத் தொடங்கிய மணிவாசகப் பெருமான் பத்தாவது திருப்பாட்டிலே "பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாத மலர் போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே" என்று பாடியதன் மேல் இருபதாவது திருப்பாட்டிலே "போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்; போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்" என அருளிச் செய்கின்றார். ஆதி எங்கே? அந்தம் எங்கே? என்று தேடுவார்க்கு விடை சொல்லுமாப்போல் இத்திருப் பாடல் அமைகிறது.

சொல்லளவைக் கடந்தது திருவடி எனவும், பொருள் அளவைக் கடந்தது திருமுடி எனவும் பத்தாவது திரு வெம்பாவை முழங்குவது வியந்து போற்றுதற்கு உரியது; இனிய நல்விருந்தாகி இன்புறுதற்கு உரியது.

இறைவனுடைய பேரருளைப் பெறுவதற்கு அவனுடைய தாளை வணங்க வேண்டும். திருவடியைக் கடவுள் வாழ்த்தில் ஏழு பாடல்களில் போற்றுகிறார் திருவள்ளுவநாயனார். இறைவன் திருவடிமலரில் வண்டாக நின்று இன்புறுதலே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். இறைவன் திருவடியோடு தொடர் புடையாரைத்தானே அடியார் என்று நாம் ஏத்திப் போற்றுகிறோம். நம்முடைய உத்தமாங்கம் தலை;

இறைவனுடைய உத்தமாங்கம் திருவடி. இரண்டையும் இணைத்து விட்டால் மரணம் இல்லாப் பெருவாழ்வு வந்து வாய்க்கும். எடுத்த எடுப்பிலே "நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க" என்று மணிவாசகர் சிவபுராணத்தைத் தொடங்குவதும் உளம் கொள்ளத்தக்கது; பெரும் பயன் விளைவிப்பது. இந்த வாழ்விலே இறைவன் அடி சேர்வார் இப்பிறவியையும் இன்பப் பிறவியாக்கிக் கொள்ளலாம். இப்பிறவியின் பின் 'மற்றீண்டு வாரா'ப் பேரின்பப் பெருவாழ்வையும் பெற்றுக் கொள்ளலாம்.

'எம்மைப் பாதுகாத்து எப்பொருட்கும் முதலாகியும் முடிவாகியும் உள்ள நின் திருவடி மலர்களை அருள்வாயாக' என்பது வேண்டிக் கோடல். திருவடிகளை வழுத்தியது இறைவனையே போற்றியதாகும். திருவடி என்பது திருவருளுக்கு உருவாய் அமைந்த நிலை. அவன் திருவடி நமக்குப் போகமும் தரும்; வீடும் தரும். என்வே, 'போற்றி அருளுக' என்பது என்றென்றும் எமது வேண்டிக் கோடலாக இருக்கட்டும்!

'போற்றி அருளுக' என்ற திருப்பாடல் நீராடல் நிறைவேறியதும் எல்லோரும் ஒருங்கே சேர்ந்து தம்மைப் பாதுகாத்தருள வேண்டும் என்று ஐந்து தொழிற்கும் முதல்வனாகிய சிவபெருமானையும் அப்பெருமானை நெஞ்சார நினைந்து வாயாரப் புகழ்ந்து பாடி ஆடுவதற்கு வழி தந்த மார்கழி நீரையும் வேண்டிக் கோடலாக அருளிச் செய்யப்பட்டதாகும்.

பாவை நோன்பு நோற்ற கன்னிப் பெண்கள் தம்மைக் காத்தருள வேண்டும் என்ற கருத்தால் 'போற்றி அருளுக' என்று திருவடியைப் போற்றிவிட்டு, அவ்வாற்றான் திருவருட் பேற்றுக்கு ஏதுவாக இருந்தது மார்கழி நீராடல் என்பதனை உளத்துட்கொண்டு 'போற்றியாம் மார்கழி நீராடேலோரெம்பாவாய்' என்று திருவெம்பாவையைப் பாடி முடிக்கும் பண்புக்குச்

சிரம் தாழ்த்திக் கரம் குவிக்காமல் இருக்கமுடியுமா, என்ன ?

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக ஒரு சக்தி இருக்கின்றது. அது சாசுவதமானது. அது ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி அதன் முதல் எங்கே, முடிவு எங்கே என்பதை நாம் அறியோம். அதற்கு ஆயிரம், ஆயிரம், பல்லாயிரம் திருநாமம். அம்மாபெருஞ் சக்தி விஞ்ஞானியின் உள்ளத்தே நினைவாய் உருக் கொண்டு பொருளாகும். மெய்ஞ்ஞானியின் நெஞ்சில் மெய்ப்பொருளாய்த் திரளும். அப்பெருஞ் சக்தியை வியந்தது திருவெம்பாவை.

இறைவன் திருவடியாகிய அச்சக்தியின் நினைவு இக் கட்டுரைகளை எழுதத் தூண்டியது. சிறப்பாகச் சொன்னால், திருவெம்பாவையில் இருந்த ஈடுபாடு இக்கட்டுரைகளுக்கு அடி எடுத்துக் கொடுத்தது. திருவெம்பாவையின் நினைவிலே நிற்கும் உள்ளம் திருப்பாவையை மறக்க முடியுமா ?

விஷ்ணுவை முழுமுதற் பொருளாக — பரம்பொருளாகக்கொண்டு வளர்ந்த கொள்கைகள் வைணவம் எனப் பெயர் கொண்டது. வேதகாலம் முதல் திருமாலின் வழிபாடு இருந்து வந்திருக்கிறது. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னரே வைஷ்ணவ சமயக் கருத்துக்கள் நம் தமிழ் நாட்டிலே பரவி இருந்திருக்கின்றன. திருமாலுக்குத் திருக்கோயில் எழுப்பி வழிபட்டிருக்கிறார்கள். தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களும் சங்க கால இலக்கியங்களும் இவற்றை நமக்குச் சொல்கின்றன. பழந்தமிழர் சமயமாக வைஷ்ணவமும் இடம் பெற்றிருக்கின்றது. பின்னர் பன்னிரு ஆழ்வார்கள் காலத்தில வைஷ்ணவம் விரிந்து பரந்து மலர்ந்தது.

ஆராய்ச்சிக்கு அதீதமானவன் என நினைந்து பக்தியே ஞானத்தின் சிகரம் என ஐயம் அறக் கடைப்பிடித்துப்

பகவானை அல்லும் பகலும் அனவரதமும் ஆராதிப்பதே வைஷ்ணவத்தினதும் சைவத்தினதும் பரம ரகசியம்.

கண்ணபிரான் சோதியாய்ச் சுடராய் சூழ் ஒளி விளக்காய் நின்று மாயிருள்ஞாலத்தை மறு இன்றி விளங்கச் செய்கின்றான். தோற்றமாய் நின்ற அச்சுடரை 'பயிலும் சுடரொளி மூர்த்தி' என்று ஆழ்வார் பாடுவரர். அந்த ஒளி பிரகாசித்தால் பிறவிகள் தோறும் மண்டிக் கிடக்கும் இருள் மறைந்தே போகும். அந்தச் சுடர்ஒளி மூர்த்தி உலகில் ஒலியாய் ஒளிரும்; வெளியில் விரியும்; திங்களாய்த் தண்ணொளி வீசும்; செஞ்சுடராய்த் தேசு தரும். அந்த ஒளியினால் மழை பெய்யும். மாநிலம் செழிக்கும். அது மட்டுமா? அந்த மாயனை மனத்தினாற் சிந்தித்து வாயினாற் பாடினால் முன்பு உண்டான பிழைகளும் பின்பு அறியாமையால் வருகின்ற பாவங்களும் நெருப்பில் இட்ட பஞ்சுபோல் உரு மாய்ந்து அழிந்து போகும்.

திரு. கி. வா. ஜகந்நாதன் ஐயா அவர்கள் எளியேனைப் போன்ற எத்தனையோ சின்னஞ்சிறு எழுத்தாளர்களைத் தன் அன்புச் சிறகை அகல விரித்து அன்பால் அணைத்து மேலே பறக்க விடுகிறார். அவர் அரவணைப்பில் வாழும், வளரும் இளம் எழுத்தாளர்கள் ஆயிரம்! ஆயிரம்!! இந்நூலுக்குத் திரு. கி. வா ஜ. அளிக்கும் அணிந்துரை ஒரு தனி நூலாகத் தெரியவில்லையா?

'தினகரன்' ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் ஒரு சட்டத்தரணி. இறைவன் சட்டமும் நன்றாகத் தெரிந்தவர். துணை ஆசிரியர் திரு. M. R. சுப்பிரமணியம் நாமகள் செல்வர். கடமையைக் கடவுள் எனப் போற்றுபவர். இருவரும் என் பணிக்கு ஆக்கம் தரும் சீலர்கள்.

திரு. மு. வைத்தியலிங்கம் மூல நூல்களை ஆராய்ந்து முற்றி முதிர்ந்த அறிவாலே தண்டமிழைப் போற்றும் பண்டைய தமிழ்ப் பிரதிநிதி; எளியேன் எழுதுவன நூல் வடிவு எடுக்கும்போது அவர் ஆற்றும் சேவை பெரிது! பெரிது!!

இந்நூலின் கைப்படிகளை எழுதி உதவியவர் செல்வி சாரதா சரவணமுத்து, இந்நூலினை அழகுற அச்சிட்டு உதவுவதில் பரிசு பெற்ற ஸ்ரீ சண்முகநாத அச்சகத்து உரிமையாளர் திரு சி. ச. குமாரசுவாமியும் அச்சகத்து ஊழியர்களும் பெரிதும் கரிசனை காட்டி உழைத்தார்கள்.

சமய நூல்களை வாங்கிப் படிப்போர் அரியர் என்றே சொல்லத் தோன்றுகின்றது. எனினும், எளியேன் எழுதிய நூல்கள் அத்தனையும் எவ்வாறு விற்பனையாயின; விரும்பிப் படிப்போர் ஆயிரம், ஆயிரம் என்று அறிகின்ற போது அது எனக்கு வியப்பாகவே இருக்கின்றது. கலைப் பொருளை வியாபாரக் கண்ணோட்டத்துடன் செய்தால் மாசு படியும்; அதன் பெருமை குன்றிவிடும். பயன் கருதாது செய்தால் அது அற்புதமாக மாறிவிடுகிறது என்ற பேருண்மையை முற்றாக, முழுதாக உணர்கின்றேன். என்னுற் செயல் உண்டோ? எம்மான் முருகேசன் தன்னாலன்றோ தழைக்கின்றேன்!

இந்நூலினைக் கையில் எடுத்தவுடன் காண்கின்ற நடராஜனையும் அம்பிகையையும் அழகு ஒழுக வடித்தவர்கள் சுன்னாகம் திருமகள் அச்சகத்தார்; படம் வரைந்து உதவியவர் திரு V. கனகலிங்கம்.

எல்லோர்க்கும் நன்றி கனிந்த வணக்கம்.


எல்லாம் முருகன் திருவருள்!

17, 55 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை,
ஸ்ரீ லங்கா.

செ. தனபாலசிங்கன்

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| அணிந்துரை | ... | ... | i |
| வாழ்த்து | ... | ... | xix |
| முன்னுரை | ... | ... | xxi |
| போற்றி அருளுக | ... | ... | 1 |
| சக்தியை வியந்தது | ... | ... | 13 |
| பேதித்து வளர்த்து எடுக்கும் பெய்வளை | | ... | 23 |
| மழை பெய்யாமல் இருக்க முடியுமா? | | ... | 38 |
| சிவசக்தி | ... | ... | 49 |
| சக்தி தழைக்கும் சிவம் | ... | ... | 62 |
| அமாவாசையில் பூரண சந்திரன் | | ... | 74 |
| வெற்றிச் சக்தி வீரமகாகாளி | | ... | 89 |
| கோதையின் இலட்சியக் காதல் | | ... | 100 |
| திருப்பாவை | ... | ... | 116 |



திரு. செ. தனபாலசிங்கன், B. A. (Lond.)

உ

# போற்றி அருளுக

அம்மை அப்பன் சிவபிரான் அந்தணனாகி ஆட்கொண்டு, குதிரைச் சேவகனாய் மதுரைப் பெருநன்மாநகர் இருந்து, நரியைக் குதிரை ஆக்கி, பாண்டியனுக்குப் பரிமா விற்று, பாங்காய் மண்சுமந்தருளி, மணிவாசகருக்குத் திருவடிப்பேறு நல்கினான். இத்தனைக்கும் அந்தக் கூத்தப்பெருமான் பெற்ற பரிசு இரண்டே இரண்டு; ஒன்று திருவாசகத் திருமாமறை. மற்றது திருச்சிற்றம்பலக் கோவை. இவற்றைப் பாடும்படி விரும்பி மணிவாசகர் பாடும்போது ஏடும் எழுத்தாணியுங் கொண்டு இறைவனே எழுதினான். ஏட்டகத்து எழுதிப் போற்றி அருளிய திருவாசகம் நமக்கு அழியாப் பேருதியம். யாவர்க்கும் ஊதியம்.

திருவாசகம் தவநூல்; பக்திப் பெருநூல். அது ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும். செம்பொருட் துணிவாம் சைவ சித்தாந்தப் பெருநெறியைப் பேசும்.

*தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி*
*அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே — எல்லை*
*மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவா சகம்என்னும் தேன்.*

அந்தத் தேன் பெருந்துறை புகுந்து, பேரின்பம் பெற்ற மணிவாசகரிடமிருந்து வழிந்தோடிய தேன். அது மனங்கனிய, மலங்கெடுக்கும் மாண்பினை உடையது; இருள் அகற்றி எஞ்ஞான்றும் இன்பம் நல்கும் சிறப்பும் உடையது; ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் பேறும் பெற்றது. இதோ ஒரு பழம்பாடல்:

கற்பாந்த காலம் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்.

## தத்துவக் கருவூலம்

திருவாசகத்துள் திருவெம்பாவை சித்தத்தைச் சிவமாக்கும் இருபது பாடல்களைக் கொண்ட பகுதி. அது, எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க என்று வாழ வழிகாட்டும் தத்துவக் கருவூலம்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய வாதவூரரின் வண்ணத் தமிழ்; கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது, விண்ணுக்கொரு மருந்தை — வேத விழுப்பொருளை — கண்ணுக்கினியானைக் காட்டி நமக்கெல்லாம் நல்லதைச் சொல்லித் தரும். எல்லாம் வல்ல எம்பிரானே திருக்கோவை பாடும்படி ஏடும் எழுத்தாணியும் கொண்டு வந்து, 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்று கேட்டானே! இதைவிடத் திருவெம்பாவையின் சிறப்புக்கு வேறென்ன சான்று வேண்டும்?

அந்தக் காலத்திலே கன்னிப் பெண்கள் நன்மழை பொழிந்து நாடு செழித்தல் வேண்டியும், காலம் எல்லாம் களிப்புடன் வாழ நல்ல காதற்கணவரைப் பெற்றுக் கொள்ள வேண்டியும் அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை பின்னையும் கன்னி என மறை பேசும் ஆனந்த ரூப வல்லியாம் மலைமகளை நோக்கி நோன்பிருப்பார்கள். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம் திருவாதிரையன்று இந்த நோன்பு நிறைவுறும்.

அளவிலாச் சீருடையானாகிய அம்மை அப்பனுடைய திருவருள் நலன் பெற்ற திருவாதவூரடிகள், திருவண்ணாமலைக்கு எழுந்தருளியிருக்கின்றார். மார்கழித் திங்களில் திருவாதிரைக்கு முந்திய நாள்களில், கன்னிப் பெண்கள் நோன்பு மேற்கொண்டு, வைகறையில் ஒருவரை ஒருவர் வீடுதோறுஞ் சென்று துயிலுணர்த்தி எழுப்பிச் சிவபிரான்

திருப்புகழை வாயாரப் பாடிக்கொண்டு நீராடுவதற்குச் செல்வதைப் பார்க்கின்றார். எழுகின்றது திருவெம்பாவை :

*" மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித்*
*திங்கள் தன்னில்*
*ஆதிரை முன்னீ ரைந்தே ஆகிய தினங்கள் தம்மில்*
*மேதகு மனைக டோறும் அழைத்திருள் விடிவ தான*
*போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல்*
*செய்வார்."*

*" அன்னவர் இயல்பு கண்டார் ஆங்கவர் புகன்ற தாக*
*மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசி "*

என்றெல்லாம் திருவாதவூரடிகள் புராணத்திலே திருவம்பலச் சருக்கத்தில், கடவுள்மாமுனிவர் இதனைப் பாடுகிறார். மகளிர் கூற்றாகவே மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் எழுகின்றன. இறைவன் புகழ் பாடிக்கொண்டே பெண்கள் விளையாடியிருக்கிறார்கள்.

*பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய*
*மலைச்செல்வி பிரியாமேனி*
*அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்*
*அமரர்தொழ அமருங்கோயில்*
*தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்*
*இறைவனது தன்மைபாடிக்*
*கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்*
*பாட்டயரும் கழுமலமே.*

என்று ஆளுடையபிள்ளையார் இவ்வழக்கைத் தம் திருப்பாட்டிலே சொல்கின்றார். திருப்பொன்னூசல், திருத்தோணோக்கம், திருவம்மானை முதலிய பகுதிகள் எல்லாம் இவ்வாறு எழுந்தனவேயாகும்.

## திருவெம்பாவையின் உள்ளுறைப்பொருள்

திருவெம்பாவையின் உள்ளுறைப்பொருள் சக்தியை வியந்ததாகும். சக்தி பராசக்தி. பராசக்தியின் பெருமை,

*'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடு'*

என்றும்,

*'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி'*

என்றும்,

*'முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை'*

என்றும்

திருவெம்பாவையில் பலவாருகப் பாராட்டப்பட்டிருக்கின்றது. திருவெம்பாவை, திரு-எம்-பாவை எனப் பிரிந்து பொருள் தரும். திரு - தெய்வத்தன்மை, எம் - உயிர்த்தன்மை, பாவை - வழிபாட்டுக்கு அமைந்த திருவுருத்தன்மை. ஆகவே, தெய்வத்தன்மை வாய்ந்த திருவருள் (பார்வதிதேவி) எம்மை இயைந்தியக்குவதோடு நாம் செய்யும் நோன்பினையும் பாவைத் திருவுருவில் நின்று ஏற்றுப் பயன் தருகின்ருள் என்பது திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருளாகும்.

பரமான்மாவாகிய இறைவனைத் தலைமகனுய்ப் பெற்றுப் பேரின்ப வாழ்க்கையிற் தலைப்படுதற்கு விரும்பும் கன்னிப் பெண்ணுகத் தம்மை நினைந்து பாடுகிருர் மணிவாசகர். இருபது பாடல்களும் இனிதே வருகின்றன. ஆன்ம நாயகனுகிய இறைவனை அடைதற்கு உரிய பக்குவம் முதிர்ந்த உயிர்களைக் கன்னிப் பெண்களாகவும், ஆணவ மல இருளிற் பிணிப்புண்டிருத்தலை உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றல் ஒழியப்பெறும் நிலையைத் துயில் நீத்தெழும் நிலையாகவும், மலபரிபாகம் உடைய உயிர்கள் அஃது இல்லாத உயிர்களை உணர்த்தி, அன்பு நெறிப் படுத்தி, இறை அருளில் தோய்வித்தற்கு அழைத்தலை நீராட அழைத்தலாகவும் அமைத்துக்கொண்டு பாடுகிருர். இவ்வாறு தம்மைத் தலைமகளாகவும், எம்பிரானைத் தலை

மகனாகவும் கொண்டு திருவாசகத்தில் பல திருப்பாட்டுக்கள் பாடியிருக்கின்றார். இம்முறையின் தொடக்கமே திருவெம்பாவை. இதன் பின்வரும் திருஅம்மானை போன்ற பகுதிகளும் இக்குறிப்புக்கொண்டு அருளப்பெற்றன.

## திருவடி வாழ்த்து

திருவெம்பாவை 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' என்று தொடங்குகின்றது. திருவெம்பாவை நிறைவுறும்போது,

> போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
> போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
> போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
> போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
> போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
> போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரீகம்
> போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
> போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

என்று பாடுகின்றார்.

எம்மைப் பாதுகாத்து எப்பொருட்கும் முதலாகிய திருவடிமலர்களை அருள்வாயாக; எம்மைப் பாதுகாத்து எல்லாவற்றுக்கும் முடிபாகிய நின் செவ்விய திருவடிகளை அருள்வாயாக. எவ்வுயிர்களும் தோன்றுதற்கு இடமான நின் திருவடிகள் எம்மைக் காத்தருள்க; எவ்வுயிர்களுக்கும் இம்மை, மறுமை, போகம் அருளும் நின் திருவடிகள் எம்மைக் காத்தருள்க, எவ்வுயிர்களுக்கும் ஒடுக்கத்துக்கு ஏதுவாகிய நின் திருவடிகள் எம்மைக் காத்தருள்க. திருமாலும் பிரமனும் (செருக்கினால்) அறிய இயலாத திருவடிகள் எம்மைக் காத்தருள்க. நாம் உய்தி பெறும் வண்ணம் அடிமை கொண்டு ஆண்டருளும் திருவடிகள் எம்மைக் காத்தருள்க. நாம் நீராடுகின்ற அருளுருவாம் மார்கழி நன்னீர் எம்மைக் காத்தருள்க.

ஆதியும் அந்தமும் இல்லா இறைவன் இன்ன காலத்தில் தோன்றினன், இன்ன காலத்தில் முடிவடைவான் என்பதின்றி அநாதியாய் நித்தியமாய் நிர்மலமாய் அழிவில்லாமல் இருப்பான். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். ஆனல், மற்ற எல்லாவற்றுக்கும் தொடக்கமும் முடிபுமாய் நிற்பான். ஆதிக்கும் அந்தத்திற்கும் இடைப்பட்டன இறைவனது ஐந்தொழில்கள். இந்த ஐந்தொழில்களினுல் உயிரினங்களுக்குக் கன்ம பரிபாகமும், வினை நுகர்ச்சியும், மலபரிபாகமும், முத்தியும் வந்து சேரும். போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் என்றதனுல் படைத்தலையும், போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் என்றதனுல் காத்தலையும், போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள் என்றதனுல் அழித்தலையும், போற்றி மால் நான்முகனும் காணுத புண்டரிகம் எனப் பாடி மறைத்தலையும், போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் என்று பாடி அருளலையும் சொல்லும் திறம் சிந்திக்க வேண்டியது. இங்ஙனம் ஐந்தொழில்களையும் இறைவன் திருவடிகளே செய்கின்றன என்று மாணிக்கவாசகர் சொல்லாமற் சொல்லி வீடுகிருர்.

*சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்*
*முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன*
*மொய்த்திருண்டு*
*பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி*
*அந்திப் பிறைஅணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே.*

எனத் தேவாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளும் இறைவன் திருவடிகள் உயிர்களுக்குப் போகமும், வீடும் அருளும் பேருண்மையைச் சொல்கின்ருர். ஞானபீடம் திருவடி. அந்த மெய்ஞ்ஞான பீடம் வாய்க்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்ருர் அருணகிரிநாதர்.

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்
குஞ்சுத்த ஞானமெனும்
தண்டயம் புண்டரீ கந்தரு வாய்சண்ட
தண்டவெஞ்சூர்
மண்டலம் கொண்டுபண் டண்டரண் டம்கொண்டு
மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட
காவலனே.

திருவடியே என்றும் பொன்றுப் புகலிடம் என்ற கருத்தைத் திருமந்திரத்திலே,

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதிஅது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

என்று திருமூலரும் பாடுவர்.

கருவிலே திருவுடையவர் காரைக்கால் அம்மையார். இறைவன் அம்மையாரை நோக்கி, "அம்மா, நம்பால் வேண்டுவது யாது?" என்று கேட்டபோது, "திருவடியின் கீழ் இருக்கவேண்டும்" என்று வேண்டினர். "மகிழ்ந்து பாடி நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க வேண்டும்" என்பது அவர் வேண்டுகோள்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"

என்று முதற்பாட்டிலேயே அற்புதத் திருவந்தாதியில் சேவடி போற்றும் பேற்றை அம்மையார் சொல்கின்றார். அப்பெருமான் திருவடியைச் சார்ந்தால் காலனை வெல்லலாம்; கடுநரகங்களில் கால்வைக்காமல் தப்பலாம். பிறவிக்கு ஏதுவாகிய சஞ்சித கன்மங்களை வேரோடு அறுக்கலாம் என்று பாடுகிறார் காரைக்கால் அம்மையார்.

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் — கோல
அரனார் அவிர்ந்தழிய வெந்நீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி' என்று முதற் திருப்பாட்டிலேயே மணிவாசகர் திருவடியைப் பாடத் தொடங்குகிறார். இறைவன் திருவடி இறை அருளாகிய சிவசக்தியைக் குறிக்கும். திருவடி வாழ்த்துச் சக்தியையே வாழ்த்தியதாகும். இறைவன் திருவடியை இறையருளாகிய சிவசக்தி என்று சிவஞானபோத மாபாடியமும் கூறுகின்றது.

இறைவனுடைய அருட்செயல்கள் ஐந்தும் சிவசக்தியால் நிகழ்வன. மறைத்தலைச் செய்யும் நிலையிலே சிவசக்தி திரோதாயி எனப் பெயர் பெறும். உயிர்களுக்கு மலபரிபாகத்தை உண்டாக்கிப் பாசநீக்கத்தில் அது அருட் சக்தியாக நின்று உபகரிக்கும். ஆணவ மலப் பிணிப்பில் கட்டுண்டு இருந்த உயிர்களுக்கு உடல், உலகம் முதலிய போகங்களைக் கொடுத்து வினைப்பயனைத் துய்க்குமாறு விடுத்து, இறைவனைக் காட்டாது பொய்யான உடம்பை மெய்யெனவும், நில்லா உலகை நிலையுளதெனவும் கருதச் செய்து இயைந்தியக்கிப் பின் அக் கன்மக் கழிவில் நம்மை வளர்த்தெடுப்பாள் அருட்சக்தி. இதை அருமையாகப் 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய் வளைதன் பாதத் திறம்பாடி ஆடேலோரெம்பாவாய்' என்று மாணிக்க வாசகர் பாடுவது நினைந்து நினைந்து உருகவேண்டிய தொன்றாகும்.

இனையபல பிறவிகளின் இறந்துபிறந் தருளால்
இருவினைகள் புரிந்தருந்தும் இதுசகலம் அகலா
முனம்மருவும் இருபயனும் ஒருகாலத் தருந்த
முந்தநுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையும்எதிர் வினையும்முடி வினைஉதவு பயனால்
நேராக நேராதல் மேவுங் கால்முற்
சினமருவு திரோதாயி கருணை யாகித்
திருந்தியசத் திநிபாதம் திகழும் அன்றே.

என்று சிவப்பிரகாசம் நமக்குச் சொல்வது பேதித்து வளர்த்தெடுப்பதற்கு விளக்கமாக அமைகின்றது. இங்ஙனம் திருவெம்பாவையிலுள்ள அத்தனை பாடல்களை யும் பார்க்கின்றபோது சத்தியை வியந்தமை நன்ருகப் புலனுகும்.

## திருக்கூட்டச் சிறப்பு

பழமை என்று கருதப்படும் பொருள்கள் அத்தனைக் கும் பழமையாய், புதுமை என ஒன்று தோன்றுமாயின் அப்பொருளுக்கும் புதுமையாய் உள்ள பொருள் இறை வன். அவனை,

> வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
> போதக் காட்சிக்கும் காணலன் புதியரிற் புதியன்
> மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
> ஆதிக் காதியாய் உயிர்க்குஉயி ராய்நின்ற அமலன்.

என்று கந்தபுராணம் கசிந்துருகிப் பாடுகின்றது. "பழமை யைப் பெருமை என்று எண்ணுவார்க்கு நீ பழமையிற் பரம்பொருளாகின்ருய். புதுமையை விரும்புவார்க்குப் புதுமையிற் புதுப்பொருளாகி விடுகின்ருய். நின்னை ஆண்டவனுகப் பெற்றமையால் அறிவிற் சிறியேமாயினும் நினக்கு அடிமையாவதில் சிறந்திருக்கின்ருேம். நின் அடிமைப்பேறு பெற்றதன் பயனுக மெய்யடியார்களின் திருவடியையும் வணங்கப் பெற்ருேம். உடல், பொருள், ஆவி மூன்றையும் சிவனடியார்க்கே நாம் உரிமைப்படுத்து கின்ருேம். அவ்வடியார்களே எங்களுக்குக் கணவர் ஆவர். அச்சீரடியார் இடும் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு அடிமையாய்நின்று பணிசெய்வோம் எங்கள் பிரானுகிய நீ எங்களுக்கு இங்ஙனமே அருள்புரிவாயே யானுல் எத்தகைய குறைபாடும் நமக்கு இல்லையே" என்று இறைவன் பெருமையையும் சீரடியார் திருக்கூட்டத் தின் செம்மையையும், அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பேற்றினை யும் கன்னிப் பெண்கள் பாடுகின்ருர்கள்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோ ரெம்பாவாய்.

சிறந்த மெய்யடியாரை வணங்கும் பேறு எல்லோருக்கும் கைவந்து விடாது. அது இறை வணக்கத்தினாலேயே வந்து வாய்க்கும். திருஞானசம்பந்தர் திருக்காளத்தி அப்பனை வணங்குகின்றார். அதன் பயன் கைவரப் பெற்றதுபோல் கண்ணப்பநாயனாரைக் கைதொழுகின்றார். இதனைச் சேக்கிழார்,

"வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண்பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்"

என்று சொல்லிவிட்டு,

உள்ளத்திற் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை
உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போல் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானவார் அமுதம் உண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார்.

என்று பாடும் திறத்தை என்னென்போம்!

திருவெம்பாவையின் இருபதாவது பாடலில் அருளலைச் சொல்லிய மாணிக்கவாசகர், பத்தொன்பதாவது பாடலிலே அடைக்கலத்தின் ஆற்றலைப் பேசுகின்றார்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழம்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்குஒன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள்
சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயிறு எமக்கேலோ
ரெம்பாவாய்.

"எங்கள் பெருமானே, இவ்வுலகத்தில் நின்பால் அன்புடையவரைக் கணவராகப் பெற்று, இல்லறத்து இயைந்து நினக்குத் தொண்டு செய்து நாம் வாழ வேண்டும். எம்முடைய கைகள் நினக்கு அல்லாது வேறு யார்க்கும் எப்பணியும் செய்யாதொழிவனவாகுக. இரவும், பகலும் நின்னை அன்றிப் பிறிதொரு பொருளையும் எம்முடைய கண்கள் காணாது ஒழிக. இவ்வாறே இவ்வுலகத்தில் எங்களுக்கு நீ, அருள் செய்யவேண்டும். நின் தரிசனப் பேறு எய்தி வளமான வாழ்வு வந்தடையுமாயின், கீழ்த்திசையில் தோன்றுகின்ற கதிரவன் வேறு எத்திசையில் தோன்றிடினும் எமக்கு வரக்கடவது யாதொன்றும் இல்லையே" என்று மாணிக்கவாசகர் கன்னிப் பெண்களின் வாயிலாக அடைக்கலம் புகுந்தவரின் அஞ்சாமையைக் காட்டிப் பாடுகிறார்,

வானம் துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனம்ஒன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

என்று அப்பரும் இன்னொரு பாணியிலே இக்கருத்தைப் பாடுகிறார்.

எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க என்ற திருப்பாடல், தன்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அப்பரின் செப்பரிய வாசகத்துக்கு விளக்கமாக அல்லவா அமைகின்றது!

## போற்றி அருளுக

மணிவாசகர் திருவடி ஞானத்தால் ஆண்டவனை அறிதல் வேண்டும் என்ற பெரும் பொருளைத் திருவெம்பாவையிலே பொதிந்திருக்கின்றார். ஞானச் செல்வர் மணிவாசகர் சித்தம் சிவமாகத் திகழ்ந்தவர். கரணம் சிவகரணமேயானவர். எங்கும் சிவமேயாய காட்சியில் திளைத்தவர் அவர் பாடிய திருவெம்பாவை வாழ்வை வளமாக்கும் பெற்றி வாய்ந்தது. இதனை நாடோறும் வீட்டிலும், மார்கழி நோன்பில் திருக்கோவிலிலும் ஓதி வருதல் வேண்டும் அதனால் மழைபொழிந்து, மாநிலம் செழிக்கும். வாழ்வில் சிவனடைக்கலப்பொருளாய் இன்பம் மேவி இனிது வாழலாம்.

மூலமாகியும் முடிவாகியும் எல்லா உயிர்களையும் தோற்றுவித்தும் நுகர்வித்தும் ஒடுக்கியும் மறைத்தும் அருளியும் வரும் திருவடிகள் இம்மையில் அன்பின் ஐந்திணை இன்பமும் மறுமையில் வீட்டின்பமும் அருள்வன. எனவே,

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

என நாமும் அம்மானை பாடி, திருவடிப்பேறாகிய வீட்டினை அளித்தருளும் திருவடிகளை ஏத்துவோம்; போற்றுவோம். போற்றி அருளுக என்று பாடுவோம்; பாடிப் பரவுவோம்.

போற்றி அருளுக என்பதற்கு 'இறைவனே நின்திருவடிப்பேற்றினை அருளுக' என்பது பொருள்.

பிறவியின் பெரும்பயனைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாக அமைந்தது மார்கழி நீர் என்று மணிவாசகர் மார்கழி நீராடலுக்கும் ஏற்றம் தருகிறார்.

# சத்தியை வியந்தது

## தலைக்குறிப்பு

மார்கழிப் பனுவல்களாகிய திருவெம்பாவையும் திருப்பாவையும் செந்தமிழகத்திலே சீர்பெற்றோங்கவேண்டும்.

*அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்*
*தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை*
*உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாம்*
*சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.*

எனப் பாடுகின்ற நிலைக்கு உயர்த்தி விடுகிறது திருவாசகம்.

*வான்கெட்டு மாருதம்மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்*
*தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)*
*ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும் போய்*
*நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.*

என 'நான்' கெட்டநிலைக்கு இட்டுச் செல்கிறது திருவாசகம்.

*நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்*
*சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்*
*குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை எனக்(கு)*
*அறியும் வண்ணம் அருளியவா றுர்பெறுவார் அச்சோவே.*

எனப் பேரருட் திறனை வியக்கச் செய்து சிவமாக்கி விடுகிறது திருவாசகம்!

தெள்ளமுதனைய திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருள் விளங்குமாறு யாரோ பெரியார் ஒருவர் தலைக்குறிப்பு எழுதி இருக்கிறார். திருவெம்பாவைக்குச் சத்தியை வியந்தது என்பது அப்பெரியார் எழுதிய தலைக்குறிப்பாகும்.

## அடியார்க்கு ஓர் இலக்கணம்

இறைபக்தி உண்டாவதற்கு இறைவியின் வழிபாடு முதலில் வேண்டப்படுவதொன்றாகும். 'அருள் அது சத்தியாகும் அரன் தனக்கு' என்று சிவஞான சித்தியார் சிறப்பித்து இறைவனுடைய திருவருள் ஆற்றலை,

*சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மணிதா னாகி*
*ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி*
*வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வரும்சத்தி ஒருத்தி யாகும்*
*எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.*

என்று பாடிச் செல்கின்றது.

மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை, வாமை ஆகிய நவசத்திகள் ஒன்றை ஒன்று பிரேரிக்க, முறையே உலகத்தோற்றமும், நிலையும், நீக்கமும் ஆக்கமுறச் செய்யும் திருவருளின் நலன் திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாட்டுக்களிலும் பேசப்படுகின்றதாக உள்ளுறைப்பொருள் சொல்வார்கள். பக்தியின் முதிர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் சத்தியின் பேருபகாரச் செயல் திருவெம்பாவையில் ஏறுநடை போடுகின்றது. 'பேதித்து வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்' என்று மணிவாசகர் சத்திக்கு ஏற்றம் கொடுக்கிறார்.

திருவாசகப் பெருமாமறையின் தொடக்கத்திலேயே நாதன்தாள்தரும் பேரின்பம்பற்றி வாழ்த்துகிறார் வாதவூரடிகளார். நாதன்தாள் என்பது சிவன்திருவருளாகிய

சத்தி. முத்திஇன்பம் தருவது திருவருட்சத்தி. மணிவாசகர் அழுது அழுது இறைவன் திருவடி தொழுத அன்பினர். அடியவருக்கு இறைவன் திருவடியே நினைவில் ஒன்றி இருக்கும்.

*அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்*
*அடியா ரவராவர் அத்தரருள் உற்றோர்*
*அடிஆர் பவரே அடியவர் ஆமால்*
*அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே.*

எனத் திருமந்திரம் அடியார்க்கு அருமையுற இலக்கணம் இயம்புகின்றது. பிதாவாகிய சிவனார் அத்தர்; இறைவன் திருவடி இன்பத்தை நுகர்பவர் அடி ஆர்பவர். திருவருள் கைவந்தவரே அடியவராவர். எனவே, திருவருள் நலன்பெற்ற திருவாதவூரடிகள் மெய்யாம் அருட் சத்தியைப் பாடுவதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

## சர்வேஸ்வரி

பராசக்தி மேலான பெருமாட்டி; தனித்தலைவி. அவளைச் சர்வேஸ்வரி, பரதேவதா என்றெல்லாம் லலிதா சகஸ்ரநாமம் புகழ்ந்து பாராட்டுகிறது. அன்னை பராசக்திக்கு ஆயிரம் ஆயிரம் திருநாமங்கள் அமைந்திருந்தாலும், எடுத்த எடுப்பிலே ஸ்ரீ மாதா என்றே லலிதா சகஸ்ரநாமம் தொடங்குகின்றது. இதற்கு ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும். ஆம்! குழந்தை தாயிடம் எவ்வளவு சுதந்திரத்துடன் நடந்துகொள்கின்றது. தாயிடத்தே குழந்தைக்கு இருக்கும் பூரண சுதந்திரம் வேறு எங்குமே கிடையாது அது போலே, தெய்வத்தையுமே தாயாகக் கருதிப் பக்தன் பூரண சுதந்திரத்துடன் கொண்டாடுகிறான். குழந்தை கருவிடை வளர்ந்து உலகிடை வருகிறபோது முதலில் தாயையே அறிகின்றது. தாயை இவள் என்று சுட்டிக் காட்டாமலே சேய் அறிந்து விடுகிறது. 'நான் வணங்கும் தெய்வம் என்தாய் பராசக்தி' என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்வார்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

தாயான தத்துவன் என்று இறைவனைப் பாடுகிறார் மணிவாசகர்.

பிரபஞ்சம் வேறு, தாயான பராசக்தி வேறு அல்லள். பராசக்தியே பிரபஞ்சமாக இலங்கிக் கொண்டு இருக்கிறாள். எல்லாத் தொழிலையும் செய்யும் மகாசக்தி அம்பிகை. பஞ்சகிருத்தியங்களும் அவள் திருவருளாலேயே நடைபெறுகின்றன. அவள் வேறு வேறு உருக்கொண்டு ஒவ்வொரு தொழிலையும் நடத்துகிறாள். சிருஷ்டிகர்த்ரீ, விஷ்ணுரூபிணி, சாங்கரீ என்றெல்லாம் லலிதா சகஸ்ர நாமம் அவளைப் பாராட்டுகின்றது. அவள் சர்வேஸ்வரி; எல்லார்க்கும் ஈஸ்வரியாக விளங்கும் பிராட்டி அவள் உயிர்கள் அத்தனையையும் ஆண்டு வருகிறாள். அவள் அன்றி உலகம் இல்லை. அவளுடைய ஆதிக்கம் செல்லாத இடமும் இல்லை.

## காளிதாசனின் மங்கள சுலோகம்

உஷ்ணம் அக்கினிக்கு அபின்னமானது; வெண்மை பாலுக்கு அபின்னமானது அது போலே பிரகிருதி புருஷனுக்கு அபின்னமானது. ஜகத்தும் ஜீவனும் பரம்பொருளின் பிரகிருதிகள் ஜகத்தாக இருப்பது அபரபிரகிருதி; ஜீவர்களாக இருப்பது பரபிரகிருதி பிரகிருதி சக்தி; புருஷன் சிவன் இதனையே அர்த்தநாரீசுவர வடிவம் காட்டித் தருகின்றது. அன்னை பராசக்தியே சக்தியாய்ச் சிவமாய்க் காட்சி அளிக்கின்றாள்.

சக்தியும், சிவமும் இணைபிரியாமல் இருக்கிறார்கள். நாமம் என்பது பெயர். ரூபம் என்பது உருவம். பெயரைச் சொன்னால் உருவம் நினைவுக்கு வருகின்றது. வாக்கும் அர்த்தமும் எவ்வாறு இணைபிரியாமல் இருக்கின்றனவோ அவ்வாறே அம்பாளும் பரமேஸ்வரனும் இணைபிரியாமல் இருக்கின்றார்கள். அர்த்தநாரீஸ்வர கோலத்தில் இருவரும் வீற்றிருக்கும் அலங்காரத்தை இரகுவம்ச மங்கள சுலோகத்திலே காளிதாச மகாகவி பாடுகிறான்.

*வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ வாகர்த்தப்ரதிபத்தயே*
*ஜகத: பிதரௌ வந்தே பார்வதீபரமேஸ்வரௌ.*

ஸம்ப்ருக்தௌ என்றால் இணைந்திருப்பது என்பது பொருள். 'வாக்கு, அதன் பொருள் ஆகிய இரண்டும் எவ்வாறு இணைபிரியாமல் இருக்கின்றனவோ அவ்வாறே உலகத்துக்கு மாதாபிதாவாக — அர்த்தநாரீஸ்வர கோலத்தில் இருக்கும் பார்வதி பரமேஸ்வரனை நான் நமஸ்காரம் பண்ணுகிறேன்' என்பது இந்தச் சுலோகத்தின் பொருள்.

நடராசப் பெருமானுடன் எழுந்தருளி இருக்கும் அம்பிகை சிவகாமவல்லியைப் பாடுகிறார் அபிராமிப்பட்டர். சொல்லும் பொருளும் இணைந்தது போலே பிரிவின்றி இணைந்திருக்கும் அற்புதக் கோலத்தை — அப்பெருமாட்டி தரும் ஐசுவரியங்களைச் சொல்லால் வடிக்கிறார் பட்டர்.

**சொல்லும் பொருளும் என நடம் ஆடும் துணைவருடன்**
**புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்**
**செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.**

## பாரதியின் பாடல்

சராசரங்களாக இருக்கின்ற அத்தனைக்கும் தாயாகித் தந்தையாகித் தாங்கும் பராசக்தியை — சிவசக்தியைச் சர்வமயீ என்று லலிதா சகஸ்ரநாமம் பாடுகிறது. இதைப் பாட்டுக்கு ஒருபுலவன் பாரதி பாடுகிறான்:

"இயற்கையென்று உனை உரைப்பார் — சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள் என்றிசைப்பார்
செயற்கையின் சக்தியென்பார் — உயிர்த்
தீயென்பர் அறிவென்பர் ஈசனென்பர்
வியப்புறு தாய்நினக்கே — இங்கு
வேள்விசெய் திடும்எங்கள் 'ஓம்'என்னும்
நயப்படு மதுவுண்டே — சிவ
நாட்டியம் காட்டிநல் லருள்புரிவாய்."

"ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் — அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்"

"மூலப் பழம்பொருளின் நாட்டம் — இந்த
மூன்று புவியும்அதன் ஆட்டம்."

## மகாசக்தி சொரூபிணி

அவள் சடசக்தியாய் இருந்து அகில உலகத்தையும் இயக்கி வருகின்றாள். பௌதிக விஞ்ஞானம் வளர்ந்து வரும் வேகத்தில் இன்றுவரை படைத்த இயந்திரங் களுக்கு அளவே இல்லை. இனிப் படைக்க இருக்கும் இயந்திரங்களின் எண்ணிக்கைக்கும் எல்லை காண முடி யாது. ஆனால், ஒன்றினை நாம் மறந்துவிடக்கூடாது. இத்தனை இயந்திரங்களாகவும் வடிவெடுத்திருப்பவள் பரா சக்தியே! அம்பிகை சடசக்தியாக இருந்து இத்தனை இயந்திரங்களையும் இயக்கி வருகின்றாள். அம்மட்டுமா? அவள் சித்சக்தியாக இருந்து சரீரங்கள் அத்தனையையும் இயக்குகின்றாள். அவள் இயக்குகின்ற சரீரங்களாகிய இயந்திரங்களுக்கோ எண்ணிக்கை இல்லை. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து எடுக் கும் சரீரம் அத்தனையும் இயந்திரங்களேயாகும். இவை எல்லாவற்றையுமே இயக்கிவருகிறாள் பராசக்தி. பௌதிக

விஞ்ஞானம் ஆக்கித்தரும் இயந்திரங்கள் அத்தனையையும் மானுட இயந்திரமே நிர்மாணித்திருக்கின்றது. இந்த மானுட இயந்திரத்தை இயக்குகின்றாள் அம்பிகை! எனவே, அவளுக்குக் கோடி கோடி நமஸ்காரம் சொல்லாமல் இருக்க முடியுமா? சர்வ யந்த்ர ஆத்மிகா என்று தானே லலிதா சகஸ்ரநாமம் பாடுகிறது. அம்பிகை - மகா சக்தி சொரூபிணி எல்லாவித சக்திகளாகவும் இயங்குகிறாள். சர்வசக்திமயீ என்பதும் லலிதா சகஸ்ரநாமம். சுருக்கமாகச் சொன்னால், அன்னை மும்மூர்த்திகளுக்கு உரிய சக்தியாகவும், கணக்கற்ற தேவர்களுக்கு உரிய சக்தியாகவும், மானுடர்களுக்கு உரிய சக்தியாகவும், விலங்கு பறவைகளுக்கு உரிய சக்தியாகவும் இருந்து எல்லாவற்றையும் இயக்கிக்கொண்டு இருக்கிறாள். அன்னை பராசக்தியின் சக்தியையும் மகாரூபத்தையும் பற்றி அறிந்துகொள்ள நம் அறிவு இடம் தராது. நம் அறிவுக்கு எட்டுகிற அளவுக்கு நாமரூபம் கொடுத்துப் பேசுகிறோம். அறிவுக்கும் இந்திரியங்களுக்கும் எட்டாதன பல உண்டு என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

*ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்*
*சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி*
*மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்*
*சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.*

என்பது சம்பந்தக் குழந்தையின் பொருள் பொதிந்த அறிவுரை.

## எல்லாம் கடந்த நிலை

நம்மால் அறியப்படும் பொருள்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐந்தும், பொறிகளின் வாயிலாக நம் உள்ளத்தில் வந்து பதியும் ஐம்பொருள்களைப் பற்றிய நினைவுகளும் ஆகும். கடவுள் இவையெல்லாவற்றையும் கடந்தவர். கடத்தல் என்பது இடத்தைக் கடப்பது, காலத்தைக் கடப்பது, பொருள்களின் தன்மையைக் கடப்பது என்பதாகும். அறியப்பட்ட எந்தப்

பொருள்களின் எல்லையிலும் அல்லது எந்த இடத்தின் எல்லையிலும் கடவுளை அடக்கிவிட முடியாது.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

என்று இடம் கடந்த நிலையைச் சிவபுராணம் பாடுகிறது.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே

என்ற திருவெம்பாவை இறைவன் காலம் கடந்தவன் என்பதைக் காட்டுகிறது பொருள்களின் தன்மையைக் கடந்தவன் என்பது, எவ்வெப் பொருள்களின் இயல்புகளிலும் தம் இயல்பு அடங்காமல் எல்லாவற்றின் இயல்புகளையும் முற்றும் கடந்து நிற்றல் ஆகும்.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தமமையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ.

என்ற சம்பந்தர் தேவாரம் இறைவன் இயல்புகளைச் சொல்லமுடியாது என்பதைச் சொல்லிவிடுகின்றது.

ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகு எங்குமாய் நின்ற பராசக்தி ஈன்ருளுமாய் எந்தையுமாய் உடன் தோன்றினராய் உதவுவாள். தாயாய் முலையைத் தருவானே மணிவாசகர் பாடும் திறம் நினைந்து உருக வேண்டியதொன்ருகும்.

தாயாய் முலையைத் தருவானே
 தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனே
 நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன்
 தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
 ஆண்டாய் நான்தான் வேண்டாவோ.

## சிவசக்தியின் தன்மை

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்.

எனப் திருமந்திரத்தில் சிவசக்தியின் தன்மை பேசப் படுகின்றது மனவாக்குக்கு எட்டாததும், மலபந்தம் இல்லாததும், பேரானந்தம் ஆனதும் ஆகிய தமது ஒப்பற்ற நிலையை மன்னுயிர்கள் யாவும் பொருந்தும்படி அருளுகின்ற சக்தியின் வேறுகாதவர் எமது இறைவராகிய சிவபிரான் என்பது இதன் பொருள்.

சிவத்தின் வேறுகாத சிவசக்தியின் தொழிலினுல் அறிவாகிய சிவத்தின் நிலைமையை உயிர்கள் அடையும்; மலத்தைக் கெடுப்பது சிவசக்தி. தொழில் வேறுபாட்டினுல் சிவசக்திக்குப் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானுசக்தி, கிரியாசக்தி எனப் பல பெயர்கள் உண்டு. இவற்றுட் பராசக்தி அருளலைச் செய்யும். ஆதிசக்தி ஆன்மாக்களின் மலம் பக்குவப்படுவதற்காக ஆரணி, ரோதயித்திரி, ஜநநீ என்னும் சக்திகளைக் கொண்டு ஏனைய நான்கு தொழில்களையும் செய்விக்கும். இந்த ஐந்து தொழில்களையும் நியமித்தும் அறிந்தும் செய்தும் அமர்கின்ற சக்திகள் முறையே இச்சாசக்தி என்றும், ஞானசக்தி என்றும், கிரியாசக்தி என்றும் பெயர் பெறும்.

இறைவன் சுடராகவும், சோதியாகவும் இருந்து மூல மாகிய மும்மலம் அறுக்கும் பேருண்மையைக் கீர்த்தித் திருவகவல் 'மூலமாகிய மும்மலம் அறுக்கும் தூயமேனிச் சுடர்விடு சோதி' எனப் பாராட்டுகிறது. சுடர் சத்தி; சோதி சிவம்.

*சோதியே சுடரே சூழொளி விளக்கே*
*சுரிகுழற் பணைமுலை மடந்தை*
*பாதியே பரனே பால்கொள்வெண் நீற்றாய்*
*பங்கயத் தயனும்மால் அறியா*
*நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்*
*நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்*
*ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்*
*அதெந்துவே என்றரு ளாயே.*

என்ற திருவாசகம் சோதியையும் சுடரையும் பாடிப் பங்கயத்து அயனும் மாலும் அறியா நீதியே என்று எழுப்பும் குரல் நெஞ்சை அள்ளுகிறது.

சத்தியை வியந்தது சிவபிரானின் திருவருளாற்றலை வியந்தமையாகும். திருவெம்பாவைக்குச் சத்தியை வியந்தது எனப் பொருள் எழுதிய தொன்மைச் சான்றோர்க்குச் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி ஆயிரம் ஆயிரம் பல்லாயிரம் வணக்கஞ் சொல்லாமல் இருக்க முடியுமா என்ன?

# பேதித்து வளர்த்து எடுக்கும் பெய்வளை

## மந்திரியாம் தலைமைப் பதவி

மாணிக்கவாசகப் பெருமான் திருவாதவூரிலே, அமாத்திய அந்தணர் குலத்திலே தோன்றி அருள் கின்றார். ஈன்றோர் இட்டபெயர் வாதவூரர். வயது பதினாறு நிரம்பு முன்னரே இறைவன் திருவருளால் எண்ணெண் கலைகளிலும் பெரும் பாண்டித்தியம் அடை கிறார். தவமணமும் திருநீற்றின் தன்மணமும் தவறாத சிவமணமும் பெருகக் கல்வி வளர்கின்றது. கவிபாடி அருளும் பெரும் தகைமையும் ஓங்கி வளர்கின்றது. திரு வாதவூரடிகளுடைய நற்குண நற்செய்கைகளையெல்லாம் மன்னன் அரிமர்த்தன பாண்டியன் அறிகிறான். வாதவூரருக்குச் செங்கோலை நடத்தும் செழும் தலைமைப் பதவியையே கொடுத்துவிடுகிறான். தென்னவன் பிரம ராயன் என்ற சிறந்த நாமத்தையும் மன்னவர் மதிக்க நல்குகின்றான் பாண்டியன். இந்திர செல்வம்போல் இயைந்துள இன்பம் எல்லாம் எய்தி வாதவூரர் வாழ்ந்தா லும் அவர் உள்ளத்தில் ஞானவேட்கை தீவிரமாக வளர் கின்றது.

*தீத்திற வினையினாலே சிறைப்படும் உயிரை எல்லாம்*
*பார்த்தனர் உலக வாழ்வில் பயனிலை என்று தேர்ந்து*
*கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகு மாபோல்*
*நீத்தனர் மனத்தின் முன்போல் நிகழ்த்தினர் வழுதி நீதி.*

கூத்தாடிகளது உண்மைத் தன்மை வேறு, கோலம் வேறு ஆகுமாபோல் தம் மனத்தினின்றும் இப்பிரபஞ்சப் பற்றை நீக்கி விடுகிறார். இருந்தும், பாண்டியனது இராச நீதியை முன்போலவே நடாத்தி வருகிறார்.

குதிரை காப்போர் நல்ல குதிரைகள் வாங்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறார்கள். மன்னனும் இசை வைத் தெரிவித்து, வாதவூரரையே குதிரை வாங்கி வருக என்று வேண்டுகிறான். நாற்பத்தொன்பது கோடி பொன் கொடுக்கிறான். அடிகளும் ஏவலர் புடைசூழப் புறப்படு கிறார். திருப்பெருந்துறைக்கு வருகிறார்.

## திருப்பெருந்துறைச் சருக்கம்

*பழமறை முழுதுணர் அந்தணர் பலர்தொழ*
*நடமுயல் கின்றவர்*
*மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரி மகிழ்ந்திட*
*விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலின்*
*அழகுறு தபனிய மண்டபம் அதனிடை*
*அருள்கொ டிருந்தனர்.*

ஆன்மாக்களது தியானதிகட்குத் தாம் அகப்படுதல் வேண்டும் என்ற பெருங்கருணையினால் சக்திகாரியமாகிய உருவத்திருமேனி கொண்டு, ஸ்ரீகண்ட சரீரியாய் கைலை யில் வீற்றிருந்த பெருமான் தொண்டர் புடைசூழ மெய்க் குரவனார் திருக்கோலத்துடன் குருந்தமர நீழலடிக்கு வருகி றார். அருள் பெருகு திருவாசகம் பாடி அருளும் திரு வாதவூரடிகளது பாசக்கட்டறும் காலவரையறையை எதிர் நோக்கி அங்கே இருந்து அருளுகிறார். இன்னல் உடலுடன் இனிப்புவியில் வாரா மன்னவராம் திருவாதவூரடிகள் மெய்க்குரவனாரைக் காண்கிறார். குருலக்ஷணம் விளங் கும் அநாதி சைவராகிய சிவபிரானுடைய ஞானதேசிகத் திருமேனி பேரொளி செய்வதைத் தரிசிக்கிறார். "ஐயா, தங்கள் செங்கை மீதிருக்கும் திருமுறை யாது?" என்று கேட்கின்றார். "பொய்ம்மை இலாச் சிவஞானபோதம்" என் கிறார் பெருமான். "சிவம் ஏது; ஞானம் ஏது; இங்கு இலங்கியிடும் போதம் ஏது?" என்று வினவுகிறார் வாத வூரடிகள். சிவம் ஒன்று (நித்த முத்த சுத்த சித்தாகிய ஒரு வஸ்து சிவம்) அதனைத் தேர்தல் ஞானம் (அவ் வஸ்துவைச் சந்தேக விபரீதக் காட்சிகள் இன்றி அதன் அருள் வழிப்பட்டு நின்று உள்ளவாறு அறிதல் ஞானம்).

தேர்ந்த அதனைத் தெளிதல் போதம். (ஆகம அளவையில் வைத்து அறிந்த அதனை அநுபூதி நிலையில் வைத்து நிச்சயம் செய்தல் போதம்).

உத்தமர் இன்னவாறு உரைத்தலும், சத்திநிபாதம் எய்தும் தன்மையராம் திருவாதவூரடிகள் தன்னை ஆட்கொள்ளவே மன்றுள் ஆடும் ஐயன் இங்கு இத்திருமேனி கொண்டான் என்றே எண்ணுகிறார் ''என்னை இன்று அடிமை கொள்வாய்; எம் உயிர்க்கு இறைவா'' என்று முன்னுற வணங்கி நிற்கிறார். முகம் எலாம் கண்ணீர் பெருகுகின்றது. தவப்பெரு வடிவம் கொண்ட பரமாச்சாரியர் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உபதேசித்தலாகிய வாசிக தீக்ஷையை முதலிலே செய்தருளுகின்றார். தீவிரதர பக்குவம் பொருந்திய அடிகளது சிரசிலே ஞானசக்தி, கிரியா சக்தி ஆகிய இரண்டு திருவடிகளையும் சூட்டி, திருவடி தீக்ஷையையும் செய்கின்றார். திருவாதவூரடிகள் சிவானந்தக் களிகூர்ந்து திருவடி ஞானத்தோடு எழுகின்றார். ''ஐயனே, எனை ஆண்டருள் புரியும் ஆதியே'' என்று அழுகின்றார். வேதநாதர் சாத்திர தீக்ஷையையும் செய்து அருளுகின்றார்; ''திருந்திய பொருள் எல்லாம் திருப்பணிக்கு அளியுங்கள்; மேலாம் அருந்தவர்க்கு உதவுங்கள்; அலந்தவர்க்கு அருளுங்கள்'' என்கின்றார். அம்பரன் அளித்த ஞான மருந்தினை அருந்திப் பாச வெம்பிணி அகற்றும் வாதவூரராம் வித்தகர் முத்தராகிறார்.

எல்லாவற்றையும் அறிகின்றான் பாண்டியன் குறைவிலா ஆடை நீத்துக் கோவணம் உடுத்துச் சென்னி நறைமயிர் விரித்து நீற்றை மெய்யெலாம் நயந்துபூசிய வாதவூரரின் திருக்கோலத்தை மட்டும் அவனால் அறிய முடியவில்லை.

*தென்னவன் எழுதும் ஓலை தென்னவன் பிரமராயன்*
*என்னும்நம் அமைச்சர் காண்க எல்லையில்*
*தனங்கொண் டேகிக்*
*கொன்னுறுபரிகொளாமற் கோவணம் கொண்டீர் ஈது*
*மன்னர்தங் கருமம் செய்வார் வண்மைஎன்று*
*உவகை உற்றேம்.*

'அந்தகன் எழுதும் ஓலை கொண்டு அவன் தூதர் தாமும் வந்து எமை அணுகமாட்டார். மன்னவன் ஓலை என்ன செய்யும்' என்று நெஞ்சில் உரம் ஏற நிற்கின்றார் வாதவூரடிகள். மாயிரு ஞாலம் காக்கும் மன்னவன் எழுதும் ஓலைப்பாயிரம் இது கேள் என்று பரமாசாரியரின் திருவடிகளை வணங்கி விண்ணப்பிக்கிறார். "நாடெலாம் மதிக்க நாமே நற்பரித்திரள் கொண்டேகி ஆவணித் திங்கள் மூலம் என்னும் அத்தினத்தில் தென்னவற்கு அளித்து மீள்வோம்; கவலை வேண்டாம்" என்று தேற்றுகிறார் பரமாசாரியர்.

மதுரைக்கு வருகிறார்; மன்னனுக்கு மனமிலா வணக்கஞ் செய்கிறார் வாதவூரர் நிகழ்ந்ததைக் கேட்கிறான் மன்னன். "நீதரு நிதிகொண்டேகி குலப்பரி விலைக்குக் கொண்டோம். ஆவணியாம் திங்கள் மூல நற்தினத்தில் இங்கு அவை எய்தும்" என விடை தருகிறார். மன்னன் மகிழ்ச்சி எய்துகிறான். திருப்பெருந்துறையில் குதிரைகள் இருக்கின்றனவா எனப் பார்த்துவரத் தூதர் செல்கிறார்கள். பெருந்துறை என்னும் ஊரும் பிற உள பதியும் தேடிக் குதிரைகளைக் காணாது உள்ளதை உள்ளவாறே சொல்கிறார்கள் தூதுவர்கள். "தாங்கு அரும் தண்டம் செய்து, தனத்தை எல்லாம் வாங்குமின்" என மன்னன் தண்டலாளருக்கு ஆணை இடுகிறான் தண்டலாளரும் வாதவூரரைச் சிறைச்சாலையில் அடைக்கிறார்கள். நீள் பெரும் புகழின் நிற்பாரை எறிவெயிலில் நிற்க விடுகிறார்கள். "நாயேன் இடும்பை உணர்ந்திலையோ? பரிகள் ஈதல் நங்கடனாகும் என்று நவின்ற சொல் பொய்ம்மையாமோ? நின் அடியானை வெயிலில் நிறுத்தினர் என்று உலகம் அறிந்தால் நின்புகழுக்கு அது ஏற்றமாமோ?" என்றெல்லாம் கதறுகிறார் வாதவூரர்.

## நரிகள் பரிகள் ஆதல்

இறைவன் திருவருள் பெருகுகின்றது. நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியன்பால் ஒப்புவிக்கிறான் இறைவன். பாண்டியன் மகிழ்ந்து வாதவூரரை வணங்கிச் சிறையினின்

றும் விடுவிக்கிருன். இரவில் பரிகள் நரிகளாக மாறுகின்றன. எங்கும் ஓரே நரிக்கூட்டம், நரியின் ஊளேயே அங்கும் இங்கும் எங்கும் கேட்கிறது.

*கரியின் ஓசையும் பல்இய ஓசையும் கடுந்தேர்ப்*
*பரியின் ஓசையும் இன்றமிழ் ஓசையும் பாணர்*
*வரியின் ஓசையும் நிரம்பிய மணிநகர் எங்கும்*
*நரியின் ஓசையாய்க் கிடந்தது விழித்தது நகரம்.*

குதிரைப் பந்தியில் முன்பு இருந்த குதிரைகளேயும் கொன்று, ஊரையும் அல்லற்படுத்தி ஓடி மறைகின்றன நரிகள். மன்னன் மனம் அடங்காச் சினம் கொள்கின்ருன்; ‘வெயிலில் நிறுத்தி நம்பால் கொண்டுள தனம் எல்லாம் குறைவு அற வாங்குங்கள்'' என ஆணே இடுகிருன். தண்டம் புரிவோரும் தம்வேலேயைச் செய்கிருர்கள்.

*தொல்லேயோர் இருவர் தேடும் சோதியே*
*யாது செய்வேன்*
*தில்லேயோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்*
*இல்லேயோ கருணே நின்பால் இன்றெனே அடிமை*
*கொண்டாய்*
*அல்லேயோ தமியேன் இன்னல் அறிதியோ*
*அறிந்திலாயோ.*

எனப் புலம்புகிருர் வாதவூரடிகள்.

## மண்சுமந்து புண்சுமத்தல்

திருவாதவூரடிகள் படும் துன்பத்தைத் திருவுளத்து அடைத்து, கங்கையைப் பெருக்கெடுத்து ஓடப் பணிக்கிருர் இறைவன். வைகை ஆறு பெருகுகிறது. மதுரை மாநகர் அழியுமாபோலே நதி குதிகொண்டு பெருகிப் பரவுகின்றது வெள்ளம். நகரில் உள்ளவர்கள் அல்லோல கல்லோலமாகித் தடுமாறுகிருர்கள். செய்வதறியாது திகைக்கிருன் பாண்டியன். ‘‘அர்த்தநாரீசுவரப் பெருமான் சொக்கநாத சுவாமிக்குச் செய்யும் நித்திய பூசைக்குக் குறை ஏதும் நேர்ந்ததா? நீதியாம் தவத்தின் மிக்க

பெரியோர்கள் மனம் புழுங்க நாம் கொடுமை செய்த துண்டா? அமைச்சர்களே, காரணம் யாது சொல்லுங் கள்" என வினவுகிறான்.

ஆதியாம் கடவுள் எந்தை ஆலவாய் அமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த
துண்டோ
நீதியாம் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க
மண்மேல்
தீதுயாம் செய்த துண்டோ செப்புமின் அமைச்சர்
என்றான்.

அருட்செல்வர் திருவாதவூரடிகளை அவர்படும் துன் பத்தினின்றும் விலக்கினால் வெள்ளம் மதுரையை அழிக் காது என்று மந்திரிகள் சொல்கிறார்கள். முகம்மலர அகம் மலரத் திருவாதவூரடிகளைத் தம் முன் வருவிக்கின்றான் பாண்டியன்.

பாம்பணி செய்ய வேணிப் பரம்பரன் அடியார் கையில்
ஆம்பொருள் நமதே யானால் அறம்பிறர்க் காவ
துண்டோ
தேம்படும் அலங்கல் மார்பிர் செயலிதற்கு உமது மேனி
சாம்பிய தவமே யான் செய் தண்டமே தகவி லாமை.

வைகை நீர் மதுரையைக் கவளீகரியாதிருக்கும் பொருட்டுத் தம்மை ஆண்டு அடிமை கொண்டருளிய திரு வடிகளைத் தியானிக்கிறார் வாதவூரடிகள் வைகைக் கரை யினை அடைக்க வேண்டும்; கடுகி வருக என்று பறை அறைவிக்கிறான் மன்னவன். மதுரையுள்ளார் திரண்டு வருகிறார்கள். எல்லோரும் அணை கட்டத் தொடங்குகி றார்கள்.

வந்தி என்பாள் நரைமூதாட்டி; சீருடைத் தவத்தின் மிக்காள். அவள் செம்மனச் செல்வி என்னும் பேருடை யாள்; பிட்டு விற்றுச் சீவனம் செய்வாள். கரை அடைக்க யாரும் இல்லாதலால் கவலை மேலிடக் கண்ணீர் வடிக்கி றாள். சொக்கநாயகனை நினைத்துப் பிரார்த்திக்கிறாள்.

"தாய் இல்லை; தந்தை இல்லை, தமரும் இல்லை. சிந்தையில் வெந்துயர் தீர நீ அருளாதொழியின் உயிர் நீப்பேன்; இன்று எனக்கு உறுதியாகி யான் இடும் பிட்டு வாங்கி வன்றிறற் கூலி ஆளாய் வைகையை அடைப்பார் யாரும் இல்லை" என்றெல்லாம் கதறி அழுகின்றாள்.

'உன்றனுக்கு அபயம்" என்று உரைக்கும் வந்திக்குக் கூலி ஆளாகும்படி திருவுளம் கொள்கின்றார் இறைவன். வஸ்திரமும் கந்தை வஸ்திரமாகப் பெற்று, மண் சுமக்கும் கூடையைச் சிரமேற்கொண்டு. மண்வெட்டியைத் தோள்மேற்கொண்டு பெரும்பசி உடையார் போல் வேண்டிய வடிவங் கொள்ளும் விமலன் வீதியிலே வருகின்றார். வந்தியும் கூலியாளரை விரைந்து சென்று சமீபிக்கிறாள். 'மைந்த நீ எனக்கு இங்கு ஆளாய் வருக' என்று அழைக்கிறாள். முன்னர்க் கூலி தந்தால் வருவேன் என்கிறார் இறைவன். இந்த அரிய பிட்டை உனக்கு முற்கூலியாகத் தருகிறேன். அன்றேல் இப்பிட்டை விற்று அந்திப் பொழுதில் கூலியைக் கைப்பொருளாகத் தருவேன். "பெரும்பசி உடையேன் அன்னே, இனிய பிட்டு தருவாயானால் நின்பாகம் முழுவதையும் நானே வரம்பு உயர்த்திக் கட்டுவேன்" உதிர்ந்த பிட்டைக் கைகளால் அள்ளி, "மகனே. இதனைக் கொள்வாய்" என்று கொடுக்கிறாள் வந்தி. பிட்டினை அருந்தி, "மாற்றரும் பசியை அன்னே மாற்றினை. இனிப்போய் வைகை ஆற்றினை அடைப்பேன்" என்கிறார் இறைவன். பிட்டு நன்று நன்று என்று நிறைய வாங்கி உண்கிறார். கரைக்குச் சென்று அம்மையின் பங்கை அடைக்க ஆரம்பிக்கிறார். பிட்டு நன்று நன்று என்று கூறித் தலை அசைக்கிறார். சிரசில் கவிழ்த்த கூடையுடன் கூத்தாடுகிறார். வெட்டி மண் குவிக்கிறார். விரைந்தோடி மணற்குன்றைக் கடக்கிறார். வந்தியும் அவர் செய்கையைப் பார்த்து, வழுதி தூதுவர் காண்பரேல் உறுகண் செய்வார் என்று வருந்துகிறாள். "பயப்படாதே, அம்மா" என்று தேற்றுகிறார் கூலியாள். மெய் இளைத்தவர் போலே நடித்துப் பள்ளி கொள்கின்றார். ஆங்கு அவர் துயிலும்போது அரசனும் மந்திரிகளும் வருகிறார்

கள். "யாவரும் கரையினை நன்றே அடைத்திருக்கிறார்கள். ஆனால், இப்பகுதி மட்டும் அடைக்கப்படாதிருப்பதன் காரணம் யாது? இது யாருக்கு வகுத்துவிடப்பட்ட பங்கு?" என வினவுகிறார்கள் "வந்தி என்னும் வயோதிகப் பெண்ணுக்கு இப்பகுதி உரியது கூலியாளாய் ஒரு காளை வேலை செய்கிறான் அவன் மண்ணை வெட்டுவான், சிரமிசை எடுத்து மீள்வான் அங்கும் இங்கும் மண்ணைச் சிந்துவான், சிரிப்பான். பாடுவான், கூத்தாடுவான், பைய ஒரு கூடை மண்ணைப் போடுவான், ஓடுவான், ஓடித் திரும்புவான். ஒரு கை மண் கரையில் ஏறப் போடுவான். போ என்றால் வருவான். வா என்னில் போவான். பிட்டினை நுகர்வான், நன்று நன்று எனக் கை கொட்டிச் சிரிப்பான். அரசர் குடியிற் பிறந்த செல்லப்பிள்ளை போல் விளையாடுவான். இவ்வாறெல்லாம் வேடிக்கையாக உலாவுகின்ற அந்தக் காளை இப்போது கொன்றை மர நிழலிலே நித்திரை செய்கின்றான். கூலியாளாகிய உனக்கு இவை நன்மை அல்ல என்று சொன்னாலும் அவன் பொருட்படுத்துகின்றிலன். அவனை இதோ பாருங்கள்" என அயல் நின்றோர் சுட்டிக்காட்டுகிறார்கள். அவனை இங்கே கொணர்மின் என ஆணை பிறக்கிறது. ஞான யோகமாகிய ஆனந்த நித்திரை செய்தலை நீக்கிக் கண்களை விழிக்கிறார் கண்ணுதற் கடவுள்.

பாண்டியன் சினம் மூண்டு தன் கையில் இருந்த பொற்பிரம்பினால் அடிக்கிறான். அந்தக் கணத்திலே அங்குள்ளவர்கள் எல்லோரும் திடுக்கிட இறைவன் மறைகின்றான்.

பாண்டியன் அடித்த அடி பாண்டியன் முதுகிலே பட்டது. அவன் மனைவிமார் உடம்பிலே பட்டது. அமைச்சர் மேற் பட்டது. சேனை மேல் பட்டது. பிரமா விஷ்ணுவின் மேல் பட்டது. சனகர் முதலிய துறவிகள் மேல் பட்டது. சூரிய சந்திரன் மீது பட்டது இந்திரன் மீது பட்டது தேவர்கள் மேல் பட்டது. பூமி மேலும் சமுத்திரத்தின் மேலும் மரங்கள் மேலும் பட்டது. கருவில் இருந்த

குழந்தை மேல் பட்டது உயிர் இல்லாத ஓவியத்தின் மேலும் பட்டது. எல்லோரும் அடி என்மேல் பட்டது பட்டது என்று ஒருவருக்கு ஒருவர் சொல்லிக் கொள்கிறார்கள்.

இறைவன் தமக்காக வந்த வருகையை எண்ணி எண்ணி உள்ளம் உருகுகிறார் வாதவூரர் தன் பிழை பொறுக்க வேண்டும் என்று பாண்டியன் வாதவூரரை வணங்குகிறான். யான் நாளும் நின்பணியே செய்து ஒழுக இவ்வுலகம் தானுள வேண்டும் என்று பாண்டியன் குறை இரந்து விண்ணப்பம் செய்கிறான் பின்திகழ் சடையான் மன்னும் பெருந்துறை நகரில் ஏக இன்றெனை விடுப்பதே இவ்வுலகு அளிப்பதாகும் என்று வாதவூரர் பாண்டியனிடம் தன் கருத்தைச் சொல்கின்றார். நம்பனுக்கு அன்பு மிக்கார் நற்றவக்கோலம் கொள்கின்றார். வேண்டிய வடிவமாகி ஆண்டருள் செய்யவந்த அண்ணலைத் துதிக்கத் திருப்பெருந்துறைக்கு வருகிறார். எம்பிரானும் காட்சி தருகிறான்.

*அண்டருக்கு அரியாய் போற்றி அடியவர்க்கு எளியாய்*
*போற்றி*
*வண்தமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய்*
*போற்றி*
*கண்தனக்கு இனிய மேனி காட்டிஎன் சென்னி மீது*
*மூண்டகத் திருந்தாள் வைத்த முத்தனே போற்றி*
*போற்றி*

என்றெல்லாம் திருவாதவூரடிகள் திருவருளை வியந்து பாடுகிறார். திருவாதவூரடிகள் சிரசிலே ஞானாசாரியர் தமது அருமைத் திருக்கரத்தை வைத்து பரிசதீக்ஷை செய்தருளுகிறார். நீற்றைப் புனைந்து ஞானநிறை அருட் பார்வை நல்குகிறார். 'நாம் இனிக் கைலை செல்ல வேண்டும்' என்று கைலைக்குப் புறப்படுகிறார் தில்லைநாதர்.

வாதவூரரும் தலயாத்திரையாகத் திருத்தில்லையைச் சென்று அடைகிறார். அம்மைஅப்பனும், அந்தணக் கோலத்துடன் துய்ய முப்புரிநூலும் துலங்கு புத்தகமும் தோன்ற வருகிறார்.

திருவாசகம் திருக்கோவை

ஆதியை மன்றுள் ஆடும் ஐயனை அன்பி னாலே
ஓதிய தமிழின் பாடல் உள்ளவை ஓத எண்ணி
மாதுயர் அகல இன்னே வந்தனம் எழுதல் வேண்டும்
வேதியர் பெருமான் இன்று விளம்பிடும் விளங்க
என்றார்

நீர் பாடிய பாடல்களை எழுதல் வேண்டி வந்தேன் என்றலும், வாதவூரர் திருவாசகங்களை மனம் உவந்து அடைவே சொல்லி அருள்கின்றார். தெளிவு உற எழுதிய தன்மேல், 'சபாநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒரு கோவை பாடுக' என்றும் கேட்கின்றார் அம்பலத்தாடும் ஐயன். 'திருவளர் தாமரை' என்றெடுத்துத் திருக்கோவை பாடுகிறார். இறைவனும் முன்னுற இருந்து அதனையும் எழுதுகிறார். எழுதி முடிந்ததும் மின் என மறைகிறார்; திருச்சிற்றம்பலவன் எனக் கைச்சாத்திட்டுச் திருச்சிற்றம்பலத்தில் வைத்து அருள்கின்றார். வழிபாட்டுக்கு வந்த அந்தணர்கள் அண்ணல் வைத்த புத்தகத்தைக் காண்கிறார்கள்.

"திருச்சதகம் முதலாகச் சிறந்ததமிழ் அறுநூறும்
விரித்தஅகப் பொருட்கோவை விளங்கவொரு
நானூறும்
உரைத்தனர்பின் முடிந்தவிடத்து உயர்வாத
வூரன்மொழி
தரித்தெழுதும் அம்பலவன் எழுத்தென்று
சாற்றினர்."

"கேட்டவர்கள் எல்லோரும் கிளர்புளகங் குறுவேர்வு
காட்டிடவொண் கண்ணீரும் கசிந்துருகு
சிந்தையுமாய்
ஈட்டியமெய்த் தவமுடையோர் இயம்பியஇத்
தமிழன்றி
வீடுநெறிக்கு இனிச்சிவநூல் வேறுளதோ
என்றார்கள்."

திருவாசகம், திருக்கோவை என்ற இப்பிரபந்தங்கள் நுதலிய அரிய பொருளை விளங்க விரித்தருளுமாறு தில்லை வாழ் அந்தணர்கள் வேண்டிக்கொள்கிறார்கள். இத்தமிழ்ப் பிரபந்தங்கள் நுதலிய பொருள் சிற்சபை மத்தியில் விளங்கும் சபாநாயகரேயாம் என்று திருவாய்மலர்ந்து எல்லோரும் நேரேகாண அச்சிற்சபையின்கண் விரைந்து சென்று, மறைந்து அருள்கின்றார் திருவாதவூரடிகள்.

செய்காட்டும் கமுகடவித் தில்லையுளார் பொருள் கேட்கக்
கைகாட்டித் தம்உருவம் காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேர்அரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினார்.

திருவாசகம் முழுவதும் தேன்ஊறும் வாசகங்கள். இந்தத் தேன்ஊறும் வாசகத்துக்குச் சிற்றம்பலவன் வாய் ஊறி நின்று, மணிவாசகப் பெருமானை முழுக்க முழுக்க ஆட்கொண்டு, படி எடுக்கும் பெருமானாக எழுந்தருளி வந்தான். வான்பழித்து மண்புகுந்து ஆட்கொள்ளும் பெருமான் கைப்பட்டது திருவாசகம். சிவானந்த அநுபவம் பொங்கி எழுந்தபோது மணிவாசகர் பெற்றெடுத்தது திருவாசகம். அந்த இன்ப அநுபவத்தை,

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்

என்று திருவெம்பாவையில் அவரே பாடுகிறார். "பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ" என்று தாயுமானார் வினவுகிறார். நம்முடைய உள்ளம் கல்லாக, மண்ணாக, இரும்பாக இருந்தாலும் திருவாசகப் பாடல்களைப் பாடினால், பாழான கல்மனம் கனியாமல் போகாது.

கோவை நூல்களுள் திருக்கோவையார் தலைசிறந்தது. திருக்கோவையாரில் இலக்கியச் சுவை ஏறுநடை போடுகின்றது. பக்திநலன் துள்ளி விளையாடுகின்றது. தில்லைக் கூத்தப்பெருமானைத் தலைவனாகவும் மணிவாசகர் தன்

னைத் தலைவியாகவும் வைத்துப் பாடிய பாடல்கள் நானூறும் கற்போர் உள்ளத்தைக் கனிவிக்கும் தன்மையன.

## சிவசம்பந்தம்

சிவத்திலிருந்து வேருகாத சிவப்பிரகாசமே சிவசக்தி. உயிர்களுக்கு உயிர்களை உபகரிக்கும் சக்தி சிவசக்தி. உபகரித்தலாவது உயிர்கள் உடம்பைத் தாம் என்று கருதி வாழாமல், உடம்பின் வேறு உயிர் என்பதை உயிர்களுக்கு உணர்த்துவதாகும். சிவசக்தி நித்திய கன்னிகை நாம் இருட்டறை மூலையில் வசிக்கும் குருட்டுக் கிழவர்கள். நம்மைக் கண்ணுள்ளவர்களாக்கிச் சம்பந்தம் செய்ய அந்தக் குமரி — சிவசக்தி — நித்திய கன்னிகை சதா முயன்று கொண்டிருக்கிருள்.

*இருட்டறை மூலை இருந்த குமரி*
*குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்*
*குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி*
*மருட்டி அவனை மணம்புரிந் தாளே*

என்பது திருமந்திரம்.

ஆன்மாக்கள் குருட்டுக் கிழவர்கள். அந்தக் குமரி முதலிலே ஆன்மாக்களைச் சம்பந்தஞ் செய்கிருள். ஆன் மாக்கள் பக்குவப்பட்டதன் மேல் சிவசம்பந்தம் செய்து விடுகிருள். சிவன் மருத்துவன்; வைத்தியநாதன் சக்தி மருத்துவிச்சி. அவள் மலபந்தர்களாய் இருக்கும் நம் மைத் தவறுகளிலிருந்து நீக்கி வளர்த்து எடுக்கும் அருள் அன்னை; பெய்வளை உமைஅம்மை. அவள் நம்மைப் பேதித்து வளர்த்து எடுக்கிருள்.

## பேதித்து வளர்த்து எடுத்தல்

பேதித்தல் கன்ம நுகர்ச்சியில் ஈடுபடுமாறு வேறு படுத்துதலாகும். இது மறைத்தலாகும். கன்மக் கழிவில் வளர்த்தெடுத்தல் அருளலாகும். மறைத்தலைச் செய்யும்

நிலையில் சத்தி திரோதாயி எனப்படும். அஃது உயிர் களுக்கு மலபரிபாகத்தை உண்டாக்கிப் பாச நீக்கத்தில் அருட்சத்தியாக நின்று உபகரிக்கும். தாய் குற்றம் கண்ட இடத்துச் சினப்பாள். குணங் கண்டபோது இன் புறுவாள். அதுபோலே, சிவசக்தி மறக்கருணை காட்டிச் சினந்து குற்றம் ஒழிந்தபோது அறக்கருணை காட்டி அன்புடன் ஆட்கொள்வாள்; இது பேதித்து வளர்த்து எடுத்தலாகும்.

சிறப்பாகச் சொன்னால், பேதித்தல் உலகியல்பில் உவர்ப்புத் தோன்றச் செய்தலாகும். உவர்ப்பினைத் தோன் றச் செய்து, தூக்கிக் காத்து வளர்த்தல் இறைவன் திரு வடிகள் என்று பாடுகின்றார் அப்பர் பெருமான்.

*இருள்தரு துன்பப் படலம் மறைப்பமெய்ஞ்*
*ஞானமென்னும்*
*பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப்*
*புகலிழந்த*
*குருடரும் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்று*
*அருள்தரு கைகொடுத் தேற்றும்ஐ யாறன் அடித்தலமே*

புன்னெறி விலக்கி, மேலாம் நன்னெறி காட்டி, நவை யறு காட்சி நல்க வேண்டி இறைவன் சதா பேதித்துக் கொண்டே இருக்கின்றான். சர்வ சீவதயாபரனின் திரு வருட்குறிப்பை அறிய முயலாமல் நாம் மனம்போன போக்கெல்லாம் போய்க் காரியங்களைச் செய்துவருகின் றோம். அவ்வாறு காரியங்களைச் செய்கின்றபோது அந்தப் பரமகருணாநிதி நம்மைத் தொடர்ந்து வந்து வழிமறித்து இன்பத்துன்பங்களைத் தந்து ஈடேற்றப் பார்க்கிறார்.

*நல்ல சிவனார் நம்மை வருத்துவது*
*கொல்ல அல்லக் கொல்ல அல்லப்*
*பொல்லாப் பிணிபோக்க*

என்பதை நாம் உணர்வதில்லை. 'இந்தப்பூமி சிவ னுய்யக் கொள்கின்ற ஆறு' என்பதையும் மறந்து விடுகி

ரேம். சர்வ சீவதயாபரன் 'ஓடிமீள்கென ஆடல் பார்த்' திருப்பவன்; அந்த நல்ல சிவன் நம்மைத் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றான்.

நாவுக்கரசர் திருவருளின் கருத்தறியாது வாழ முற்பட்டபோது பேதித்து வளர்த்தெடுக்கப் பெய்வளை வருகிறாள். அவரை வளர்த்து எடுக்கிறாள்.

*காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் கரை நின்றவர்*
*கண்டுகொள் என்றுசொல்லி*
*நீத்தாய கயம்புக நூக்கிஇட நிலைக்கொள்ளும்*
*வழித்துறை ஒன்று அறியேன்*
*வார்த்தைஇது ஒப்பது கேட்டறியேன் வயிற்றோடு*
*துடக்கி முடக்கிஇட*
*ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில வீரட்டானத்துறை*
*அம்மானே.*

என்று அவர் அழுத அழுகையை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வாதவூரடிகளை வளர்த்தெடுக்கக் கூத்தப் பெருமான் கூலிகொண்டு, மண்சுமந்து, கோவால் மொத்துண்டு, புண் சுமந்தான். இதைவிட இறைவனின் இரக்கத்துக்கும் கருணைக்கும் அருளுக்கும் வேறு சான்றும் வேண்டுமா?

*பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்*
*எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி*
*மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்*
*புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ*
*புண்ணியனே*

— திருவருட்பா.

பூமியில் உள்ள போகங்கள், அவைகளை அனுபவித்தற்கு உரிய உடம்பு என்ற இன்னோரன்ன அனைத்தும் அருட்சத்தி நமக்கு உபகரித்தவைகள்; அந்தப் பெருமாட்டி தொடர்ந்து வந்து பேதித்து நம்மை வளர்த்

தெடுக்கிருள். பராசக்தியாகிய அன்னையின் திருவருட் குறிப்பை நாம் அறிவதில்லை; அறிய வேண்டும்.

பேதித்து வளர்த்து எடுக்கும் திருவெம்பாவை இதோ!

காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

# மழை பெய்யாமல் இருக்க முடியுமா?

திருவள்ளுவர் நமக்குத் தந்த மாணிக்கங்கள் அறம் வளர, அமைதி நிலவ, இன்பம் பெருக வழிகாட்டுவன திருக்குறள் எல்லாச் சமயத்துக்கும், எல்லா நாட்டு மக்களுக்கும், முக்காலத்துக்கும் பொதுவான முழுமுதல் நூல். பரிமேலழகர் திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என நாவார உளமாரப் போற்றிக் கைகூப்பி நிற்கின்ருர். வள்ளுவர் வாய்மொழி குறளோடு நின்று விடக்கூடாது. அது வாழ்வோடு ஒன்ற வேண்டும்.

வள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் என்று ஓர் அதிகாரத்தை வகுத்திருக்கிருர். அங்கே ஒரு குறள் இடம் பெறுகின்றது.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை.**

பிறதெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் இதனுல் கற்பு உடையவளது ஆற்றல் கூறப்பட்டது. இதுவரை இந்தக் குறளுக்குக் கிடைத்த பொருள் இதுதான்! அப்படியானுல், மழை இல்லாத காலத்திலே கணவனைக் கடவுளாகக் கருதுகின்ற பெண்ணொருத்தியை அழைத்து, "நம்முடைய நாட்டிலே மழை இல்லை; மழை பெய்யச் சொல் அம்மா" என்று வேண்டிக்கொள்ளவேண்டும். அவளும், "வருண பகவானே, வா" என்று அழைப்பாள். உடனே, வருண பகவானும் வருகைதந்து மாநிலத்தை மழையால் குளிர்விப்பான்தானே! இப்படி ஒரு வினு எழலாம்.

## கற்புடை மாதர் சிறப்பு

மணிமேகலையைத் தந்த சாத்தனுர் திருக்குறளிலே மிக்க ஈடுபாடு உடையவர். வள்ளுவரைப் பொய்யில்

புலவன் என்றும், அவர் வாய்மொழியைப் பொருளுரை என்றும் போற்றிய பெருமை சாத்தனுருக்கு உண்டு வள்ளுவர் வாய்மொழி பொய்யாக — புகழுரையாக — பழங் கதையாகப் போகமுடியாது.

காவிரிப்பூம்பட்டினத்திலே ஆதிரை என்னும் மங்கை நல்லாள் வாழ்கின்ருள். அவ்வூர் வணிகன் சாதுவன் என்பவனை மணந்து மனைஅறம் மேற்கொள்கின்ருள். இல்லறம் நல்லறமாகின்றது. ஆனுல், காலத்தின் கோலத்தால் அந்த வணிகன் 'வட்டினும் சூதினும் வான் பொருள் வழங்கி' கணிகை மாதரின் கூட்டத்தால் கெட்டு அழிகின்ருன். வறுமையையும் 'வா' என்றே அழைத்து விடுகிருன். வறுமை உற்ற நிலையிலே மீண்டும் வாணிகம் செய்ய விழைகின்ருன். கப்பல் ஏறிக் கடலிலே செல்கின்ருன் கடுங்காற்றில் கப்பல் அகப்பட்டுக் கவிழ்கின்றது. ஆதிரை செய்தியை அறிகின்ருள். 'ஐயோ' என்று அலறுகின்ருள். கணவன் இறந்தபின் உயிர்வாழ ஒருப்படாது உயிரையே விட்டு விடத் துணிகின்ருள். முதுகாட்டில் தீ மூட்டி அதனுள்ளே இறங்குகின்ருள். சூழ்ந்த நெருப்பு அவளைச் சுடாது தணிகின்றது. 'தீயும் கொல்லாத் தீவினையாட்டியேன்; யாது செய்கேன்' என்று செய்வது அறியாது திகைக்கின்ருள். அசரீரி எழுகின்றது. "பெண்ணணங்கே, உன் கணவன் இறக்கவில்லை. நாகர் மலையிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ருன். அவன் இங்கு வந்து சேர்வான்." அசரீரியைக் கேட்ட ஆதிரை அமைதியாக இருக்கிருள். கணவன் பொல்லா ஒழுக்கம் உடையவன் என அறிந்தும்,

"புண்ணியம் முட்டாள் பொழிமழை தரூஉம்
அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம்"

பெருமையுடன் வாழ்கிருள் சாதுவனும் நாகர்க்கு நல்லறம் கூறி மீண்டு வருகிருன். தன்மனையில் நன்பலதானம் செய்கின்ருன். கற்பினுக்கு ஆதிரை அணியாகின்ருள். அவளின் மாசிலாக் கற்பை மணிமேகலை,

"குளன்அணி தாமரைக் கொழுமலர் நாப்பண்
ஒருதனி ஓங்கிய திருமலர் போன்று
வான்தரு கற்பின் மனையுறை மகளிரில்
தான்தனி ஓங்கிய தலைமையள் அன்றோ
ஆதிரை நல்லாள்"

என்று ஏத்திப் போற்றிப் புகழ்கின்றது.

கற்புடைமாதரை வான்தரு கற்பினர் என்று மணிமேகலை சிறப்பிக்கின்றது. மழை வேண்டில் பெய்விக்கும் சிறந்த கற்புநெறி வான்தரு கற்பு எனப்படும்.

தெய்வப் புலவராம் திருவள்ளுவநாயனரது பொருள் மொழியைத் தெளிய வேண்டும் என்று பாடவந்த மணிமேகலை,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேருய்"

எனப்பாடுகின்றது. முனிவர் புரிந்து கண்ட பொருளுடன் கூடிய உரை பொருளுரை ஆகும். அதுவே மெய்யுரையும் ஆகும்.

திருவள்ளுவர் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்று பாடுகின்றார். சாத்தனர் இன்னும் ஒரு படி கடந்து, கொண்ட கணவனைத் தெய்வமாகப் போற்றினால் பெய் என்று ஆணை இட்டவுடன் பெருமழையே பொழியும் என்று பாடுகிறார்.

## தாய் சிவசக்தி

உழவன் தன் தொழிலுக்கு மழை வேண்டி ஆரவாரித்தால் அதற்கு இசைந்து மேகம் மழைபொழியும்.

குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும் நாட
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவரல் அருவி காணினும் அழுமே.

(ஆர்ப்பின் - ஆரவாரித்தால்)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் இதற்குச் சான்று சொல்கின்றது. ஏரும் நுகத்தடியும் ஏந்தி மாடுகளை ஓட்டிக் கொண்டு கூட்டமாய் உழவுக்குப் புறப்படும்போது உழவர்கள் ஆரவாரம் செய்வார்கள். அதற்கு மேகம் தலை வணங்கி இருக்கிறது.

*நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்*
*புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்உலகில்*
*நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லார்க்கும் பெய்யும் மழை*

என்று தானே தீந்தமிழ் மூதாட்டி ஔவையாரும் பாடுகிருள்.

திருவள்ளுவர் பொய்யில் புலவன்; வாழ்க்கையின் தத்துவத்தை — மனித இனத்தின் நல்வாழ்க்கைக்கான வழிகளை — முறையாகச் சொன்ன பெருஞானி. வள்ளுவர் சமுதாய வாழ்வின் நினைவுகளையும் அநுபவங்களையும் அலட்சியம் செய்துவிட்டு, மேக மண்டலத்தில் தத்துவச் சிறகு அடித்துப் பறக்கவில்லை. அவர் அங்கு இங்கு எல்லாம் இழுத்து அசைத்துப் பொருளைத் திரிக்க முடியாத வகையிலே திருக்குறளை எழுதி வைத்திருக்கிருர். நாட்டுக்குத் தேவையான கருத்துக் கானமயில் அங்கே ஆடுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான கொள்கைக் குயில் அங்கே கூவுகிறது. சமுதாய நெறியிலிருந்து — சமய நெறியிலிருந்து உண்மையைத் துண்டிக்க முடியாது. வள்ளுவரை இன்றுள்ள நிலையோடு ஒட்டவைத்து அவரவர் மனத்துக்கும் கொள்கை வேறுபாடுகளுக்கும் ஏற்ப விளக்கம் கூறிஞல் அது குறளுக்குச் சிறப்பாகாது. தமிழகத்தினுடைய இல்வாழ்க்கையையும் சமுதாய வாழ்க்கையையும் சிருட்டித்துக் காட்டிய வள்ளுவரின் வாய்மொழி உள்ளத்திலே நல்ல முறையில் ஒலிக்க வேண்டும். அந்த ஓவியம் உள்ளத்திலே தெளிவாகப் பதிய வேண்டும்.

*பூணும் நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்*
*போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்*

என்று பாரதி குரல் எழுப்பினனே! அந்தச் சிவ சக்தி 'பெய்' என்ருல் மழை ஏன் பெய்ய மாட்டாது?

*மண் திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்*
*பெண்டிர் ஆயின் பிறர் நெஞ்சு புகாஅர்*

என்று மணிமேகலை அறுதி இட்டுச் சொல்வதி லிருந்து நற்பெண்டிர் நமக்கு மழை வளம் தருகிருர்கள் என்று சொல்வதில் தப்பு ஒன்றும் இல்லையே!

பிறர் நெஞ்சு புகாப் பெருமை வாய்ந்த பெண் நல்லாள் தன் கற்பின் திறத்தால் மழையையும் தருவிக்க முடியும் என்று காட்டியது நம்முடைய இலக்கியம்.

## மழைவளம் தரும் திருப்பாவை

திருவெம்பாவையில் பதினறுவது பாடலும், திருப் பாவையில் நான்காவது பாடலும் மழைப் பாசுரங்களாக எழுந்து இருக்கின்றன. "வான் நோக்கி வாழும் உலகெல் லாம்" என்ற பொய்யாமொழி மணிவாசகப் பெருமானுக் கும் ஆண்டாள் நாச்சியாருக்கும் தெரியாமலா இருந் திருக்கும்? பருவத்தே மழை பெய்ய வேண்டும், பயிர் பல்கிப் பெருக வேண்டும், பசிப்பிணி பறந்தோட வேண் டும் என்ற இன்னேரன்ன குறிக்கோள்கள் அவர்களின் திருப்பெருகு சிந்தையிலே முகிழ்த்து இருந்திருக்கின்றன.

ஓங்கி உலகளந்த உத்தமனைப் பாடி, மார்கழி நோன்பு நோற்ருல் நாட்டுக்கு விளையும் நலன் பல. தீங்கின்றித் திங்கள் மும்மாரி பெய்யும். ஓங்கி வளர்ந்த செந்நெற்பயிர் களின் நடுவே கயல் மீன்கள் துள்ளி விளையாடும். குவளை மலரில் வண்டுகள் உறங்கும். வள்ளற் பெரும் பசுக்களின் பருத்த மடிகளிலிருந்து பால் குடம் குடமாக வெள்ளம் போல் பெருகும். இத்தனையும் காட்டித் தருவதுதான் என்ன? நீர்வளம், நிலவளம், நெல்வளம், பால்வளம் என்ற இன்னேரன்ன வளம் எல்லாம் பெருக, நாட்டிலே நீங்காத செல்வம் நிறைகின்றது. உத்தமன் பேர் பாடி நோன்பிற்கு அங்கமாக நீராடினல் மழைபெய்து நாடு செழிக்கும் என்ற திருப்பாவை இதோ:

*ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி*
*நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து*
*ஓங்குபெருஞ் செந்நெ லூடு கயலுகள*
*பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்*
*தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி*
*வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
*நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்*

வள்ளல் வரிசையிலே பசுக்கள் எண்ணப்படும் அளவுக்கு நாட்டில் வளம் சுரக்கின்றது. நலம் பெருகுகின்றது. பெரும் பசுக்கள் நீங்காத செல்வமாக நிறைகின்றன.

பரமன் அடி பாடிப் பாவை நோன்பு நோற்ருல் எல்லாச் செல்வமும் உண்டு என்று பாடிய சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள் மழையை வருவித்துக் கொடுக்கப் பாடுகிருள். மழைக்குக் கட்டளை இடுமாப் போலே பாடல் எழுகின்றது. "மழைக்கடவுளே, நினக்கு என்றே ஒரு தனி வண்மை உண்டு அல்லவா! அதனை நீ ஒளிக்கலாகாது. நீ கடலிடைப் புகுந்து நீரை முகந்து, பெருமுழக்கம் செய்து வானத்தின் மீதேறித் திருமாலின் திருமேனி போல் கருநிறம் பூண்டு கம்பீரமாக வரவேண்டும். கண்ணபிரானின் கறுப்பு அழகு பெற்ற நீ அவன் திருக்கரத்திலுள்ள சக்கராயுதம் போல் பளிச் பளிச் என்று மின்ன வேண்டும். அவ்வளவுடன் நின்றுவிடக் கூடாது. அப்பெருமானின் இடது கையில் உள்ள வலம்புரிச் சங்கின் முழக்கம் போலே பெருமுழக்கமும் செய்ய வேண்டும்.

இன்னும் ஒன்று சொல்கிறேன். கண்ணபிரானின் கையிலே சார்ங்கம் என்ற வில் இருக்கிறதே! அது அம்புகளை உதிர்க்கவில்லை; உதைத்துத் தள்ளுகிறது. நீயும் மழைத்துளிகளை உதிர்த்தால் போதுமா? உதைத்துத் தள்ளுவாயாக. கண்ணபிரானின் அம்பு மழையினல் உல

கம் வாழ்கின்றது. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தை அவன் அம்பு செய்கின்றது. அப்பெருமானின் அம்பு அன்பு மழையாய், அருள்வெள்ளமாய் வரவேண்டும் என்பது நம் பிரார்த்தனை. எனவே, நீயும் கைஇருப்பாக எதையும் வைத்துக் கொள்ளாதே. உலகம் வாழப் பெய்திடாய்; நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட நன்ருகப் பொழிய வேண்டும்''

ஆய்ச் சிறுமியர் நோன்பு நோற்று நாட்டுக்கு நலம் வேண்டி மழைக்கடவுளுக்கு இப்படிக் கட்டளை இடுகிருர்கள். கண்ணபிரான்மேல் இருக்கும் முறுகிய பக்தியினுல் மழைக்கடவுளுக்கும் கண்ணனை நினைவூட்டுகிருர்கள். ஊழி முதல்வன் போல் உன் மேனியின் அழகு கறுத்து விளங்க வேண்டும். பாழி அம் தோளுடைய (வலிமை மிக்க அழகிய தோள்களை உடைய) பற்பநாபன் கையில் இருக்கின்ற ஆழி (சக்கராயுதம்) போல் மின்ன வேண்டும். வலம்புரி (சங்கு) போல் முழங்க வேண்டும். சார்ங்கம் (பெருமானின் வில்) உதைத்த சரமழை (அம்பு மழை) போல் உலகம் வாழப் பெய்ய வேண்டும்.

மார்கழி நீராடும் மங்கையர்க்கு — இத்தனை பக்தியில் திளைத்திருக்கும் இந்த இளநங்கையர்க்கு — சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்க்கு மழைக்கடவுள் தலைவணங்காமல் இருக்க முடியுமா, என்ன? மழைக்கடவுள் பெருங் கடலுள் புகுந்து நீரை முகந்து நன்னீராக்கி, கொஞ்சம்கூட உலோபம் இல்லாமல் கண்ணன் கருணை போலே மழையையே கொட்டி விடுவான்!

அந்த ஆய்ச் சிறுமியரின் பாடலை — ஆண்டாள் இன்னிசையால் பாடிக் கொடுத்த அற்புதப் பாடலை நாமும் பாடுவோம்.

*ஆழி மழைக்கண்ணு ஒன்றுநீ கைகரவேல்*
*ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி*
*ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்*
*பாழிஅம் தோளுடைப் பற்பநா பன்கையில்*

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

இறைவனுடைய மறக் கருணையை ஆண்டாள் இங்கே குறிப்பாகப் பேசுகின்றாள். உயிர் அறியாமையின் பிடியினால் செல்வழி செல்லாது தடுமாறுகிறபோது இறைவன் தாயிற் சிறந்த தயாபரனாகித் தடுத்து நிறுத்தி, நன்னெறி காட்டி அசுர சங்காரம் செய்கின்றான். இது மறக்கருணை. தாய் சேயைக் கண்டிப்பது அன்பின் செயல். இறைவன் எவர் மேலும் சீற்றம் கொள்வதில்லை. தாயாகித் தந்தையாகித் தாங்குகின்ற கருணாமூர்த்தி பெற்ற குழந்தைகளுக்குப் பெரும்பேறு தருவதற்காகவே துஷ்ட நிக்கிரகம் செய்கிறான்.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல்
ஆற்றின்
வந்திடா விடின்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்

என்பது சித்தியார். தாயின் சீற்றம் அன்பின் செயல். கண்ணபிரானுடைய அம்பு மழை அன்பு மழை!

## மழை வளம் தரும் திருவெம்பாவை

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலின் திருவருளால் வேண்டுவன வேண்டிப் பெறுதற்கு வழிகாட்டும் திருப்பாவையைப் பாடிக் கொடுத்த சுடர்க் கொடியாளுக்குக் கண்ணபிரான் நினைவிலே மழைப்பாடல் வருகிறது. ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானுக்கு எம்பிராட்டி உமை அம்மையின் நினைவிலே மழைப் பாடல் வருகிறது. மழைக்கு உவமையாகச் சிவசக்தியின் அருள்

ஆடலைக் காட்டுகிறார் மணிவாசகர். பாற்கடலுள் பையத் துயின்ற பரந்தாமனுடைய அருள் போலே — அப்பெருமானின் மறக்கருணை போலே — தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யவேண்டும் என்று பாடிய ஆண்டாள் நாச்சியாரின் திருப்பெருகு சிந்தையிலே கண்ணபிரானுடைய வீரமும் அவனின் திருவருள் நலனும் துள்ளி விளையாடி இருக்கின்றன.

"மழை முகிலே, நீ கடலைச் சார்ந்து நீரை முகந்து விண்ணில் எழுந்து எம்மை உடையவளாம் உமை அம்மை போல் நீலநிறம் பெற்று விளங்க வேண்டும். எம்மை ஆட்கொண்டு அருளும் அந்த அம்மையின் சிறிய இடையைப் போல் நீ மின்ன வேண்டும். அப்பெருமாட்டியின் திருவடியில் விளங்கித் தோன்றும் திவ்விய சிலம்பின் ஒலிபோல் இடி இடித்து ஒலிக்க வேண்டும் பிராட்டியின் புருவம் போல் வானவில்லை விளங்கச் செய்ய வேண்டும். நம்மை அடிமையாக உடையவளாகிய பெருமாட்டியினின்றும் பிரிதல் இல்லாத எம்பிரானுடைய அன்பர்களுக்கும் சிறியேமாகிய எமக்கும் திருவுளம் கொண்டு அவ்வம்மை சொரிகின்ற அருட்பெருக்கைப் போல் நீ மழை பொழிய வேண்டும்."

இறைவனும் இறைவியும் அருள்பாலிக்கும் திறன் மழை சொரிதலுடன் ஒக்கும் என்று பாடுகிறபோது தெய்விகக் காதலின் ஏற்றம் தெரிகின்றது. "நம் தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கும் முன்னி அவள் நமக்கும் முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழையே" என்று கன்னியர் கூற்றாகப் பாடலைப் பாடி மழையைப் பொழிவிக்கிறார் மணிவாசகர்.

பாவைப் பாட்டின் உறுப்பாயுள்ளது மழை வேட்டலாகும். உலகில் நலம் பெருக மழை வேண்டும். உயிர் நலம் பெற அருள் வேண்டும். மழை இன்றேல் உலகம் இல்லை. அருள் இன்றேல் வாழ்வு இல்லை.

அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்பது ஆனல் — அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்
எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு

காரைக்காலம்மையார் அருளின் திறத்தை இவ்வாறு விதந்து ஓதுகிறுர்.

அருளின் ஏற்றத்தை மழை பொழிவதுடன் இணைத்துப் பாவை பாடுகின்ற திறன் நினைந்து அன்பே நிறைந்து உருக வேண்டிய தொன்றுகும். மணிவாசகர் மழை வளம் பெருகி மாநிலம் செழிக்கப் பாடிய திருவெம்பாவை இதோ!

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

நீர் இன்றி அமையாத உலகிலே அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை! உலக நலன் மழையால் பெருகு வதையும், அம்மையின் திருவருளினுல் மும்மை மலம் அற்றுப் போவதையும் இத்திருவெம்பாவை வாயூறி வர்ணிக்கின்றது. அம்மையின் அருட்பெருக்கினுல் பாச வெப்பம் நீங்குதல் குறிப்பாக இங்கே தெரிகின்றது.

மழைபொழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையும் மின்னல் சரேலென்று பாயவும்
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்

உழைஎலாம் இடைஇன்றி இவ் வானநீர்
ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டும்கால்
"மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாய்!" என்று பாடும்என் வாணியே

என்பது பாரதியின் தீம்பாடல்.

மார்கழி நீராடலால் வரும் பயன் இரண்டு. ஒன்று நாடு செழிக்க மழை பெய்தல்; மற்றையது, கன்னியர் நல்ல கணவரைப் பெறுதல். முன்னையது பொதுப்பயன்; பின்னையது சிறப்புப் பயன்.

....................நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

என்று திருவெம்பாவையும்,

வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

என்று திருப்பாவையும்,

முழங்குகின்றன.

மழை பெய்யாமல் இருக்க முடியுமா?

# சிவசக்தி

உலகத்தைப் படைத்துக் காத்துத் துடைக்கும் இறைவனை இப்படியன், இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எளிதில் உணர முடியாது. எனினும், அருள்பழுத்த அடியார்கள் அப்பெருமானுக்கு ஆயிரம் ஆயிரம் திருப்பெயரையும் திருவுருவத்தையும் தந்து, நாம் உய்ய வழி வகுத்திருக்கிறார்கள்.

சிவநெறி, சித்தாந்தச் செந்நெறி. அது அறவோர் தியானத்தில் முகிழ்த்து எழுந்தது. இம் மாபெரும் நெறி சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என அறுவகைச் சமயங்களாகப் பரந்து விரிந்தது.

சைவம்

சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே

சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
சைவம் தனைஅறிந் தேசிவம் சாருதல்
சைவம் சிவம்தன்னைச் சாரா மல் நீங்குதல்
சைவம் சிவானந்தம் சாயுச் சியமே

— திருமந்திரம்.

உயிர்கள் உலகத்தையும் தம்மையும் சிவசம்பந்தத்தையும் சிவத்தையும் உணர்ந்து அறிந்து, சிவத்துடன் ஒன்றுபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வை அடைவதற்கு இறைவனால் வகுக்கப்பட்ட நெறி சைவம்.

சிவசம்பந்தம் உடையது சைவம். சிவம் என்ற சொல்லுக்குச் செம்மை, நன்மை, மங்கலம், முத்தி என்றெல்லாம் பல பொருள்கள் உண்டு. செம்மை என்பது

எதுவோ, அனைத்துக்கும் அப்பாலாய் நின்று அனைத்தையும் ஆக்குவது எதுவோ, ஆருயிர்களுக்கு நன்மை, மங்கலம், முத்தி எல்லாம் தருவது எதுவோ, எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ, அதுவே சிவம் எனப்படும்.

சிவசம்பந்தத்தை அறிந்து உணர்ந்து, அச்சிவத்தோடு சேர்ந்து மக்கள் உய்வதற்காகத் திருவருளால் தோன்றியது சைவசமயம். சைவர்கள் ஒப்புக்கொள்ளும் முடிவு சித்தாந்தம். எல்லாச் சமயங்களையும் அன்புடன் அணைத்துத் தன் அங்கமாகப் போற்றும் பெருமை சைவத்துக்கு உண்டு.

*ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்*<br>
*ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்*<br>
*யாதுசம யம்பொருள்நூல் யாதிங் கென்னின்*<br>
*இதுவாகும் அதுஅல்ல தெனும்பிணக்க தின்றி*<br>
*நீதியினுல் இவையெல்லாம் ஓரிடத்தே காண*<br>
*நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்*<br>
*ஆதலினுல் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே*<br>
*அடங்கியிடும் அவைஇரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.*

என்ற சித்தியார் சைவத்தின் பரந்த நோக்கத்தைச் சொல்லிச் செல்கின்றது.

## வைஷ்ணவம்

விஷ்ணுவைப் பரம்பொருளாகவும், அவன் திருவடியே அவனை அடைதற்கு உபாயமாகவும் அறுதியிட்டுக் கூறும் சமயம் வைணவம். நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்றிருப்பவன் வைஷ்ணவன். "வாசுதேவ : சர்வம்" என்று பகவான் கீதையில் சொல்கிருர். 'உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்று நம்மாழ்வார் பாடுவார்.

கண்ணன் அல்லால் இல்லைகண்டீர் சரண் அது நிற்கவந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்
திண்ணமாநும் உடைமை உண்டேல் அவன் அடி சேர்ந்து
உய்ம்மினோ
எண்ணவேண்டா நும்மதாதும் அவன் அன்றி
மற்று இல்லையே.

உருஆகிய ஆறு சமயங்கட்கு எல்லாம்
பொருஆகி நின்றான் அவன்எல்லாப் பொருட்கும்
அருஆகிய ஆதியைத் தேவர்கட்கு எல்லாம்
கரு ஆகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே.

என்பன போன்ற நம்மாழ்வார் பாடல்கள் நாராயணனுக்கு ஏற்றம் தருகின்றன. தோன்றிய ஆறு வைதிக சமயங்களுக்கு எல்லாம் ஒப்ப நின்றவன் கண்ணன்.

## சாக்தம்

பிரம்மமாக இருக்கும் பொருளே சக்தியாகவும் இருக்கின்றது. கிரியை அற்றதாக இருக்கும்போது அது சிவம் அல்லது பிரம்மம் எனப்படும். படைத்துக் காத்து அழிக்கும்போது அது சக்தி என்று அழைக்கப்படுகின்றது. சக்தி வழிபாடு சாக்தம் ஆகும்.

சிவம் எனும் பொருளும் ஆதி சக்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்
இவள்பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது
அரிதெனுமறை இரைக்குமால்

என்று பாடிச் சக்திக்கு ஏற்றம் கொடுக்கிறது சௌந்தர்யலகரி பராசக்தியிடமிருந்து இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்திகளாம் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்கள் தோன்றுகின்றனர். அவர்களின் மூலம் பராசக்தி சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் பிரபஞ்ச லீலையை நடத்துகிருள். சிவத்துக்கு எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை சக்திக்கும் உண்டு.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர்

தையலையே.

என்று பாடி அபிராமிப்பட்டர் பாலாம்பிகையின் பெருமையைச் சொல்கின்றார்.

## காணுபத்தியம்

பிள்ளையார் வழிபாடு காணுபத்தியம். தமக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும், தாமே எல்லா நாயகர்கட்கும் நாயகராகிய ஏக நாயக நிலையிலும் உள்ளவர் விநாயகர். அவன் தன் அலாது ஒரு பொருள் தனக்கு மேலிலான். அண்ட சராசரம் அனைத்துக்கும் அவனே தனித்தலைவன். அவனுடைய பெருவயிறு சர்வ அண்டங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் பெருமை உடையது. மோதகம் ஏந்தி நிற்கும் கரம் அகிலத்தைத் தாங்கிக் காக்கும் அருமையை உடையது.

திருஆக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

என்றும்,

விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

என்றும்,

பாடிக் கபிலதேவநாயனர் காணுபத்தியத்துக்கு ஏற்றம் தருகிறார்.

## கௌமாரம்

குமரனை வணங்கும் வழிபாடு கௌமாரம். பிரம்ம மாகிய அருவம் ரூபசண்முகமாய் உலகத்தைக் காக்கும் பொருட்டு அவதரித்தது என்ற அரிய பெரிய கருத்தை,

*அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்*
*கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும்*
*கொண்டே*
*ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய*

எனக் கந்தபுராணம் பாடுகிறது.

*அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி*
*அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி*
*அவர்மேலாய்*
*இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி*
*வருவோனே*

என அருணகிரியார் முருகப்பெருமானின் சிவதத்து வத்தைத் திருப்புகழிலே பாடி அருள்கின்றார்.

சிவபரம்பொருள் கருணையின் முகத்தால் முருகனாகி அவதரித்தது என்பது கௌமாரத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும்.

## சௌரம்

சௌர மதத்திற்குத் தெய்வம் சூரிய பகவான். சௌர மதத்தில் சூரியபகவான் காரணப் பிரம்மமாகக் கொள்ளப் பட்டிருக்கிறார். சூரிய பகவானிடமிருந்தே மும்மூர்த்திகளும் தோன்றி, அவரவர் காரியங்களாகிய சிருட்டி, ஸ்திதி, சங் காரம் என்னும் தர்மங்களை அநுட்டிக்கிறார்கள். சூரியனே மெய்ப்பொருள். அவன் அருவமாகவும் உருவமாகவும் இருக்கிறான். அருவம் ஒன்று. உருவங்கள் பல. அருவ சூரியனின் பிரதி விம்பங்களான மற்ற உருவங்கள் அவ

னின் பேராற்றலினாலேயே பிரகாசிக்கின்றன. உயிருக்கும் புத்திக்கும் சூரியனே ஆதாரம். வேதங்களில் சொல்லப் பட்ட காயத்திரி மந்திரம் சூரியனைக் குறித்தே சொல்லப் பட்டிருக்கிறது

ஓம் பூர்புவஸ்ஸுவ:
ஓம் தத் ஸவிதுர்வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்

ய: - யார், ந: திய - நம்முடைய அறிவை, ப்ரசோத யாத் - தூண்டுகிறாரோ, தத் - அந்த, தேவஸ்ய ஸவிது - சுடருடைய கடவுளின், வரேண்யம் பர்க: போற்றுதற்கு உரிய ஒளியை, தீமஹி - தியானிப்போமாக.

பூர்: புவ: சுவ! என்ற மூன்று சொற்கள் பூலோகம், புவலோகம், சுவர்க்கம் என்ற பொருள் உடையன.

யார் நம்முடைய அறிவைத் தூண்டுகிறாரோ. அந்தச் சுடர்க்கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக என்பது இதன் பொருள்.

இது பிரம்ம காயத்திரி அல்லது சூரிய காயத்திரி ஆகும். சூரிய காயத்திரி ஜபம் பண்ணுகின்றவன் புறத்தில் சூரிய பகவானை ஊனக் கண் கொண்டு பார்க்கின்றான். அதனால் அகத்திலும் ஆத்மஜோதி பிரகாசிக்கின்றது. புற உலகில் சூரியனின் செயல் எவ்வாறு நிகழ்கின்றதோ அவ்வாறே அக உலகமாகிய அந்தராத்மாவிலும் அதே செயல் நிகழ்கின்றது. சுருக்கமாகச் சொன்னால், காயத்திரி மந்திரம் மனிதனுடைய ஆத்மசொரூபத்தை ஓங்குவிக்கின் றது. இன்னோரன்ன ஏற்றம் பெற்ற சூரியனைக் கீதையி லும் 'நானே சூரியன்' என்று கண்ணன் பேசுகிறான். சூரியபகவானுக்குச் சூரிய நாராயண பூசை செய்து, சர்க்க ரைப் பொங்கல் நிவேதனை செய்கிறார்கள். ஏழு குதிரை கள் பூட்டிய இரதத்தில் சஞ்சரிப்பவனாக உபாசனை செய் கிறார்கள். காலையில் பலரும் அவனை வந்தித்து வணங்கு கிறார்கள்; நலம் பல பெறுகிறார்கள்.

## சாக்தத்தின் ஏற்றம்

இன்று காணபத்தியமும் கௌமாரமும் சிவவழிபாட்டுடன் இணைந்து இருக்கின்றன. சௌரம் வைணவத்துடன் இணைகின்றது. ஆக, சாக்தம் எதனுடனும் இணையாது தனித்து நிற்கின்றது.

**உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்கு**
**எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி**
**எண்ணுதற்குச்**
**சமையங் களும்இல்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை**
**அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.**

**தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்**
**கூறும் பொருள்குன்றிற் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்**
**ஆறும் தலைவி இவளாய் இருப்ப தறிந்திருந்தும்**
**வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.**

என அபிராமிக்கு ஏற்றம் கொடுக்கிறார் அபிராமிப் பட்டர். தாம் இன்ப அநுபவநிலை பெற்று உய்வதற்குக் காரணமான நெறியை அபிராமிப்பட்டர் இவ்வாறு உயர்த்திக் கூறுகிறார்.

சைவம், வைஷ்ணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற எல்லா மார்க்கங்களும் சாக்தத்தினால் சமரசத் தன்மை அடைகின்றன. காயத்திரி உபாசனையிலே இந்தச் சமரசம் அடங்கி இருப்பதைக் காயத்திரியை வழிபடுவோர் நன்கு அறிவர். இங்ஙனம் சமரச பாவனையுடன் வழிபடுவோர்க்குச் சர்வ சித்தியும் உண்டாகும் என்பதற்குச் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கையே நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பொன்மொழிகள்

"சிருஷ்டிக்குச் சிவம், சக்தி ஆகிய இரண்டும் தேவை. உலர்ந்த களிமண்ணைக் கொண்டு குயவன் பானை வனைய முடியாது நீர் அவசியமாகின்றது. அங்ஙனம் சக்தியின் துணை இன்றிச் சிவம் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்காது.

இன்னிசைக் கருவி இல்லாது இன்னிசையை உண்டு பண்ண முடியாது. அதுபோல, சக்தியின் துணைகொண் டல்லாது பிரம்மத்தை அறிந்துகொள்ள முடியாது. கடல் இல்லாது அலை இருக்க முடியாது. அதே விதத்தில் பிரம்மத்துக்கு அந்நியமாகச் சக்தி இருக்க முடியாது.

பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த பின்பு அப்பிரபஞ்சத்தி னுள்ளே பராசக்தி வியாபித்திருக்கின்றாள். அன்னை பரா சக்தி லீலா சொரூபிணி. இப்பிரபஞ்சம் அவளுடைய விளை யாட்டு. அவள் சுதந்தரீ. அவளின் இச்சைக்கு மாறாக எதுவும் நிகழ்வதில்லை. அவள் ஆனந்தமயீ.

காளிகாதேவி என்னும் சக்தியே பிரம்மம் பிரம்மமே காளிகாதேவி. கிரியா ரஹிதமாயிருக்கும்போது பிரம்மம். கிரியா சகிதமாய் இருக்கும்போது சக்தி. ஆதி சக்தி யாண் டும் லீலா சொரூபிணியாய் உள்ளாள். அதாவது, சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் ஆகிய தொழில்களை விளையாட்டாக அவள் செய்து வருகிறாள்.

பரப்பிரம்மம் பல்வேறு வடிவங்களில் தன்னைத் தோற்று வித்துக் கொள்கின்றது கன்னிகைகள் அனைவரும் அன்னை பராசக்தி சொரூபமாகவே எனக்குத் தென்படுகிறார்கள். என்னை மணந்து கொண்ட சாரதாதேவி சில வேளைகளில் என் பாதத்தை வருடிச் சேவை செய்கின்றாள். அவளை நான் வணங்குகிறேன்.''

இவை எல்லாம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களாகும்.

அவளே பிரமா; அவளே விஷ்ணு; அவளே உருத்திரன் அவளே ஈஸ்வரன்; அவளே சதாசிவன் என்று சக்தியை வழிபடுவோரே உண்மையை உணர்ந்தவர்கள். திருவா வடுதுறையில் சக்தியை வழிபட்டுத் தான் அடைந்த பெரும் பேற்றைப் பாடவந்த திருமூலர் சிவத்துக்கு எவ்வளவு பெருமை உண்டோ அவ்வளவு பெருமை சக்திக்கும் உண்டென்று பாடுகிறார்;

*நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்*
*பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்*
*சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை*
*சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே.*

"சிறந்த அணிகலன் அணிந்து திருவாவடுதுறையில் எழுந்தருளி விளங்கும் திருவருள் அன்னை, உயர்வு அற உயர்ந்த ஒரு பேரின்பத் திருப்பெயரினள். அடியேனுடைய பிறப்பினை அறுத்து ஆண்டவள் அவளே. சிவனுடன் இணைபிரியாது இடப்பாகத்து ஒட்டி உறையும் சிறப்பினை உடைய அந்த அம்மையின் திருவடியினைச் சேர்ந்திருந்தேன்; இடையறாது நினைந்திருந்தேன்" என்று திருமூலர் தம் வரலாறு கூறும்போது அன்னைக்கும் ஏற்றம் கொடுக்கின்றார்.

## ஆதிசக்தி

சிவன் சக்தியைத் தன்னுள் பேரொடுக்கப் பேருழியில் ஒடுக்கிக் கொள்வன். உலகத் தோற்றமாம் மார்கழித் திருவாதிரையின்போது அன்னையாம் சக்தி வெளிப்படுத்தப்படுவாள். ஆருயிர்களை வினைக்கேற்ப உலகு, உடல்களுடன் கூட்டிச் செந்நெறிக்கண் செலுத்துவது அன்னையின் பேரருள். இது அன்னையின் நடப்பாற்றல்; அஃதாவது, உயிர்களைத் திருவடிப் பேற்றினை எய்துவிக்கும்படி நடத்துகின்ற ஆற்றல் ஆகும். இவ்வாறு அன்னை உயிர்களை நடாத்தச் சென்றால சிவன் அருளாம் திருவடிப்பேறு உண்டாகும் சக்தி, ஆற்றல், திருவருள் என்பன எல்லாம் ஒரு பொருட் சொற்கள். அனைத்துயிர்க்கும திருவடிப் பேறு வந்து வாய்க்க வேண்டும் என்பது அன்னையின் பேரவா. அவள் இதனை அறிந்தும் அறிவித்தும் நிற்பாள் அப்பொழுது அத்திருவருள் பேரறிவுப் பெருந்திரு; உயிர்கட்கெல்லாம் திருவருள் புரியச் செவ்வி பார்த்துக் கொண்டு, உயிர்களுடன் விரவி, அவ்வுயிர்களின அன்பு அறிவு ஆற்றலகளை விளக்கி அருளத் திருவுளம் கொண்ட அவள நிலை பேராற்றல் பெருந்திரு. பேராற்றல் பெருந்திரு தடை இலா ஞானம் - ஆதிசக்தி.

சத்தியே சிவஞானம்; 'சத்திதன் வடிவே தென்னில் தடைஇலா ஞானம் ஆகும்' என்பது சித்தியார். சத்தியைச் சிவனுக்கு வேருகக் கருதாது சத்தி அருளால் சிவஞானம் கைவரப் பெற்றவர் திருவடிப்பேற்றில் சாரும் சிறப்பினை எய்துவர்.

சிவமும் சக்தியும் இவ்வாறு அருள்செய்யும் முறைமையைப் பாடுகின்ருர் திருமூலர். சிவனையும் சக்தியையும் ஒன்ருக வழிபடுவார்க்கு அட்டமாசித்தியும் முத்தியும் எளிதில் கைகூடும். இதோ அந்தத் திருமந்திரம்.

சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாம்
சத்தி சிவமாம் இரண்டும்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையும் ஆமே.

(சத்தன் - சிவன்)

## சிவசக்தி

பராசக்தி மனேவாக்கைக் கடந்து அசையாது சடநிலையில் உள்ள பரப்பிரம்மத்தின் அம்சமாக இருக்கும்பொழுது நாமம் அற்று, ரூபம் அற்றுத் தோன்ரு நிலையில் இருந்து அருள்கின்ருள். தோன்றும் நிலையில் நாமரூபங்களோடு எண்ணற்ற அபாரசக்திகளாக பிரபஞ்சம் முழுவதும் ஊடுருவி நிற்கிருள். பிரபஞ்சத்தின் ஜீவநாடி அப்பெருமாட்டி எங்கும் வியாபித்துள்ள சக்தியாம் பராசக்தி மேலாம் ஆற்றலுடன் உலகம், உடல், உயிர்களைத் தாங்கி மெய்யுணர்வு வடிவாகி இலங்குகின்ருள். ஆருயிர்கள் வினைக்கீடாகப் பிறந்து உழலும் பதினுன்கு உலகங்களிலும் அவள் அருள் ஆணை செல்கின்றது. படைத்தல் முதலாம் ஐந்தொழில்களைச் செய்யும் ஐந்து ஆதாரமூர்த்திகளாலும் அவள் துணை இன்றி ஆவது ஒன்றில்லை. அவள் அருள் ஆணை இல்லாமல் திருவடிப் பேறு கைகூடச் செய்யும் செந்நெறியும் இல்லை.

**ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே**
**யோகங்கள் எங்கே உணர்வுஎங்கே — பாகத்து**
**அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்**
**பெருவடிவை யார்அறிவார் பேசு.**

என்பது திருக்களிற்றுப்படியார்.

பற்பல நதிகளும் வந்து அடைவதற்கு இடம் கொடுக்கும் கடலைப்போலே பல்சமயங்களுக்கும் இடமாய் உள்ள சித்தாந்த சமயத்தின் கண்ணே விளங்கும் ஞான ஒளியாகச் சிவசக்தியைக் காண்கின்றார் தாயுமானார். அந்த மதிவதனவல்லி, மதுசூதனன் தங்கை, வரைராஜனுக்கு இருகண்மணியாய் உதித்த மலைவளர் காதலிப்பெண் தரும் பேற்றையும் அதே பாடலில் சொல்கின்றார்.

**பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்**
**பக்கம்உண்டு எக்காலமும்**
**பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம**
**படரெனும் திமிரம்அணுகாக்**
**கதியுண்டு ஞானமாம் கதிருண்டு சதிருண்டு**
**காயசித் திகளும்உண்டு**
**கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்**
**கருத்தொன்றும் உண்டாகுமேல்**
**நதியுண்ட கடலெனச் சமயத்தை உண்டபர**
**ஞானஆ னந்தஒளியே**
**நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே**
**நானெனும் அகந்தைதீர்த்தென்**
**மதியுண்ட மதியான மதிவதன வல்லியே**
**மதுசூ தனன்தங்கையே**
**வரைரா ஜனுக்குஇருகண் மணியாய் உதித்தமலை**
**வளர்காத லிப்பெண் உமையே.**

அம்பிகையின் திருக்கரத்தில் அங்குசமும் பாசமும் அமைந்து இருக்கின்றன, அங்குசம் வெறுப்பின் அடையாளம்; விருப்பின் உருவமாக அமைந்தது பாசம். விருப்பு வெறுப்புக்களையே பாசாங்குசமாகத் தரித்தவள் எம்

பிராட்டி. நிலவுலகத்தைக் காமத்தின் வசப்படுத்தும் மாயாசொரூபி அவள்; அதனின் நின்றும் நீக்கும் ஞான சொரூபியும் அவளே! உலகத்தைக் காமத்தின் வசப் படுத்தும் வேலையைக் காமனால் நிகழ்த்துகிறாள். அவ்வாறே உலகம் ஞானம் பெற்று உய்யுமாறு ஞானக்கொழுந்தாம் விநாயகருக்குத் தன் பாசாங்குசங்களின் அம்சத்தை வழங் கித் திருவருள் புரிகின்றாள். உலக விளையாட்டைத் தொடக்கி வைப்பவளும் அதனை நிறைவேற்றிவைப்ப வளும் அந்த அம்பிகையே!

உலகத்திலே காண்கின்ற நிகழ்ச்சிகள் அத்தனை யும் சிவசக்தியின் திருவிளையாடல்கள். நம்மைப் புடம் போட்டு அவள் பொன்னாக்குகிறாள். துன்பம் தந்து தன்னடியில் அணைக்கிறாள். சிறப்பாகச் சொன்னால், குழந்தைகளாகிய நம்மை முதலிலே கிள்ளி விடுகிறாள். நாம் அழுகிறோம். தாலாட்டுப்பாடி இன்ப நித்திரை தரு கிறாள். போகம் தந்து மயக்குகிறாள். பின் தெளிவு தந்து ஆனந்தாநுபவம் உண்டாக்குகிறாள். அன்னை தரும் அநுபவ அதிசயம் சொல்ல முடியாதது. அபிராமிப்பட்டர் அப்பெருமாட்டியின் அருள் அநுபவத்தைப் பாடுகிறார்.

பொருளே பொருள்முடிக் கும்போக மே அரும் போகம் செய்யும்
மருளே மருளில் வரும்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்து
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி ஆகி இருக்கும் உன்றன்
அருள்ஏது அறிகின் றிலேன்அம்பு யாதனத்து அம்பிகையே.

அவள் மாபெருந் தெய்வம். பிரமதேவனுடைய உள் ளத்தில் உணர்வு ஏற்றி, நாவில் கலை ஏற்றி, கையில் உரம் ஏற்றி அவனைப் படைப்புத் தொழிலைச் செய்பவனாக ஆக்கி இயக்குபவள் மகாசக்தியாகிய சிவசக்தியே. படைத்தலை அடுத்துக் காத்தலையும் அவள் செய்கின்றாள். தேவி திருமாலை அதிட்டித்துக் காப்புத் தொழிலைச் செய்

கின்றாள். அதனாலேயே அவளுக்கு விஷ்ணு ரூபிணி, கோபத்ரி, கோவிந்த ரூபிணி என்ற திருநாமங்கள் வந்து அமைந்தன. அழித்தற் தொழிலிலும் உருத்திரனுடைய சக்தியாக நின்று அன்னையே அகில உலகத்தையும் சங்காரம் செய்கின்றாள். சுருக்கமாகச் சொன்னால், ஏனைய தெய்வங்கள் இயற்றும் தொழில்களுக்கு எல்லாம் மூல காரணமாக நிற்பவள் சிவசக்தி. சிவசக்தி நமக்கும் உள்ளத்தில் உணர்வு ஏற்றுகிறாள்; நாவில் கலை ஏற்று கிறாள் ; கையில் உரம் ஏற்றுகிறாள்.

சிவசக்தியின் பெருமையை வியந்த ஒரு திருவெம்பாவைப் பாடல் இங்கே நினைவுக்கு வருகின்றது.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
    போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
    வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன்
    கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
    ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன் என்பதனால் சிவசக்தியின் பெருமை தெரியவில்லையா ?

# சக்தி தழைக்கும் சிவம்

சிவநெறி பழமை உடையது; பெருமை உடையது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என மூன்று தொகுப்பாகச் சங்க இலக்கியத்தை வகுத்து இருக்கிறார்கள். கடவுளைப் பற்றிப் பேசப்படும் முழுநூலைச் சங்க இலக்கியங்களில் காண்டல் அரிதாக இருக்கிறதே என்று ஓர் ஆசங்கை எழலாம். சங்க இலக்கியங்களுள் எண்ணிறந்தன கடல்கோளுக்கு இரையாகி விட்டன என்று ஒரு விடை அதற்குச் சொல்லலாம். இன்னொரு விடையும் சொல்லலாம். சங்க காலச் சான்றோர் சமயத்தை அறிவு நிலையில் காணவில்லை; அநுபவ நிலையில் கண்டார்கள். உணர்வு நிலையில் விளங்கிய சான்றோர் வேறெப்படிக் காண்பார்கள்? சமயம் வெறும் கலையாகக் கருதப்படவில்லை. வாழ்க்கைக்கு வேறான பொருளாகச் சமயம் கருதப்படாத நிலையில் சமயாதீதப் பழம் பொருளாக இறைவன் எண்ணப்பட்டான்.

*உலகைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்*
*சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்*
*கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்*
*செயலைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.*

— திருவாசகம்.

என்று பாடும் நிலையிலே சங்ககாலச் சான்றோர்கள் விளங்கினார்கள். கண்ணப்பர் சங்ககாலச் சான்றோரே ஆவர் என்பாரும் உளர். அவருடைய வாழ்வு ஒன்றே உணர்வு நிலையாகிய வாழ்வே சமய வாழ்வு என்று காட்டித்தரவில்லையா? சங்ககால வாழ்வே சிவ வாழ்வாக மிளிர்ந்தது என்றால் தனியாகக் கடவுளைப் பற்றிப் பேசவும் வேண்டுமா? அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களின் அடிப்படையிலேயே அவர்கள் வாழ்வு சென்றது.

சோழன் நலங்கிள்ளி என்ற மன்னனுக்கு உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் அறிவுரை சொல்கின்ருர்.

*அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்*
*ஆற்றும் பெருமநின் செல்வம்*
*ஆற்ரு மைந்நிற் போற்ரு மையே.*

மன்னன் வாழ்வு அறம், பொருள், இன்பம் என்னும் குறிக்கோள் வழியில் நிகழ வேண்டும் என்ற அறிவுரை சமயத்தின் உயிர்நாடி. சங்க இலக்கியங்கள் எல்லாம் நல்ல சமய இலக்கியங்கள் என்றே சொல்லவேண்டும்.

பத்துப் பாட்டினுள் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப் படை கடவுளைப் பற்றிய நூலாகவே காணப்படுகின்றது. எட்டுத்தொகையுள் ஒன்ருகிய பரிபாடலும் கடவுளைப் பற்றிய பாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏனைய சங்க இலக்கியங்களிலேயும் இலைமறை காய் போல் கடவுள் நிலை பேசப்பட்டிருக்கின்றது.

புறநானூறு கடைச்சங்க காலத்தில் திரட்டப்பட்ட நூல் எனினும், தொல்காப்பிய காலத்துக்கு முன் எழுந்த பாடல்களும் பின் எழுந்த பாடல்களும் அங்கே இடம் பெற்றிருக்கின்றன. எனவே, தமிழகச் சான்ருேரின் சமயநெறியை அறிந்து கொள்வதற்குப் புறநானூற்றுப் பாடல்களும் துணைபுரியும்.

## சங்க இலக்கியங்களில் சிவன்

விண்ணிலும் மண்ணிலும் உள்ள அத்தனை பொருள்களும் சிவபிரானது இயற்கைத் திருக்கோலமாகும்; இப் பேருருத் தோற்றத்தின் முழுமுதல்வனுக இறைவனைக் கருதிய புறநானூற்றின் முதற்பாடல் இதோ;

*கண்ணி கார்நறுங் கொன்றை காமர்*
*வண்ண மார்பின் தாருங் கொன்றை*
*ஊர்தி வால்வெள் ஏறே சிறந்த*
*சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப*

கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு ஒருதிறன் ஆகின் றவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்
பிறைநுதல் வண்ணம் ஆகின் றப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர்அறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

சிவன் அருந்தவத்தோன்; அவனுக்குக் கண்ணியும் மாலையும் கொன்றை; ஊர்தியும் கொடியும் ஆனேறு; அவனுடைய கறைமிடறும் பெண்ணுருவாகிய திறனும் தலையிற் சூடிய பிறையும் அந்தணராலும் பதினெண் கணங்களாலும் புகழ்ந்து ஏத்தவும்படும். அதனால், நாமும் அவனை வந்தித்து வணங்கி வாழ்த்துதல் வேண்டும் என்று பாடிப் பெருந்தேவனார் நம்மை வழிப்படுத்தும் திறன் உய்த்து உணர வேண்டியதொன்றாகும்.

உலகம் முழுவதும் ஊடுருவிப்பாயும் திருவருள் ஆற்றலை நினைந்த தோற்றமே சிவபிரானின் திருக்கோலமாகக் கருதப்பட்டமையால், அம்முதல்வனுக்கே முதன்மை கொடுக்கப்பட்டது.

இந்த வரிசையில் இதோ ஒரு மதுரைக் காஞ்சி:

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகம் விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு

(மழுவாள் நெடியோன் - சிவபிரான்)

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னா நாற்பது என்னும் நூலில் கபிலதேவரும் இக்கருத்தைப் பாடுகிறார்.

*முக்கட் பகவன் அடிதொழா தார்க்குஇன்னா*
*பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகுஇன்னா*
*சக்கரத் தானை மறப்புஇன்னா ஆங்குஇன்னா*
*சத்தியான் தாள்தொழா தார்க்கு.*

மூன்று கண்களையுடைய சிவபிரான் திருவடிகளை வணங்காதவர்களுக்குத் துன்பம் உண்டாம். அழகிய பனைக்கொடியை உடையனாகிய பலராமனை நினையாமல் நடத்தல் துன்பமாம். திகிரிப்படையை உடையனாகிய மாயோனை மறத்தல் துன்பமாம். அவ்வாறே வேற்படையை உடைய முருகக்கடவுளின் திருவடிகளைத் தொழாதவர்களுக்கும் துன்பம் உண்டாம்.

சாவா மருந்தாகிய கருநெல்லிக்கனியை இனிய கவி பாடித் தமிழ் பரப்பும் ஔவையாருக்கு அதிகமான் என்னும் மன்னன் வழங்குகின்றான். அமிழ்தமாகிய கனியைத் தான் உண்டு வாழக் கருதாது தனக்கு உவந்தளித்த அதிகமானது வள்ளன்மையை வியந்து வாயார வாழ்த்துகின்றார் ஔவையார்.

*போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி*
*பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும நீயே......*

'இந்நெல்லிக் கனியின் அருமையையும் பெருமையையும் கருதாது எனக்குத் தந்து சாதலை நீக்கிய நீ, நீலமணி மிடற்றுக் கடவுள் (சிவபிரான்) போலே நிலைபெறுவாயாக' என்று ஔவையார் இறைவன் நஞ்சுண்ட நிகழ்ச்சியை நினைவூட்டிப் பாடி மகிழ்கின்றார்.

காரிகிழார் என்னும் சிவநேயச் செல்வர் பாண்டியனை வாழ்த்துகிறார்: "வேந்தே, நினக்கு எல்லா உலகினும் உருவும் புகழும் உண்டாகுக; நின் கோல் நடுநிலை நிற்க; நின் படை, குடி முதலியன சிறக்க; பகைப்புலத்து வென்ற நன்கலன்களைப் பரிசிலர்க்கு வழங்குக; முக்கட்

செல்வன் நகர் வலம் செய்தற்கண் நின் குடைபணிக; நான்மறை முனிவர் வாழ்த்துங்கால் சென்னி தாழ்வாயாக; பகைப்புலத்துச் சுடுபுகையால் நின்கண்ணி வாடுக; மகளிர் கூட்டத்தில் சினம் இன்றி மெல்லியனுகுக; மதியமும் ஞாயிறும் போல இந்நிலமிசை நிலைபெறுவாயாக." இவ் வாறெல்லாம் வாழ்த்துகின்றபோது,

*பணிஇயர் அத்தைநின் குடையே முனிவர்*
*முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே.*

என்று சிவபிரானின் திருக்கோயிலைக் காரிகிழார் நம்முன் நிறுத்துவதால் சிவவழிபாடும் சிவநெறியும் விளக்க முற்றிருந்ததென்பது தெற்றெனத் தெளிவாகின்றது.

இராவணன் கைலையைப் பெயர்க்க முயன்று அவ னால்அது முடியாமற்போன நிகழ்ச்சியைக் கலித்தொகை,

*இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்*
*உமைஅமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக*
*ஐயிரு தலையின் அரக்கர் கோமான்*
*தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை*
*எடுக்கல் செல்லாது உழப்பவன் போல*

எனப் பாடுகிறது.

கலித்தொகை திருவாதிரைக்கு உரியவன் சிவபிரான் என்றும் பாடுகிறது.

*அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த*
*பெருந்தண் சண்பகம் போல ஒருங்குஅவர்*
*பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்*
*மைஈர் ஓதி மடமொழி யோயே*

என்பது அந்தக் கலித்தொகை.

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந்து இரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்
கடந்துஅடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்

என்ற கலித்தொகை சிவபிரான் முப்புரம் எரித்த கதையைப் பாடிச் செல்கின்றது.

நக்கீரரும் புறநானூற்றிலே சிவனை ஏத்திப் போற்றிப் பாடுகிறார்.

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்என
ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வ ருள்ளும்

தமிழ்ப் பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இளங்கோவடிகளும் சாத்தனாரும் முறையே இக்கருத்துக்கு மேலும் அரண் செய்கின்றார்கள்.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

— சிலப்பதிகாரம்.

நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈருக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்

— மணிமேகலை.

இன்னோரன்ன பாடல்களால் சிவபிரானுக்கு நம் சான்ரோர் முதன்மை கொடுத்த செய்தி நமக்குத் தெரிகின்றது.

## சங்க இலக்கியங்களில் சக்தி

சிவபிரானைப் பாடுகின்றபோது உமை அம்மையையும் சேர்த்துப் பாடி இருக்கிறார்கள். மாணிக்கவாசகர் பாடும் தொன்மைக் கோலத்தை எடுத்த எடுப்பில் கடவுள் வாழ்த்திலேயே சங்கச் சான்றோர் பாடி இருப்பது அற்புதம்!

பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்.

— புறநானூறு - கடவுள் வாழ்த்து.

ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரிஅகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.

— அகநானூறு - கடவுள் வாழ்த்து.

*நீல மேனி வாலிழை பாகத்து*
*ஒருவன் இருதாள் நிழற்கீழ்*
*மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.*

— ஐங்குறுநூறு – கடவுள் வாழ்த்து.

உமை அம்மையைத் தனியாகக் காணும்போது அவள் காடுறை தெய்வமாகவும், துர்க்கையாகவும் சங்க இலக்கியங்களிலே பாராட்டப்படுகின்றாள். 'கானமர் செல்வி அருளலின்' எனக் கொற்றவையின் அருள்நலம் அங்கே பாராட்டப்படுகின்றது.

*சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்*
*செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்*
*கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து*
*மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய்.*

எனச் சக்தியாம் கொற்றவையை முன்னிறுத்தி இளங்கோவடிகளும் இனிதாகப் பாடுகிறார்.

பக்தர்களுக்குக் காட்சி தர வரும் போதெல்லாம் இறைவன் பார்வதி தேவியுடன் வந்த வரலாறுகள் பல உண்டு. திரிபுரம் எரிக்கப் புறப்பட்டபோதும் திரிபுராந்தகன் திரிபுரசுந்தரியையுமே அழைத்துச் சென்றிருக்கிறார். இறைவன் வரம் கொடுத்தாலும் அருளிய வரத்தை அவன் சக்தி தானே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்!

*தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்.*

என்ற திருவருட்பயனைச் சங்கச் சான்றோர் அறியாமலா இருந்திருப்பார்கள்?

## சக்தியின் அருட்பெருக்கம்

அண்டங்கள் அனைத்தும் சிவசக்தி மயமாக இருக்கின்றன. பிரபஞ்சம் மாயாசக்தியின் சொரூபம். உலகத்தைப் பற்றிய உண்மையை விளக்குவது மாயை. மாயை

என்னும் பதத்தைச் சூனியம், பொய், மித்தை என்று தப்பாகப் பொருள் படுத்தக் கூடாது. ஜகத் என்பதன் பொருள் மாறுபடும் தன்மை உடையது என்பதாகும். எப்போதும் உருமாறிக் கொண்டிருப்பதால் குறிப்பிட்ட ஒரு வடிவம் நிலைத்ததாக இருக்க முடியாது. வடிவம் மாறி அமைகின்றபோது, பெயரும் மாறி அமைகின்றது. ஆகவே, நாம ரூபங்கள் மித்தையே அன்றி ரூபங்களை எடுக்க வல்ல அந்தச் சக்தி மித்தையும் அன்று; சூனியமும் அன்று; பொய்யும் அன்று. அந்தச் சக்தி சிவத்தைச் சார்ந்த சிவ சக்தியாகும். சிவத்தைச் சக்தி விளக்குகின்றது. சக்திக்குச் சிவம் ஆதாரமாகின்றது. சிவம் இல்லாவிட்டால் சக்தியே இல்லை. எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள். சக்தியின் அருளினாலேயே உயிர்கள் சிவத்தை அறியவும் அடையவும் முடியும்; சக்தியின் அருள் தோய்ந்த அளவிலேதான் சிவத்தின் அருள் கிடைக்கும். இதனையே சித்தாந்த நூல்கள் சத்திநிபாதம் என்று பேசுகின்றன.

சத்திநிபாதத்தை — எம்பெருமாட்டியின் அருட்பொழிவை மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலே தேனினும் இனிக்கச் சொல்கின்றார். நம்மை அடிமையாக உடைய பெருமாட்டியினின்றும் பிரிதலில்லாத எம்பெருமானுடைய அன்பர்க்கு அம்மை திருவுளம் கொண்டு சுரந்து அருளும் இனிமை மிக்க அருட்பொழிவே போன்று மழை பொழிய வேண்டும் என்று மழை வேண்டி ஒரு திருவெம்பாவை எழுகின்றது மார்கழி நீராடலின் பொதுப்பயன் நாடு செழிக்க மழை வேண்டிப் பெறுதல்தானே! அங்கே சக்தியின் தொழிற்பாடும் ஏறுநடை போடுகிறது.

*முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்*
*என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்*
*மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்*
*பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்*

என்னச் சிலேகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

இத்திருப்பாட்டு மலபரிபாகம் வர இருவினே ஒப்பும் சத்திநிபாதமும் பெற்று, இறைவன் திருவருளேக் கூடிப் பேரின்பம் அடைவதைப் பாடுகிறது. இவை எல்லாம் சிவசக்தியால் நிகழ்வன என்பதையும், அன்னேயின் அருள் மழை பாச வெப்பத்தை ஒழிக்கும் என்பதையும் சொல்ல வந்த மணிவாசகப் பெருமான், சிவசக்தியின் அருட் பெருக்கை மழைக்கு உவமையாக்குவது சிந்தனேக்கு ஒரு சீரிய விருந்து. அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம் என்பதும் இத்திருப்பாட்டிலே தொனிக்கின்றது.

## ஸௌந்தர்யலகரி

ஸௌந்தர்யலகரியிலே சங்கரர் சக்தியின் அபாரசக்தியைப் பாடுகின்ருர். தேவியின் திருவுருவங்களுக்கு அபய வரத முத்திரைகள் இருப்பதில்லே. இதற்கு ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும். காரணத்தை நான்காம் சுலோகத்திலே சொல்கின்ருர் — "தாயே உன்னேத் தவிர ஏனேய தேவர்கள் எல்லோரும் அபயவரத முத்திரைகளேக் காட்டித் தத்தம் சக்திகளேப் பிரகடனப் படுத்திக் கொள்கின்ருர்கள். ஆனல், நீ ஒருத்தி மட்டும் அவ்வாறு அபிநயத்தின் மூலமாக உனது அபயப்பிரதானம், வரப்பிரதானம் இவற்றை வெளிப்படுத்தாது இருக்கின்ருய். ஏனெனில், பயத்திலிருந்து காப்பாற்றவும், வேண்டியதற்கு அதிகமாகவே பலனே அளிப்பதற்கும் காத்துக் கொண்டிருக்கும் சக்தி உன்னுடைய திருவடிகளிலேயே இருப்பதால், உன்னுடைய திருக்கைகளால் அந்தச் சக்தியைக் காட்ட வேண்டிய அவசியம் இல்லேயே!" என்று சங்கரர் அம்மையின் திருவடிகளின் அளப்பரிய சக்தியைப் பாடுகிருர்.

சங்கரரே சொல்வார்: "பரமேஸ்வரனுக்கும் காரியங்களைச் செய்வதற்குத் தகுதியை அளிக்கும் பராசக்தி இவளேதான். ஆகையால், பிரம்மா விஷ்ணு முதலியோரும் வணங்கும் ஸ்ரீ சக்தியை வணங்கித் துதிக்கப் பூர்வ புண்ணியம் வேண்டும். மங்களத்தைச் செய்யும் சிவசக்தி இல்லையேல் சங்கரனுக்கு அசைவதற்கும் இயலாது. பரப்பிரம்மத்துடன் இணைந்த பராசக்தியே, வேதத்தை அறிந்தவர்கள் உன்னையே பிரம்மாவின் பத்தினியான சரஸ்வதியாகவும் ஹரியினுடைய பத்தினியான இலக்குமியாகவும், சிவனுடைய பத்தினியான பார்வதியாகவும் கூறுகின்றார்கள். நீயே இம்மூவருக்கும் அப்பாற்பட்டவளாய், இத்தகையவள் என்று வர்ணிக்க முடியாதவளாய், அடைதற்கு அரிய அளப்பரிய பெருமையுடையவளாய் மகாமாயை எனப்பட்டவளாய் அனைத்துலகையும் ஆட்டி வைக்கின்றாய்."

## சக்தி தழைக்கும் சிவம்

இம் மாபெரும் சக்தியை அன்னையாக வழிபட்டு வருகின்றதொரு வழிபாட்டு முறை உலகு எங்கும் பரவி நின்றது. மொஹஞ்சதாரோ — ஹரப்பா என்ற இடங்களை அகழ்ந்து ஆராய்ச்சி செய்தபோது தாய்க் கடவுள் வழிபாட்டுச் சின்னங்கள் பல கிடந்ததாக அறிகின்றோம். சிந்து நதிக்கரை நாகரிகத்திலும் தாய்க் கடவுள் வழிபாடு சிறந்து விளங்கியது. எனவே, வேத வழிபாட்டுக்கும் முந்தியதாகவே இவ்வழிபாட்டைச் சொல்ல வேண்டியிருக்கின்றது.

உலகிலே அப்பெருமாட்டிக்குக் கோயில் எடுத்துக் கும்பிடுகின்றார்கள்; திருவிழாக் காண்கின்றார்கள்; சக்கரத்தில் ஆவாகனம் செய்து உபாசனை செய்கின்றார்கள்; மந்திர தந்திர யந்திரங்களால் வழிபாடு செய்கின்றார்கள். அன்பர்கள் எப்படி எப்படியோ தங்கள் தங்கள் உள்ளங்களிலே அழகு ஒழுக எழுதிப் பார்த்து அவளைத் தரிசித்து இன்புறுகின்றார்கள். அவளும் தன் தண்ணளியை எல்லோர்க்கும் பொழிகின்றாள். அப்

பெருமாட்டி துணையாகவும், தொழும் தெய்வமாக வும், தாயாகவும் இருக்கின்றாள். தாயின் வடிவம் தயை; தயையின் பிழம்பு தாய். இதை உணர்ந்தே அம் பிகையின் சகஸ்ரநாமம் எடுத்த எடுப்பிலே ஸ்ரீ மாதா என்று அவளைத் துதிக்கத் தொடங்குகின்றது. அம்பிகை யின் சாமர்த்தியங்கள் அளப்பில. ஆனால், எல்லாவற்றி லும் சிறந்ததாக நின்று நிலவுவது அம்மையின் அருள். அந்த அருளின் நிலையமே பெண்மைக் கோலத்தில் தாயாக நமக்குக் காட்சி தருகின்றது.

எல்லாப் பொருளும் அவளே. அஷ்டமாசித்திகளும் தெய்வமாகி விளங்குகின்ற பராசக்தியும், சக்தியைத் தம் மிடத்தே தழைக்கச் செய்த பரமசிவனும், முத்தி இன்ப மும், முத்தியைப் பெறுவதற்கு உரிய மூலமும், மூலமாகித் தோன்றி எழுந்த அறிவுமாகிய எல்லாமாக இருப்பவள் அவளே. அவள் அறிவினுக்குள்ளே இருந்து பாதுகாத்து வேண்டுவன தருகிறாள். அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் தருபவன் சிவன்; அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் தருபவள் தேவி. அக்கினிக்குச் சூடு-சூரியனுக்கு ஒளி - சந்திரனுக்குத் தண் நிலவு எப்படியோ அப்படியே ஆவாள் அவள். சிவனுக்குத் தேவி எனவே, சிவனுடன் இணைந்திருக்கும் சக்தியை வழிபடுவோர் உறுதிப்பொருள் நான்கினையும் பெறுவர் என்பது சொல்ல வேண்டியதில்லையே.

சித்தியும் சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே.

சமநிலை உள்ளம், பொதுமை நினைவு, உயர்ந்த குறிக்கோள், இறை உணர்வு முதலிய அருட்பண்புகளால் வளர்ந்த செந்தமிழ்ச் சைவச் செந்நெறிச் செல்வர்கள் சங்க காலத்துக்கு முன்னும் பின்னும் அன்னையைச் சக்தி தழைக்கும் சிவமாக ஏத்திப் போற்றி இருக்கிறார்கள். 'சக்தி இருந்தால் செய்; இல்லையானால் சிவமே என்று இரு' என்று நம்மவர் சொல்வதில் அரிய பெரிய தத்துவம் துள்ளி விளையாடுகிறது. மன்னுயிர் புவனம், ஏனை மற்றுள பொருளுக்கு எல்லாம் அன்னையாய் உதவி, நாளும் அவற் றினை வளர்த்து நிற்கும் அம்பிகையே சிவமாக இருக்கி றாள். சிவமூர்த்தி என்றுதானே லலிதா சகஸ்ரநாமம் பாடுகிறது. அம்பிகை சிவமூர்த்தி: சக்தி தழைக்கும் சிவம்.

# அமாவாசையில் பூரணசந்திரன்

## அபிராமிப்பட்டர்

ஓர் அற்புதமான கதை. ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்.

திருக்கடவூரிலே, அந்தணர் வகுப்பிலே, அமிர்தலிங்க ஐயர் என்பவர் ஒருவர். அவருக்கு அபிராமிப்பட்டர் என்ெருரு புதல்வர்; அவருடைய இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே திருக்கடவூரில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ அபிராமி அம்மை மேல் இவருக்கு ஒரு தனிப்பற்று. தேவி உபாசனை அமைந்த குடும்பத்தில் உதித்த அபிராமிப்பட்டர் அம்பிகைமேல் பக்தி விளைவினுல் பாடல்கள் பல பாடி வருகிருர். ஸ்ரீ வித்தியா உபாசனை செய்யும் அவர் சரியை, கிரியை என்னும் இரண்டு பாதங்களையும் கடந்து யோக நிலையில் நிற்கிருர். திருவருள் இன்பத்தில் திளைத்து, ஆனந்தாதிசய நிலையில் பித்தரைப்போலே உலாவி வருகிருர். ஊரார் இவரைப் பித்தர் என்றே முடிவு கட்டி விடுகிருர்கள்.

தஞ்சையில் இருந்து அரசாண்ட சரபோஜிமன்னர் தை அமாவாசைத் தினத்தன்று திருக்கடவூரில் அமிர்தகடேசுவரரையும், அபிராமி அம்பிகையையும் தரிசிக்க வருகிருர். அபிராமியின் சந்நிதியில் அபிராமிப்பட்டரைக் காண்கின்ருர். "இவர் யார்?" என்று அருகிலுள்ளவர்களை வினவுகிருர். "இவர் ஒரு பித்தர்; வேதநெறி பிறழ்ந்து ஒரு தேவதையை வழிபடுகின்றவர்" என்று சொல்கிருர்கள் அருகில் நின்ருேர். அபிராமிப்பட்டரோடு பேசவேண்டும் என்று விரும்பிய மன்னர், "இன்று அமாவாசை உண்டா?" என்று கேட்கிருர். அம்பிகையின் திருக்கோல நினைவிலேயே ஈடுபட்டிருந்த பட்டர், "இன்று பௌர்ணமி" என்று விடை சொல்கிருர். எல்லோருக்கும் சிரிப்பு வருகிறது. அறிவு தடுமாறிய பித்தர் என்றே முடிவு செய்கிருர் மன்னன். ஒளி மயமாக எழுந்தருளி

இருக்கும் அம்பிகையின் திருவருள் இன்பத்தில் திளைத்து வாழ்கின்ற அபிராமிப்பட்டர், உலக உணர்ச்சி உற்றபோது தாம் தவறாகப் பௌர்ணமி என்று சொல்லி விட்டதை எண்ணி எண்ணி மனம் வருந்துகிறார். தம் நிலைக்கு இரங்குகிறார் தாம் அப்படிப் பேசியதும் அம்பிகையின் திருவருளே என்று எண்ணிப் பாடத்தொடங்குகிறார். அபிராமியின் பெருமையும், அவர் அநுபவ நிலையும் பாடல் களில் அலைபோடுகின்றன.

பட்டருடைய தோற்றம், அவர் நெற்றியில் இருந்த ஒளி மன்னன் உள்ளத்திலே பதிந்து கிடக்கின்றன. மன்னனுக்கு என்றும் இல்லாத சிந்தனை ஓடிக்கொண் டிருக்கிறது. முன் இரவிலே தூக்கம் வருகிறது. கனவு ஒன்று காண்கின்றார். அபிராமி அம்மை எதிரே நிற் கிறாள். தன் திருத்தோட்டைக் கழற்றிக் கீழ்த்திசையிலே வீசி எறிகிறாள். அது கீழ் வானத்திலே அமாவாசை இருட்டில் முழுமதியைப் போல் சுடர்விட்டு நிலவு பொழி கின்றது. "இதோ பாருங்கள்; பூர்ணசந்திரன் நிலவு பொழிகின்றான்; இன்று பௌர்ணமி தானே" என்று காட்டுகிறார் அபிராமிப்பட்டர்.

அபிராமி அந்தாதி

கனவிலே அம்பிகை தரிசனம் மன்னருக்கு இவ்வாறு தெரிகிறது. கனவிலிருந்து விழித்துக் கொள்கிறார். கன விலே கண்ட காட்சி அவரை வியப்பில் ஆழ்த்தி உள் ளத்தைக் கவர்கின்றது. அம்பிகை தரிசனம் கனவிலே கிடைத்தமையை நினைந்து நினைந்து அன்பே நிறைந்து நிறைந்து உருகுகிறார். அபிராமிப்பட்டருடைய அளவில்லாத பெருமையை எடுத்துக் காட்டவே அம்பிகை கனவிலே தோன்றினாள் என்ற முடிவுக்கும் வருகிறார்; அபிராமிப்பட்டரின் பெருமையை உணர்ந்த மன்னன் பட்டரின் இல்லத்துக்கே வந்துவிடுகிறார். அபிராமிப்பட் டரைத் தொழுது வணங்கி எழுகிறார். அபிராமி அந்தாதி பாடிக்கொண்டிருக்கிறார் பட்டர். "தங்கள் பெருமையை

உணராத காரணத்தால் தங்களைப் புறக்கணித்தேன். தங்களால் அன்றோ அபிராமி தரிசனம் அடியேனுக்குக் கிடைத்தது; என்னை மன்னித்தருள வேண்டும்'' என்று நிகழ்ந்ததை விளக்கமாகச் சொல்கின்றார் மன்னன். ''எல்லாம் அம்பிகை திருவருள்; அப்பெருமாட்டியையே இப்போது பாடிக்கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அந்தாதியில் எழுபத்தொன்பதாவது பாடலைப் பாடுகிறார். இதோ அந்தத் திருப்பாடல் :

*விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன*
*வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்குஅவ் வழிகிடக்கப்*
*பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்*
*குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடுஎன்ன கூட்டினியே.*

'அபிராமி வல்லியின் திருவிழியில் எமக்கு வழங்கும் திருவருள் இருக்கின்றது. அவ்வருளைப் பெறும்பொருட்டு வேதங்கள் வகுத்துக் கூறியுள்ள நன்னெறியின்கண் நின்று அவளை வழிபட்டுத் தியானிக்க நெஞ்சம் இருக்கிறது. அந்த வேதநெறி இருக்கவும், பழிச்செயல்களிலே ஈடுபட்டுக் கொடிய பாவங்களை எல்லாம் செய்து பாழான நரகக் குழியில் அழுந்துகின்ற கயவர்களோடு என்ன சம்பந்தம் இனி நமக்கு உண்டு' என்ற மிடுக்கிலே பாடல் வருகிறது பாடல்கள் அந்தாதியாகி, நூறாகிப் பெருகிப் பெரும் பயனுடன் சேர்கின்றன.

சரபோஜி மன்னன் பாடல்களில் தம்மை மறந்து இருக்கிறார்; மகிழ்ச்சி பெருகுகிறது. அபிராமிப்பட்டருக்குச் சில விளைநிலங்களை மானியமாகக் கொடுக்க முன்வருகிறார். ஏற்றுக் கொள்ள மறுக்கிறார் பட்டர். தங்கள் சந்ததியாரின் நன்மைக்காகவாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வேண்டுகிறார் மன்னன். ஒருவாறு இசைவைத் தெரிவிக்கிறார் பட்டர். வருஷம் ஒன்றுக்கு வேலிக்கு எட்டுநாழி நெல் அவருக்கும் அவர் சந்ததியாருக்கும் அளிக்கும்படி சாசனம் எழுதிக் கொடுக்கிறார் சரபோஜி மன்னர்.

## அடியார் நடுவில் இருக்கும் அருள்

அபிராமி அந்தாதியிலே பட்டரின் பக்தியும், அம்பிகையின் பெருங் கருணையும் இழை ஓடுகின்றன. அவருடைய ஆனந்த அநுபவம் ஆங்காங்கே ஏறுநடை போடுகின்றது. அம்பிகையின் அருளால் அடையும் பேற்றையும், அடியார்களின் இயல்பையும், அம்பிகையின் அழகு ஒழுகு கோலத்தையும் பாடிப் பாடி நம்மையும் பாடவைக்கின்றார் பட்டர். பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே செய்து, பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் கூட்டத்துடன் சேர விடாது தடுத்த புண்ணியத்தையும் பாடுகிறார்.

'கூட்டத்தில் கோவிந்தா போடுவது' பக்திக்கு அடிப்படையான பயிற்சியாகும். மணிவாசகர் திருவாசகத்திலே, 'அடியேன் உன்அடியார் நடுவில் இருக்கும் அருளை வழங்க வேண்டும்' என்று வேண்டுவார்.

*உடையாள் உன்றன் நடுஇருக்கும் உடையாள் நடுவுள் நீஇருத்தி*
*அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன்உன்*
*அடியார் நடுவுள் இருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்*
*முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.*

அடியார் நடுவில் இருப்பதே ஒரு தனிப்பேறு. அதற்கும் பூர்வபுண்ணியம் வேண்டும்.

*"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே"*

என்ற தாயுமானாரின் குரல் சத்சங்கத்தின் ஏற்றத்தைத் தானே எடுத்துச் சொல்கின்றது. அடியார்கள் சிவ வண்ணமே ஆனவர்கள். அவர்களின் நடுவில் இருந்து நலம்பெற வேண்டும் என்ற உள்ளக் கிளுகிளுப்பைப் பாட்டாக வடிக்கிறார் அபிராமிப்பட்டர். முற்பிறவியில்

செய்த புண்ணியத்தின் பயனுக அபிராமி அம்மையைத் தரிசிக்கும் அன்பு கிடைத்தது என்று பாடிவிட்டு, அடியார் நடுவுள் இருக்கும் உறவு திருவருளால் வருவது என்றும் சுட்டிக் காட்டுகிருர். இறைவன் திருவருளே சத்சங்கத்தைக் கூட்டுவிக்கும்.

*வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும்*
*வந்து இறைஞ்சிப்*
*பேணுதற்கு எண்ணிப எம்பெரு மாட்டியைப்*
*பேதைநெஞ்சில்*
*காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக்*
*காணும்அன்பு*
*பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன் ருேமுன்செய்*
*புண்ணியமே.*

ஞானத்திருவிழி உடையாளை, விண்ணவர் யாவரும் தேடி வந்து விரும்பி வழிபடுவதற்கு எண்ணிய எம்பிராட்டியை, பேதையாகிய என் மனத்தில் காணுதற்கு நெருங்கியவள் அல்லாத கன்னியைத் தரிசிக்கும் அன்பு அடைவதற்கு எண்ணிய எண்ணம் முற்பிறவியில் நாம் செய்த புண்ணியம் அன்ருே?

*புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்*
*கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்*
*நண்ணிஇங் கேவந்து தம்அடி யார்கள் நடுஇருக்கப்*
*பண்ணிநம் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.*

'மனமே, அபிராமி அம்மையும், சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானும் நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினுல் இங்கே வந்து தம்முடைய அடியார்களிடையே இருக்கும்படி செய்து, திருவடிகளைத் தலைமேற் பதிப்பதற்கு நல்ல புண்ணியச்

செயல்களை முன்னமே செய்திருக்கிறோம்' என்பது அவரின் உள்ளக் கிளுகிளுப்பு.

உள்ளத்திலே அன்னையின் கோலக்காட்சி கிடைத்ததும், அடியார் நடுவில் இருக்கும் பேறுபெற்றதும் தாம் செய்த புண்ணியம் புண்ணியம் என்று வியந்து பாடுகிறார் பட்டர்.

## அபிராமி சமயம்

பிரமதேவனுடைய உள்ளத்தில் உரம் ஏற்றி, நாவில் கலை ஏற்றிப் படைப்புத் தொழிலைச் செய்கின்றாள் சக்தி. பிரமதேவனிடம் இருக்கின்ற அந்தப் பேராற்றல் ஈரேழு உலகத்தையும் படைத்து விடுகிறது. படைத்துவிட்டால் போதுமா? படைத்த உலகத்தைக் காக்கின்ற கடமையையும் அந்தப் பராசத்தியே மேற்கொண்டிருக்கிறாள். படைத்தவள் காக்காமல் இருக்க முடியுமா? திருமாலை அதிட்டித்து உலகையே பாதுகாக்கும் பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறாள். அத்துடன் அவள் வேலை முடிந்து விடுகிறதா? இல்லை. அகில உலகத்தையும் உருத்திரனுடைய சத்தியாக இருந்து சங்காரம் செய்கிறாள். இதை விளக்கமாகச் சொன்னால், பிரபஞ்சத்தைப் படைக்கிறாள்; காப்பாற்றுகிறாள்; பின்னர் தனக்குள் அடக்கிக் கொள்கிறாள். சங்காரத்தைத் தொடர்ந்து படைப்பு மீண்டும் நிகழ்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் தொழில்கள் ஒருமுறை மட்டும் நிகழ்வன அல்ல. சக்தியின் பேராற்றலினால் முத்தொழில்களும் பிறழாது மாறி மாறி நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

மூன்று தொழில்களுக்கு உரிய மூன்று மூர்த்திகளும் அவளே. அந்தத் தெய்வ சக்தியே உட

லோடு உயிரைக் கூட்டுகிறது; காப்பாற்றுகிறது; பின் நீக்குகிறது.

மேலும், சக்தி தத்துவத்துக்குப் பின் சதாசிவ தத்துவம் தோன்றும். எனவே, சதாசிவத்துக்குச் சக்தி மூத்தவள்; கறைக்கண்டனுக்கு மூத்தவளாக இருக்கும் பெருமாட்டி, மூவா முகுந்தனுக்கு இளையவளாகவும் இருக்கிருள். என்றுமே மூப்பை அடையாதவர் திருமால்-மூவாமுகுந்தன். அவருக்குப் பராசக்தி சகோதரி என்று புராணங்கள் விதந்து ஓதும். இவள் செய்த தவமே தவம். பார்வதியாக அவதரித்தபோது பரமேஸ்வரனைத் திருமணஞ்செய்ய அவள் செய்த தவம் மாபெரும் தவம் தானே!

இத்தகைய பிராட்டி இருக்கும்போது வேருெரு தெய்வம் நமக்கு எதற்காக என்ற எக்களிப்பிலே ஒரு பாடல் எழுகின்றது.

*பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்*<br>
*காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்ட னுக்கு*<br>
*மூத்தவ ளேஎன் றும் மூவா முகுந்தற்கு இளையவளே*<br>
*மாத்தவ ளே உன்னை அன்றிமற் ருேர்தெய்வம்*<br>
*வந்திப்பதே*

'தேவியின் புகழைப் பாடிப் பக்தி பண்ண என்ன புண்ணியம் செய்தேன்; கன்னியைக் காணும் அன்பு பூணுதற்கு எண்ணிய எண்ணம் முன் செய்த புண்ணியம் என்று பூரிக்கின்ருர்; அடியார்களுடன் கூடித் தேவியின் பரமாகம பத்ததியைப் பன்னிய பட்டர் முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் என்று பெருமிதம் அடைகிருர். முத்தொழிலைப் புரிபவளும் நீலகண்டனுக்கு மூத்தவளும், மூவாமுகுந்தனுக்கு இளையவளும் மகா தபஸ்வினி (பெரும் தவத்தினை உடையவள்) யுமாகிய பெருமாட்டி

இருக்கும்போது வேறு ஒரு தெய்வத்தை வணங்கவும் வேண்டுமா' என்று சங்க நாதமும் எழுப்புகிறுர். இத்தனையும் அவர் சித்தத்திலே ஏறுநடை போடுகிறபோது— "நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்" என்ற நினைவு நெஞ்சிலே ஊறி இரத்தத்திலே ஓடி இருதயத்திலே அடிக்கிறபோது —

*கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல் லாதன்பர்*
*கூட்டம்தன்னை*
*விள்ளேன் பரசமயம்விரும் பேன்வியன் மூவுலகுக்கு*
*உள்ளேஅனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த*
*கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.*

என்று அவர் பாடுவதில் வியப்பு என்ன இருக்கிறது? இந்த நெஞ்சு உறுதியைக் கொடுத்தவள் அபிராமி. விழி நீர் மல்க—மெய் புளகம் அரும்ப — ஆனந்தமாகி ஆன்ம போதம் நீங்க — வார்த்தைகள் தடுமாற நினையாது சொன்னவையையும் பொருளுடையன ஆக்கி அன்பர்களை அவள் பித்தராக்கி விடுவாள் என்றுல் அபிராமி சமயம் நல்லது தானே!

*விரும்பித் தொழும் அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்*
*அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி அறிவிழந்து*
*சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்ன*
*எல்லாம்*
*தரும்பித்தர் ஆவர்என் றுல்அபி ராமி சமயம்நன்றே.*

உண்மைச் சிவானுபவச் செல்வர்கள் தம்மை மறந்து கூறியனவும் பலிக்கும் என்பதைச் சொல்லாமற் சொல்ல வந்த பட்டர் "நல்லன எல்லாம் தரும்" என்றும் பாடுகிறுர்.

*தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா*
*மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில்*
*வஞ்சம் இல்லா*
*இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே*
*கனம்தரும் பூங்குழ லாள் அபி ராமி கடைக்கண்களே.*

என்று அவர் பாடுகிறபோது அபிராமி சமயத்தை நாமும் இறுகப் பிடித்து ஒழுக வேண்டும் என்று தோன்றவில்லையா?

மறை தேட நின்ற பிராட்டி ஆனந்தமாய் அறிவாய் நிறைந்த அமுதமாய் நிற்பாள். அவள் புவனம் பதினான்கையும் காத்தவள்; கரந்தவள்; கறைக்கண்டனுக்கு மூத்தவள், மூவாமுகுந்தற்கு இளையவள்; சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப்பூங் கொடி; பிறவிப் பெரும்பிணிக்கு மருந்து; அடியார் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து; கடவுளர் யாவர்க்கும் மேலைஇறைவி; அண்டம் எல்லாம் உய்ய அறம் வளர்க்கும் பெருமாட்டி. எல்லாப் பொருளும் அவள்; எல்லா ஆற்றலும் அவள்; எல்லாக் கடவுளும் அவள். அவளைப் பணிந்த பின் வேறொருவரைப் பணியவும் வேண்டுமா?

*மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்பே.*

ஆம்; அவள் திருவடியைப் பணிந்தால் நல்லன எல்லாம் தருவாள். அவள் வள்ளன்மை அத்துணைப் பெருமை வாய்ந்தது. குறைவிலா நிறைவாய்க் கோதிலா அமுதாய் விளங்கும் பிராட்டி அண்டினவர்களை ஆதரிக்க இருக்கும்போது வேறொருவரைப் பணிய வேண்டிய தேவை இல்லையே!

**பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்**
**இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்**
**மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்**
**முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.**

"மும்மூர்த்திகளும் பிறர் யாவரும் வணங்கிப் போற்றித் துதிக்கும் அரும்புகின்ற புன்னகையை உடைய பிராட்டி, பக்குவம் பெற்று அப்பக்குவத்தில் உள்ளம் உருகி நின் திருவடியில் பற்றுக்கொண்டு திருவுள்ளத்துக்கு உவப்பான நெறியிலே ஒழுகும்படி அடியேனை ஆட்கொண்டாய்; எனவே, இனிமேல் நான் வேறொருவர் சமயக்கொள்கையைப் பெரிது என்று எண்ணி மதிமயங்கி அறிவு கலங்கேன்; அவர் போன சமயநெறியிலும் செல்ல மாட்டேன்."

மும்மூர்த்திகளும் பிறர் யாவரும் வணங்கித் துதிக்கும் தேவி ஆட்கொண்ட பட்டர் வேறு எப்படிப் பாடுவார்?

அபிராமி சமயத்தில் நிற்போர்க்கு இருக்கும் முறுகிய பக்தியும் ஆனந்தாதிசய வெறியும் நாம் கற்பனையில் காணமுடியாதன.

## திருவருள் நாடகம்

அபிராமிப்பட்டருக்கே தாம் பெற்ற ஆனந்த அநுபவ அதிசயம் பெருவியப்பாக இருக்கிறது. இந்த அநுபவம் எளிதில் கிடைத்துவிடாது. அன்னையின் பிரபாவத்தில் உள்ளம் மிதப்பதற்குப் பல படிகள் கடந்தாக வேண்டும். அந்த அநுபவம் புலன் பொறிகடந்த இன்பம். அந்த இன்ப அநுபவத்தை 'சொல்லொணாதிந்த ஆனந்தமே' என்றும் 'சொல்லுகைக்கு இல்லை என்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும் எல்லை' என்றும் அலங்காரத்திலே பாடுகின்ற அருணகிரியார்,

*செவ்வான் உருவில் திகழ்வே லவன்அன்று*
*ஒவ்வா ததென உணர்வித் ததுதான்*
*அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்*
*எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே.*

என்று அநுபூதியிலேயும் பாடுவார். அவர் அந்த அநுபவத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல முடியாத நிலையிலே, "நான் நின் அருளால் பெற்ற இன்பம் பெரிது; பெரிது அந்த இன்பத்தை நுகர எனக்கு முடிந்ததே அன்றி, அது எவ்வாறு இருந்தது என்று சொல்ல இயலவில்லை. நான் பெற்ற இன்ப அநுபவ நலத்தை நீயும் நானும் அறிவோம். அதனைப் பிறர்க்கு எடுத்துச் சொல்ல என்னால் முடியவில்லை. எனவே, அந்த இன்ப அநுபவத்தை நீயே சொல்லி அருள வேண்டும் என்று முருகப்பெருமானை வேண்டுகிறார்.

*உல்லா சநிரா குலயோ கவிதச்*
*சல்லா பவினோ தனும்நீ அலையோ*
*எல்லாம் அறஎன் னைஇழந் தநலம்*
*சொல்லாய் முருகா சுரபூ பதியே;*

என்பது அந்த அநுபூதி.

அம்பிகையின் திருவுருவத்தைத் தியானம் செய்து மெய்யுணர்வு பெற்றவர் அபிராமிப் பட்டர். அவர் அந்தப் பெருமாட்டியோடு இரண்டறக் கலந்து பரமசுகம் பெறும் நிலை பெற்றவர். திருவருட் பெருக்கால் தன்னை மறந்தவர்; தன் நாமம் கெட்டவர். தித்தித்திருக்கும் அமுது கண்டவர். 'என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டது இவ்வுடம்பு' என்ற நிலையில் இன்பம் நுகர்ந்தவர். எல்லாம் இழந்து சும்மா இருந்தவர். அவருக்கு இருந்த எக்களிப்பிலே சொல்லொணாதிருந்த ஆனந்தத்தைத் திருவருள் நாடகம் என்றே பாடுகிறார். இறைவன் ஆற்றும் செயல்கள் எல்லாம் திருவிளையாடல்கள்; அத்திருவிளையாடல்கள் திருவருள் நாடகம் தானே! 'உள்ளத்தே விளைந்த கள்ளால் உண்டான களியிலே' மிதந்த அவரின் திருவருள் நாடகப்பாடல் இதுதான்!

*கூட்டிய வாஎன்னைத் தன்அடி யாரில் கொடியவினை*
*ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்*
*காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா*
*ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.*

'ஒன்றுக்கும் பற்றாத என்னைத் தன் அடியாருள் ஒருவனாகச் சேர்த்தருளியவாறும், என்பால் உள்ள கொடிய இருவினைகளையும் போக்கியவாறும், எனக்கு அருள் தர ஓடி வந்தவாறும், திருக்கோல எழிலை உள்ளவாறு காட்டி அருளியவாறும், அந்தக் கோலக் காட்சியைத் தரிசித்துக் கண்ணும் மனமும் களிக்கின்றவாறும், இவ்வாறு எல்லாம் என்னைத் திருவருள் நாடகம் ஆட்டியவாறும் என்ன அதிசயம்' என்று அதிசயப் பெருக்கோடு பாடுகின்ற இந்தப் பாடல்,

*பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம் அறுத்து அருளிப்*
*பித்தன் இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே*
*சித்தம்என னும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த*
*வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.*

என்ற திருவாசகத்தின் எதிரொலியாக அல்லவா அமைகின்றது!

## அமாவாசையில் பூரணசந்திரன்

பக்திச் சுவை ததும்பும் அபிராமி அந்தாதி ஒரு பாராயண நூல். இதனைப் படித்துப் பாராயணம் செய்து நல்வாழ்வு பெற்றார் பலர்; நினைத்தது எல்லாம் பெற்றார் பலர்; பெரும்புகழும் பெருநிலையும் பெற்றார் பலர்.

*"உருஎனவும் அருஎனவும் உளதுஎனவும் இலதுஎனவும்*
*உழலுவன பரசமய கலைஆர வாரம்அற*
*உரை அவிழ உணர்வுஅவிழ உளம்அவிழ உயிர் அவிழ*
*உளபடியை உணரும்"*

நிலையிலே திருவருள் இன்பத்தில் திளைத்து ஆனந்தாதிசய வெறியினால் பித்தரான பட்டரின் அநுபவம்

அவர் பாடல்களிலே கொப்புளித்துக் குமிழி இட்டு மணக்கிறது. கருவிகரணங்கள் கழன்று நிற்கும் ஆனந்த அநுபவத்தால் 'அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்ற நிலைபெற்றுப் பேசா அநுபூதியில் ஒன்றி நின்ற நிலையிலே அபிராமி அந்தாதி எழுந்தது.

ஒன்றே நினைந்திருந்து ஒன்றே துணிந்து ஒழிந்து ஒன்றே உள்ளத்தின் உள் அடைத்த அபிராமிப்பட்டர் தெய்வம் ஒன்றே என்ற பேருண்மையைக் கண்டவர். அபிராமி அம்மையின் திருக்கோலம் அல்லால் வேறொன்றையும் காணாத பட்டர், 'பரசமயம் விரும்பேன்' என்று பாடினால் அது சமயக் காழ்ப்பு ஆகாது, சர்வாந்தர்யாமியாய் சர்வவியாபியாய் வீற்றிருக்கும் அம்மை ஆனந்த உருவாக நெஞ்சகத்தே இடம்பிடித்தபோது ஏற்படுகின்ற மதோன் மத்தமான நிலையிலே அவர் அப்படிப் பாடுகிறார். அவர் உள்ளத்தே நின்று ஆனந்த ஊற்றாகப் பெருக்கு எடுக்கும் அம்பிகையின் திருவருள் அவரை அப்படிப் பாடச் செய்தது.

அன்னை தனக்கு அருள் செய்தது தன் பக்குவத்துக்கு மிஞ்சியது; தன் பக்குவத்தை நினையாமலே அம்பிகை தன்னை ஆண்டு கொண்டாள் என்ற ஆனந்த அதிசயம் இன்னொரு பாடலாக ஓடிவருகிறது.

*நாயேனையும் இங்கு ஒருபொருள் ஆக நயந்துவந்து*
*நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ள*
*வண்ணம்*
*பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்*
*தாயே மலைமகளே செங்கண் மால்திருத் தங்கச்சியே.*

"நாய் போன்ற என்னையும் நீ இங்கே நின்பார்வைக்கு உரிய பொருளாகத் திருவுள்ளம் கொண்டு விரும்பி வலியவந்து இவனை ஆட்கொள்ளலாகும், ஆகாது என்று ஆராயும் நினைவு இல்லாமல் அடியேனை அடிமை கொண்டாய்" என்று எக்களிப்போடு சொல்கிறார் பட்டர். உண்மையைச் சொல்லப்போனால், பக்குவத்தால்

உயர்ந்த பக்தர்கள் அப்படித்தான் சொல்வார்கள். பழுத்தமனத்தடியார், 'எனக்கு என்ன பக்குவம் இருக்கிறது' என்று தம்மைத் தாழ்த்தியே சொல்வார்கள். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் ஒன்று இங்கே நினைவுக்கு வருகின்றது:

*யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்*
*யாவர்க்கும் கீழாம் அடியேனை — யாவரும்*
*பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்*
*மற்றறியேன் செய்யும் வகை.*

மணிவாசகப் பெருமானார் "யாவர்க்கும் கீழாம் அடியேனை" என்று பாடுவது நம்மேற் கொண்ட பெருங் கருணை; உலகில் உள்ள உயிர்கள் உய்ய வேண்டும் என்ற தனிப்பெருங் கருணையால் நம்குறைகளைத் தம்மேல் ஏற்றி அருளாளர்கள் பாடுவார்கள் 'சிங்கார மடந்தையர் தீநெறி போய் மங்காமல் எனக்கு வரம் தருவாய்' என்று அருணகிரியார் பாடுவார் காமம் என்ற பெரு நோயால் விளையும் கேடுகளைப் பல இடங்களில் அவர் பாடி இருப்பதைப் போல் வேறு யாரும் பாடவில்லை என்றே சொல்லலாம். அவை எல்லாம் அவருடைய நேரடியான அநுபவம் என்ற முடிபுக்கு ஒருபோதும் வரக் கூடாது. அவர் நமக்காக அல்லவா அத்திருப்பாடல்களைப் பாடினார்! பொல்லாத பிள்ளைகளாகிய நாம் பாடிப் பாடி முருகனிடமே விண்ணப்பித்துக் கொள்ளவேண்டிய பாடல்கள் அவை.

*ஐயா அருணகிரி அப்பா உனைப்போல*
*மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?*

என்றுதானே தாயுமானுர் வாயூறிக் கேட்கிறுர்! அப்பாடல்கள் எல்லாம் நம் வாழ்வுக்கு நல் மருந்து.

பக்தி நலம் குமிழிவிடும் அபிராமி அந்தாதி திருவருள் நலனைக் கூட்டுவிக்கும்; உலகப் பொருள்களை நாடி அலைந்து அழிய விடாது, சேவடி படரும் செம்மல் உள்ளத்தைத்

தந்து உதவும். அந்தாதி இல்லாத அம்மைக்கு அமைந்த இந்த அந்தாதியில் ஆனந்த அநுபவநிலை அடிதோறும் மணக்கிறது. பாடல்கள் எளிமையாகவும் சொற்பொருள் சிக்கல் இல்லாது தெளிவாகவும் இருப்பதால், கற்பவர்கள் அடையும் இன்பம் ஒரு தனி இன்பம். ஆற்று நீரோட்டம் போலே தட்டுத்தடங்கல் இல்லாது பட்டரிடம் இருந்து அருள்பெருக ஓடிவந்த பாடல்கள் நமக்குக் கிடைத்த தேவாமிர்தம் சுருக்கமாகச் சொன்னால், சித்தம் சிவமாக்கும் அபிராமி சமயத்தினால் நெஞ்சில் இருக்கும் அமாவாசை இருள் ஒழியும்; அங்கே பூரணசந்திரன் உதயமாவான்.

**ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்**
**பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்**
**காத்தாளை அங்குச பாசம் குசுமம் கரும்பும்அங்கை**
**சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு**
**தீங்கில்லையே.**

# வெற்றிச் சக்தி வீரமகாகாளி

புரட்டாதி மாதத்திலே பூர்வபக்கப் பிரதமைத் திதி முத லாக உள்ள ஒன்பது இரவுகளை நவராத்திரி என்று அழைக்கின்றோம், பத்தாம் நாள் விஜயதசமி எனப்படும். இதனைத் தசரா என்றும் அழைப்பார்கள்.

''சர்வசக்திக்கும் சக்தியாக விளங்குகின்ற மகாசக்தி யைப் பக்தன் மூன்று அம்சங்களிலே வழிபடுகின்றான். இச்சா சக்தியைத் துர்க்கை அல்லது மகாகாளி என்றும், கிரியா சக்தியைத் திருமகள் என்றும், ஞானசக்தியைக் கலைமகள் என்றும் பக்தன் வந்தித்து வணங்குகின்றான். பிரபஞ்சத்தின் ஜீவநாடியாம் அன்னை பராசக்தியை நவ ராத்திரியின் முதல் மூன்று நாள்களிலும் மகாகாளி அல்லது துர்க்கையின் வடிவத்திலேயும் இரண்டாவது பகுதியாகிய மூன்று நாள்களிலும் மகாஇலட்சுமி வடி வத்திலேயும் கடைசி மூன்று நாள்களிலும் மகாசரசுவதி யின் ரூபத்திலேயும் நினைந்து வழிபாட்டுமுறை நிகழ்ந்து வருகின்றது. இந்த மூன்று தத்துவங்களும் ஒன்றுபட்ட நிலை ஆதிமூலசக்தியாகிய சண்டிகாதேவி. தேவி சாந்த நிலையில் உமைஅம்மையாகவும் பயங்கரநிலையில் துர்க்கை யாகவும் காளியாகவும் மகிஷாசுரமர்த்தனியாகவும் காட்சி தருகின்றாள். சரசுவதி ரூபத்தில் பிரம்ம சக்தியாகவும், இலட்சுமியின் வடிவத்தில் விஷ்ணு சக்தியாகவும், பார்வதி ரூபத்தில் சிவசக்தியாகவும் அன்னை தோற்றம் அளிக் கின்றாள். துர்க்கை வீரத்துக்கும், இலட்சுமி செல்வத் துக்கும், சரசுவதி கல்விக்கும் உரிய தெய்வங்களாகும்'' என்றெல்லாம் சக்திக்கு விளக்கம் கொடுக்கிறார்கள்.

## ஆக்கம் தரும் அன்னை

அன்னையைச் சர்வ சம்ஹாரிணியாக வழிபடும் முறையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். காளிதேவி யைப் படத்திலே பார்க்கின்றபோது அச்சம் உண்டா கத்தான் செய்கின்றது. தொங்கிக் கொண்டிருக்கும் சிவந்த நாக்கு, கபால மாலை, வெட்டிய மானிட கரங்க

ளாலான ஆடை, குருதி சிந்திக் கொண்டிருக்கும் கூரிய வாளேந்திய கரம் இவற்றைப் பார்க்கின்றபோது பய மாகவே இருக்கின்றது. இந்தப் பயங்கர கோர ரூபிணியை அன்னை என்று சொல்லலாமா? பூசை அறை யிலே அவளைப் பார்க்கின்றபோது, பக்திக்குப் பதில் பயம் அல்லவா உண்டாகின்றது! பின் அவளை எப்ப டிப் பக்தியோடு வழிபடமுடியும்? உண்மை அதுவன்று. அன்னை அன்பே வடிவினள்; கருணையே உருவானவள். அவள் நம்மைக் காப்பதற்காகவே அழிக்கின்ருள். சம் சாரத்திலே பந்தப் படுத்தி வைத்திருப்பவை அனைத்தையும் அழித்து, அமர நிலையை அவள் அருள்கின்ருள். வித்யா மாயை என்கின்ற முறையிலே அன்னை தன் அம்சத்தைக் காளி ரூபத்திலே பயன் படுத்தி அவித்தையை அழிக்கின் ருள்; மயக்கத்திலிருந்து விடுவிக்கின்ருள். வாசனைகள், சம்ஸ்காரங்கள், விருத்திகள் எல்லாவற்றையும் அன்னை, மகாகாளி அம்சத்திலே தோன்றிக் கருணை கூர்ந்து அழித்து வெற்றிக்கு வழி வகுக்கின்ருள். அவளின் திருவருள் நலத்தினுலே அசுர சக்திகள் அழிந்து ஒழிகின்றன. அன்னை நன்மையை உண்டாக்கவே தீமையை அழிக்கின் ருள். விபத்துக்களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நம்மைக் காப்பதால் அவளைத் துர்க்கை என்கின்ருேம். அழிவு இன்றேல் ஆக்கம் இல்லை; வாழ்வு இல்லை.

அழிவு துன்பத்தைத் தருவது; ஆக்கம் இன்பத்தைத் தருவது. நோய்க்கு மருந்தைக் கொடுத்து மருத்துவன் நோயை அழிக்கின்ருன். அதனுல் நோய் மாறிச் சுகம் வந்தடைகின்றது. நோய் உடம்பின் சுகத்தை அழிக் கின்றது. மருத்துவன் மருந்தைக் கொடுத்து நோயை அழிக்கின்ருன். இங்கே இரண்டு அழிவுகளை நாம் பார்க்கின்ருேம். உடலை அழிக்க வந்த நோய் மருந்தால் அழிகின்றது. அப்போது நமக்கு நலன் உண்டாகின் றது. விளக்கமாகச் சொன்னுல், முன்னுல் அழிவு செய்த ஒன்றை மற்ருென்று அழிக்குமானுல் அந்த அழிவு, அழிவு ஆகாது; ஆக்கமாகும்.

திருச்செந்தூரில் வயல்களுக்கு நிழல் தரும் சோலை மரங்களைச் சேல் மீன்கள் சாடுகின்றதனால் அவை அழிகின்றன. இந்த அழிவினால் நன்மையே உண்டாகின்றது. நிழல் கொடுத்த மரங்கள் அழிந்ததனால் வயல் வளமாகி விளைவு பெருகுகின்றது. திருச்செந்தூர் முருகன்மேல் சூட்டப்பட்ட கடம்ப மாலைகளுக்கு ஆசைப்படும் பூங்கொடியார் மனம் விரகதாபத்தினால் தவிக்கின்றது: முருகனிடம் காதல் கொண்ட பூங்கொடியார் மனம் பிற பொருள்களின்பால் உள்ள மையல்களை எல்லாம் மாய்த்து ஈற்றில் தானும் மாய்ந்து மடிகின்றது. அந்த மனம் அழிவதனால் மனதற்ற பரிசுத்த நிலையாம் இன்ப நிலை வந்து வாய்க்கின்றது.

ஞானசக்தி வேல். அதனை மாமயிலோன் விட்டபோது கடல் அலறியது. சூரனுக்குக் கவசமாக இருந்த மலை அழிந்தது. சூரத்துவமும், அசுரத்துவமும் அழிந்து போகவே மயிலாகும் பேறு பெற்றுச் சிவ வாழ்வு பெற்றான் சூரன்.

வெற்றி வடிவேலனின் திருவடி தலையிலே பட்டபோது தலைமேல் அயன் எழுதிய எழுத்து அழிந்தது; பிறவி ஒழிந்தது; முத்தி இன்பம் விளைந்தது என்று பாடும் கந்தர் அலங்காரம் இதோ:

**சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்**
**தேங்கடம்பின்**
**மால்பட்டு அழிந்தது பூங்கொடியார்மனம் மாமயிலோன்**
**வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்அவன்**
**கால்பட்டு அழிந்தது இங்குஎன் தலைமேல்அயன்**
**கையெழுத்தே.**

இங்கே அழிந்தது, அழிந்தது என்று குறிப்பிட்டன எல்லாம் ஆக்கத்துக்கு அடிகோலிய அழிவுகள். எனவே, அழிவுக்கு அழிவு தேடி ஆக்கம் தரும் அன்னையையும் துர்க்கை என்றும் மகாகாளி என்றும் வழிபடுகின்றோம்.

## வெற்றிச் சக்தி வீரமகாகாளி

அண்டசராசரங்களுக்கு எல்லாம் அன்னையாகிக் காத்தருளும் சக்தி மகேசுவரி, மகாகாளி, மகாலட்சுமி, மகா சரசுவதி என்றெல்லாம் திருவுருவங்களைத் தாங்கி அருள் மழை பொழிகின்றாள். மகேசுவரி விழுமிய ஞானத்துக்கு இருப்பிடமாகி, அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப வாழ்வு தந்து எல்லோரையும் காத்தருள்கின்றாள். மகாலட்சுமி தன் சொல்லரிய சௌந்தர்யத்தினாலும் ஆனந்த பரவசத்தினாலும் வளம் எல்லாவற்றையும் வாரி வழங்கி, தெய்விகப் பண்பை எல்லோரிடத்தும் நிலைபெறச் செய்கின்றாள். மகாசரசுவதி எல்லோரையும் பக்குவப் படுத்தித் திறன் நல்கி உருப்படுத்திச் சம்பூரண நிலைக்கு இட்டுச் செல்கின்றாள். மகாகாளி காலசக்தி; புரட்சித் தேவதை. அவளுடைய அன்புக்கும் அளப்பரிய அருளுக்கும் அவளுக்கு நிகர் அவளே.

இறைவன் சங்கார மூர்த்தியாகிப் பயங்கர ரூபத்தில் காட்சி அளிக்கிறான். துர்க்கை சங்கார நடனம் புரியும் மகாகாளி ஆகிறாள். மகாகாளி கருமம் ஆற்றும்போது சண்ட மாருதம் போன்று அவளின் ஆற்றல் தோன்றும். அவளுடைய முகத்தைக் கண்டால் அசுரனும் நடுங்குவான். அவளின் கோலம் போர்க்கோலம் அது உலகை நடுங்க வைக்கும். காரணம் என்ன? அவள் பரிபக்குவம் அடையாத ஒன்றைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கவே மாட்டாள். அஞ்ஞான இருளில் அந்த மயக்கத்தில் உழன்று செய்வன செய்யாது தவிர்ப்பன தவிர்க்காது வாழ்கின்றவர்களுக்கு அவள் குரூரமாகக் காட்சி அளிப்பாள். அன்றாடம் இடம் பிடித்து இருக்கின்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற ஆறு பகைவர்களையும் வெட்டி வீழ்த்த அவள் தாங்கும் கோலம் பயங்கரமாகவே இருக்கும். ஆனால், அது அவளின் அருட்கோலம். அஞ்ஞானத்தையும் அலட்சியத்தையும் துரோகத்தையும் துவேசத்தையும் மடமையையும் மந்த புத்தியையும் கபடத்தையும் கனத்த நெஞ்சையும்

பொய்ம்மையையும் பொருந்தா வாழ்க்கையையும் நொறுக்கும் தெய்விக ஆற்றல் நம்மை நேர் வழியில் நடாத்திச் செல்லும்.

அநுக்கிரகம், நிக்கிரகம் இரண்டும் அன்னையின் கருணையே ஆகும்.

*நிக்கிர கங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது*
*அக்கிர மத்தால் குற்றம் அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி*
*இக்கிர மத்தி னாலே ஈண்டுஅறம் இயற்றிடு என்பன்*
*எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே என்றும்.*

*தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்*
*வந்திடா விடின்உ றுக்கி வளாரினால் அடித்துத் தீய*
*பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடில் பரிவே ஆகும்*
*இந்தநீர் முறைமை அன்றோ ஈசனார் முனிவும் என்றும்.*

— சிவஞானசித்தியார்.

இதம் செய்யாது வாழ்பவர்களைக் கண்டித்தல் நல்வழிப்படுத்தற் பொருட்டேயாகும் அதுவும் கருணை தானே! தம் சொல்லின் வழி ஒழுகாத புதல்வரைப் பெற்றோர் அதட்டிச் சிறுகம்பினால் அடித்துக் கொடிய விலங்கும் இட்டுக் கண்டிப்பர். இச் செயல்கள் எல்லாம் வெகுளி போலத் தோன்றினாலும் அவர்கள் மேற்கொண்ட அன்பு காரணமான செயல்களே ஆகும். அதுபோலே, ஈசன் செய்யும் நிக்கிரகமும் வெகுளி போலத் தோன்றினாலும் கருத்து வகையால் அருளேயாகும். மகாகாளியின் பேரன்புக்கும், பேரருட்திறனுக்கும் இந்த இரண்டு சித்தியார்ப் பாடல்களும் விளக்கம் தருகின்றன.

அன்னை மகாகாளியின் அறக்கருணை போலே அவளின் மறக்கருணையும் தீவிரமானது. அந்த மறக்கருணை இல்லாது விட்டால் நமக்கு வளமான வாழ்வு ஏது? நிலையான நெஞ்சு ஏது? அறக்கருணையும் மறக்கருணையும் அவளின் திருவிளையாடல்கள்! அப்பெருமாட்டியின் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியும் அன்பு நம்மை மட்டம் தட்டிப் பதப்படுத்தும் அவளின் சினம் இல்லாவிட்டால், நாம் பழிக்கு அஞ்சி வாழமாட்டோம். அன்னையின் நீதி மிக மிக நீளமானது. அது கண்ணுற் காணமுடியாத நீதி. அந்த அறிவு வரும் வரையும் அவளின் நீதியை உணர முடியாது. அவளின் அளப்பரிய நீதியை நமக்குத் தெரியவிடாமல் மறைத்திருப்பவை அறியாமையும் வஞ்சகமும் ஆகும். அறியாமையும் வஞ்சகமும் அறிவு முனையை மழுங்கச் செய்து அந்தகாரத்தில் நம்மைத் தள்ளிவிடுகின்றன; இவை நம்முடைய பரம சத்துருக்கள். மகாகாளி இவற்றோடு சதா போர் தொடுத்துக் கொண்டு இருக்கிருள்; அவற்றை வெட்டி வீழ்த்துகிருள். இந்நிலையிலே அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும் அறிவுச் சூரியன் மேல் எழ எழ அன்னை மகாகாளியின் உண்மைத் தோற்றம் — அப்பெருமாட்டியின் ஆற்றல் — காட்சி அளிக்கும். சுருக்கமாகச் சொன்னுல், அவளின் அடி முடி தோன்றும். நூறுயிரம் கள்ளக் கரணங்கள் வைத்திருந்தவனும் அன்னைக்கு அண்மையில் சென்று விட்டால், அறிவை மூடி இருக்கும் அஞ்ஞான இருள் அகலும்; ஞான ஒளி தோன்றும். இறைவனின் வெற்றிச் சக்தி அன்னை வீரமகாகாளியிடம் உளது. அவள் அந்தச் சக்தியினுல் நமக்குச் சித்தி எல்லாம் தருவாள். இந்த இரகசியம் ஞானவீரர்களுக்கு நன்ருக விளங்கும்.

## சிலம்பு கண்ட சமரசம்

மகாகாளியைச் சிவன், திருமால், பிரமன் மூவருமே வழிபடுகின்றுர்கள் எனச் சிலப்பதிகாரத்திலே வேட்டுவவரி பாடுகின்றது. வேட்டுவர் கொற்றவையைப் போற்றும் பாடல்கள் மிக்க சிறப்புடையன.

*ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரி உடுத்துக்*
*கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்*
*வானோர் வணங்க மறைமேல் மறையாகி*
*ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.*

"யானையின் தோலை மேலே போர்த்து, புலியின் தோலை அரைக்கண் உடுத்து, காட்டின்கண் எருமைக்கடாவினது கரிய தலைமீது நின்றாய்; தேவர் யாவரும் வணங்க வேதங்களுக்கு அப்பாற்பட்ட மறைந்த பொருளாய் ஞானக்கொழுந்தாய் சலித்தல் இன்றி யாண்டும் நிலைத்து நிற்பவளே, இது என்ன மாயமோ?"

*வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்*
*கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்*
*அரிஅரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்*
*விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்.*

"வரிகள் பொருந்திய வளை அணிந்த கையில் வாளைத் தாங்கி, மகிடாசுரனை அழித்து, கரிய முறுக்குண்ட கொம்பினையுடைய கலைமான் மீது நின்றாய். திருமாலும் சிவபிரானும் நான்முகனும் ஆகிய இவர்களுடைய உள்ளத்தாமரையில் நிலையாக வீற்றிருக்கும் விரிந்த கதிர்களையுடைய அழகிய ஒளிவிடும் விளக்காகி நிற்பவளே, இது என்ன மாயமோ?"

*சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்*
*செங்கண் அரிமால் சினவிடைமேல் நின்றாயால்*
*கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து*
*மங்கை உருவாய் மறைஏத்தவே நிற்பாய்.*

"சங்கையும் சக்கரத்தையும் தாமரைக் கைகளிலே தாங்கி, சிவந்த கண்களையுடைய சிங்கமாகிய சினம் பொருந்திய விடைமீது நின்றாய். கங்கையைச் சடையிலே அணிந்த நெற்றிக் கண்ணினை உடையோனது இடப் பாகத்து வேதங்கள் போற்றப் பெண் உருவாய் நிற்பாய், இது என்ன மாயமோ?"

வேட்டுவவரி மகாகாளியைச் சிவனுக்கியும் சிவ பிரான் திருவிளையாடல்களை மகாகாளியின் மேல் ஏற்றி யும் பாடும் திறன் வியப்புக்கு உரியது.

மகாகாளியைச் சிவனுக்கிப்பாடும் வேட்டுவவரி இதோ :

*மதியின் வெண்தோடு சூடும் சென்னி*
*நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்*
*பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி*
*நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து*
*அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்*
*துளைஎயிற்று உரகக் கச்சுடை முலைச்சி*
*வளையுடைக் கையில் சூலம் ஏந்தி*
*கரியின் உரிவை போர்த்து அணங் காகிய*
*அரியின் உரிவை மேகலை ஆட்டி*
*சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி*
*வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை.*

சிவனுக்கித் திருவிளையாடல் சொல்கின்ற சிலம்பு பின் வருமாறு :

*வம்பலர் பல்கி வழியும் வளம்பட*
*அம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்*
*சங்கரி அந்தரி நீலி சடாமுடிச்*
*செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்*
*துண்ணென் துடியோடு துஞ்சூர் எறிதரு*
*கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்*
*விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்*
*உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்,*

கொற்றவையைப் பாட வந்த சிலம்பு தமிழ்நாட்டுக்கு உரிய தனிப் பெரும் பண்பு காரணமாகச் சர்வ சமய சமரசம் பேசுகின்றது சமரச சன்மார்க்கம் பேசுகின்ற இளங்கோ அடிகளுக்குத் தலை வணங்காமல் இருக்க முடியுமா, என்ன ?

மருதின் நடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளும் சகடம் உதைத்தருள் செய்குவாய்

என்று திருமாலின் திருவிளையாடலைப் பாடுகின்ற இளங்கோ,

கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறைஏத்த வேநிற்பாய்

என்றும் பாடுகிறார்.

உமை அம்மையே காளி என்று ஏத்திப் போற்றுகின்றமை நெஞ்சை அள்ளுகின்றது.

அன்னையின் அருளால் சமரசபாவம் வரவேண்டும் என்ற பெரிய கருத்து இளங்கோ அடிகளின் உள்ளத்திலே முகிழ்த்து இருக்கின்றது. அன்னையின் வழிபாடு சிறந்து ஓங்கினால் 'சர்வ-தேவ-தேவீ-ஸ்வரூபிணி' ஆகிய அவளே நல்லன எல்லாம் தருவாள்!

## காளிக்கு ஒரு பலி

சங்க காலத்திலே காளிக்குச் செய்யும் வேள்வியைக் களவேள்வி என்றார்கள். அக்காலத்திலே காடுகிழாஅள் பழையோள் என்று பல வழிபாடுகள் நடைபெற்றன. காளிக்கு இடமாகக் கருதப்பெற்ற சுடுகாட்டிலே வாழ்ந்த பேய்கள கூளிகளாயின. போரிலே இறந்த பிண மலையைச் சுட்டெரித்து மண்ணாக்கினால் அன்றி ஏனைய உயிர்கள் நிலைபெற்று வாழ்வது சாத்தியமாகாது என்பதைக் கண்ட பழந்தமிழ்ப் பெருங்குடி மக்கள் அங்கே ஒரு தெய்வத் தன்மையைப் பெய்தார்கள். இயற்கையில் அமைந்த சுட்டெரிக்கும் ஆற்றலைக் காளியும் கூளியுமாகக் கண்டனர். போரினையே பேய்கள் அடும் கூழாகப் பாடிவிட்டனர்.

அவளுடைய அருஞ் செயல்கள் தீமையை அழிப்பன; நல்லதையே நாடவைப்பன. ஒளி உள்ளே வரவேண்டுமானால் இருள் போய் அகலவேண்டும். மனிதன் தெய்வத் தன்மை எய்த வேண்டுமானால், கீழான மிருகக் குணத்தைப் பலி கொடுக்க வேண்டும். ஆன்மிக வாழ்விலே அகத் தூய்மை பெறுவதற்காக இருந்த கோட்பாடு இப்போது புறச் சடங்காக ஆக்கப்பட்டு, மிருகங்களையே பலி கொடுக்கும் வழக்கமாக மாறிவிட்டது. அன்னையின் அழிக்

கும் சக்தியாகிய துர்க்கையை அல்லது மகாகாளியை ஆவாகனம் செய்து, ஒருவன் தன்னுள்ளே இருக்கும் மிருகத் தன்மைகளை எல்லாம் அழிக்கும்படி வேண்டிக்கொள்வதே மிருகபலி ஆகும். மனிதனிடத்திலே காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற பல பகைவர்கள் வெவ்வேறு உருவில் கண்ணுக்குப் புலப்படாது வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள். அந்தர்யாமியாக விளங்குகின்ற பரம் பொருளின் உதவி இல்லாமல் இப் பகைவர்களை வென்று வெற்றிவாகை சூட முடியாது ஒருவன் தன்னைத் தான் ஆராய்ந்து அறிந்து கொள்வது மிகமிகக் கடினமான காரியம். இந்நிலையிலே துர்க்கை சாதகனுக்குக் கைகொடுத்து உதவுகின்றுள். நம்மை அறியாமலே நம்மை ஆட்டிப் படைக்கின்ற பகைவர்களைப் பலி கொடுப்பதே காளிக்கு ஒரு பலியாகும். அவளுடைய இச்சாசக்தி மிருகத் தன்மைகளை நீக்கிப் பூரணத்துவத்துக்கு இட்டுச் செல்கின்றது. தீமையைப் போக்கி அறியாமையை அகற்றித் தெய்விக சக்தியைத் துர்க்கையின் வழிபாட்டினுல் எழுப்பி, நம்மிடையே இருக்கின்ற மிருகத் தன்மையைப் பலிகொடுப்பதுவே அன்னை காளியை அன்புடன் வழிபடுவதன் பொருளாகும். இறைவனின் வெற்றிச் சக்தி வீரமகாகாளியிடத்தே இருக்கின்றது. ஆகவே, நமக்கும் வாழ்விலே வெற்றி வேண்டுமானுல், வெற்றி தரும் வீரமகாகாளியை வந்தித்து வணங்குவோம்.

பாரதியின் தீந்தமிழ்ப் பாடல்கள் பல மகாகாளியின் பெரும் புகழைப் பேசுகின்றன. சில பாடல்களை இங்கே தருகிறேம்.

*யாதும் ஆகி நின்றுய் — காளி*
*எங்கும் நீநி றைந்தாய்*
*தீது நன்மை எல்லாம் — நின்றன்*
*செயல்கள் அன்றி இல்லை.*
*போதும் இங்கு மாந்தர் — வாழும்*
*பொய்ம்மை வாழ்க்கை எல்லாம்*
*ஆதி சக்தி தாயே — என்மீது*
*அருள் புரிந்து காப்பாய்.*

கர்ம யோகம் ஒன்றே — உலகில்
காக்கும் என்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும் — இங்கே
தவறல் என்பது இன்றி
மர்ம மான பொருளாம் — நின்றன்
மலர் அடிக்கண் நெஞ்சம்
செம்மை உற்று நாளும் — சேர்ந்தே
தேசு கூட வேண்டும்.

காளிமீது நெஞ்சம் — என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேளை ஒத்த விறலும் — பாரில்
வேந்தர் ஏத்து புகழும்
யாளி ஒத்த வலியும் — என்றும்
இன்பம் நிற்கும் மனமும்
வாழி ஈதல் வேண்டும் — அன்னாய்
வாழ்க நின்றன் அருளே.

வேறு

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரும் மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி
பாரில் வெற்றி எனக்குறு மாறே.

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
கண்ணும் ஆருயி ரும்என நின்றாள்
காளித் தாய்இங்கு எனக்கருள் செய்தாள்
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ
விண்ணு ளோர்பணிந்து ஏவல்செய் யாரோ
வெல்க காளி பதங்கள்என் பார்க்கே.

# கோதையின் இலட்சியக் காதல்

## தீராத விளையாட்டுப் பிள்ளை

அரச பரம்பரையில் பிறந்து, ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளையாகிச் செய்த மாயங்களுக்குத்தான் எண்ணிக்கை ஏது? வெண்ணெயை யும் தயிரையும் திருடித் தின்று மத்தடி பட்ட அந்த மாமாயன் நம்மையும் திருட வருவான். அவனுடைய லீலைகளை எல் லாம் எண்ணிப் பார்க்கிறபோது அவனை அள்ளி அணைக்க உள்ளம் விழைகின்றது கோபியருடன் அவன் ஆடி அருளிய லீலைகளை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து உருகும்போது நாமும் கோபியர்களாகிக் கூடிப் பிரியாமல் ஆடி விளையாட உள்ளம் துடிக்கிறது. கண்ணனைக் கொஞ்சும் குழந்தையாகப் பார்க்கிறபோது,

*தின்னப் பழங்கொண்டு தருவான் — பாதி*
*தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்*
*என் அப்பன் என் ஐயன் என்றால் — அதனை*
*எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்*

என்ற பாடல் நம் நினைவுக்கு ஓடி வருகின்றது.

கண்ணனைக் குழந்தையாக, குருவாக, காதலனாக, காதலியாக, காவலனாக, சேவகனாகப் பாடிய பாடல்கள் ஆயிரம், ஆயிரம்! அந்த வரிசையிலே ஆழ்வார்கள் ஆண்டாள், பக்தமீரா, கிருஷ்ணசைதன்யர், பாரதி போன்றாரின் பாடல்கள் இன்றும் புதுமை சொட்டிக் கொண்டே இருக்கின்றன. பக்தியை வித்தி விளையச் செய் கின்றன; முத்திக்கு வழிகாட்டுகின்றன;

தீராத விளையாட்டுப் பிள்ளையாகித் தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை கொடுத்து உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கண்ணன் காதலனாக, காதலியாக இடம் பெறுகிறபோது பக்தன் பக்தியின் சிகரத்திலே நின்று,

ஆசை முகம்மறந்து போச்சே — இதை
ஆரிடம் சொல்வேனடி — தோழி
நேசம் மறக்கவில்லை நெஞ்சம் — எனில்
நினைவு முகம்மறக்க லாமோ.

கண்ணில் தெரியுதொரு தோற்றம் — அதில்
கண்ணன் அழகு முழுதில்லை;
நண்ணும் முகவடிவு காணில் — அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணோம்.

என்றும்,

பாயும்ஒளி நீஎனக்கு
பார்க்கும்விழி நான்உனக்கு
தோயும்மது நீஎனக்கு
தும்பியடி நான்உனக்கு
வாய்உரைக்க வருகுதில்லை
வாழிநின்றன் மேன்மைஎல்லாம்
தூயசுடர் வானொளியே
சூறைஅமுதே கண்ணம்மா!

தாரையடி நீஎனக்கு
தண்மதியம் நான்உனக்கு
வீரமடி நீஎனக்கு
வெற்றியடி நான்உனக்கு
தாரணியில் வானுலகில்
சார்ந்திருக்கும் இன்பம்எல்லாம்
ஓர்உருவமாய்ச் சமைந்தாய்
உள்ளமுதமே கண்ணம்மா!

என்றும்,

பாரதியுடன் சேர்ந்து பாடுவதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

கிருஷ்ண பக்தியில் காணப்படும் இன்பம் பக்திக் காதல். அது கடவுளைக் காட்டும் காதல் — வானேற வழி காட்டும் காதல். அங்கே தெய்வப் பண்பு சிரித்து விளையாடும் "எல்லாவற்றையும் விட்டு என்னையே சரணாக

அடைவாயாக; கவலை வேண்டாம். நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்'' என முழங்கிய கீதை பூரண சரணாகதிக்கு நம்மை அழைத்துச் செல்கின்றது. ஆண்டாள் உட்பட ஏனைய ஆழ்வார்களின் பக்திக் காதல் பூரண சரணாகதிக்கு வழியாகும்.

## கோதை திருஅவதாரம்

இறைவனையே காதலனாக எண்ணிப் பாவனை செய்து, அவனிடம் காதலைச் செலுத்தி வழிபடுவது மதுரபக்தி என்று சொல்லப்படும். பரந்தாமனைக் காதலனாகப் பாவனை செய்து மணவாளனாகப் பெற்ற பெருமை ஆண்டாளுக்கு — கோதை நாச்சியாருக்கு உரியது. அவள் பாடிய திருப்பாவை, உபநிடதம் என்றே போற்றப்படுகிறது. நாச்சியார் திருமொழி காதல் கனிந்தோட எழுந்த ஒரு பிரபந்தம். கோதையின் காதல் அற்புதமான கதை

ஸ்ரீ வில்லி புத்தூரிலே விஷ்ணுசித்தராம் பெரியாழ்வார் வாழ்கின்றார். வழக்கம் போலே மாலை கட்டுவதற்காக மலர் கொய்ய அவர் நந்தவனத்துக்குச் செல்கிறார். நந்தவனத்திலே சோதிமேல் சோதியாகத் துலங்குகின்ற ஓர் ஒளியைக் காண்கிறார். அங்கும் இங்கும் எங்கும் பார்க்கிறார். துளசியின் மேல், சோபையுடன் திருமகள் போலே ஒரு மகவைக் காண்கிறார். உள்ளம் களிக்க, உடல் புளகாங்கிதம் கொள்ள அப்பெண்ணமுதை மெல்லெனத் தாங்கி எடுத்து வருகிறார். நேரே பரந்தாமன் சந்நிதிக்கே குழந்தையுடன் வந்து விடுகிறார் ''எம்பெருமானே, இப்பெண்ணமுதமாம் அரும் பொருள் தேவரீருக்கே உரியது; அங்கீகரித்து அருளல்வேண்டும்'' எனப் பிரார்த்திக்கின்றார்.

'' இந்தப் பெண் மகவுக்குக் கோதை எனப் பெயரிடுக; உமது புத்திரியாக வளர்த்து வருக'' என அசரீரி எழுகிறது. ''இக்குழந்தையை இரத்தினச் சிவிகையில் ஏற்றி உபசாரங்களுடன் விஷ்ணுசித்தரின் திருமாளிகைக்கு எடுத்துச் செல்லுங்கள்'' என அத்தலத்தில் உள்ளவர்களுக்கும் திருவாய் மலர்ந்தருளுகிறார் பரந்தாமன். அனைவரும்

அவ்வாறே அலங்காரம் பல செய்து, மங்கள வாத்தியம் முழங்க விஷ்ணுசித்தரின் திருமாளிகையிலே குழந்தையைச் சேர்ப்பிக்கிறார்கள். விஷ்ணுசித்தராம் பெரியாழ்வாரும் அவர்தம் மனைவியாரும் குழந்தையைச் செல்வம் பெருகச் சீராட்டி வளர்த்து வருகிறார்கள்.

## சூடிக் கொடுக்கும் சுடர்க்கொடி

வளர்ந்து வருகின்ற கோதையார், நாராயணன் திருவடிக்கே பக்தி பெருகப் பெரியாழ்வாருடன் தினமும் நந்தவனத்துக்குச் செல்வார்; புஷ்பங்களை எடுப்பார்; செடிகளுக்குத் தண்ணீர் தருவார்; பெருமான் திருநாமங்களை அடிக்கடி வாயினால் சொல்லி மனத்தினால் சிந்தித்து, நெருப்பில் இட்ட நெய்போல நெஞ்சம் நெக்குருக, கண்களில் நீர் மல்க, ஆடுவார்; பாடுவார்.

மங்கைப் பருவத்தை அடைகிறார் கோதையார். நந்தவனத்துக்குப் போவதை விடுத்துத் திருமாளிகையிலே இருந்து பகவானை நினைந்து நினைந்து அன்பு பெருகப் பக்திக் காதலில் பரவசநிலை அடைந்து வாழ்கிறார்.

பெரியாழ்வார் கட்டி வைத்த திருமாலைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கோதை தன் கூந்தலில் சூட்டிக் கண்ணாடியில் அழகு பார்ப்பாள். இவை எம்பெருமானுக்கு உசிதமான மாலைகள் எனச் சொல்லித் தந்தையார் வருவதன் முன்னே அவற்றைக் களைந்து திருப்பூக்கூடையில் வைத்து விடுவாள். ஆழ்வாரும் திருப்பூக்கூடையை எடுத்துச் சென்று வடபெருங்கோயிலானுக்குச் சாத்துவார். சாத்திய புஷ்ப மாலைகளிலிருந்து என்றுமில்லாத பரிமளம் வீசுவதை அர்ச்சகரும் ஏனையோரும் அறிகிறார்கள். வியப்பு மேலிடப் பெருமானை ஏத்திப் போற்றுகிறார்கள்.

இவ்வாறே கோதையார் சூட்டி அழகு பார்த்த மாலைகளைத் தினமும் ஆழ்வார் ஒன்றுமே அறியாதவராய்ப் பெருமானுக்குச் சூட்டி வருகிறார். பூப்பிராட்டியார் கோதையாக அவதரித்தமையையும் அப்பெருமாட்டியின் பக்திக்

காதலையும் உலகறியச் செய்ய நாராயணன் திருவுளம் கொள்கிறான். ஒருநாள் பெரியாழ்வார் புஷ்ப மாலைகளை ஒவ்வொன்றாக அர்ச்சகர் கையிலே கொடுக்கின்றபோது ஒரு மாலையில் மயிர் ஒன்று இருக்கக் காண்கிறார். அர்ச்சகர் திடுக்கிடுகிறார். "அபசாரம்; அபசாரம்; மாலையில் மயிர் சிக்குண்டு இருக்கிறதே! தங்கள் கைங்கர்யத்தில் இவ்வாறு ஒரு பெருங் குறை ஏற்படுமாயின், பிறர் காரியங்களைப் பேசவும் வேண்டுமா? தாங்கள் கொண்டு வரும் மாலைகள் சில தினங்களாக வாடி, நிறம் மங்கியனவாகக் காணப்பட்டன. இருந்தும் தாங்கள் கட்டி அன்புடன் கொண்டு வந்த மாலைகளுக்கு மறு உண்டாக்கிப் பேசுவது தகாது என்று மௌனமாக இருந்தேன். மாலையில் மயிர் இருக்கக் கண்ட பின்பே துணிந்து இவற்றைச் சொல்கின்றேன்" என்று அர்ச்சகர் விஷ்ணுசித்தருக்குச் சொல்கிறார்.

விஷ்ணுசித்தர், "நான் ஒன்றும் அறியேன். தினமும் மலர்ந்த பூக்களைத் தானே மாலைகளாக்கிக் கொண்டு வருகிறேன். இந்த அபசாரம் ஏற்படும் என்று நான் கனவிலும் கருதவில்லை. புத்தி பூர்வமாக அபசாரம் உண்டாகக் கைங்கர்யம் செய்வேனா? இது எம் பெருமான் திருவிளையாடல்களில் ஒன்றெனச் சொல்வதை விட வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை" என்கிறார்.

நந்தவனத்துக்கு ஓடோடியும் சென்று மலர் கொய்து, புத்தம் புதிய பூமாலைகளைக் கொண்டு வருகிறார் விஷ்ணுசித்தர். அர்ச்சகரும் அவற்றை ஏற்றுப் பெருமானுக்குச் சாத்துகிறார். 'பெருமானுக்கு இவை பொருத்தமாக இல்லையே! இதில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது' என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். பெரியாழ்வார் வீடு திரும்புகிறார்; கவலை மேலிடுகிறது. இதற்கு உரிய காரணத்தை அறிய வேண்டும் என விழைகிறார். 'நாம் வெகு அவதானமாகப் பூக் கொய்து மாலைகளைக் கட்டுகிறோம். ஒரு சமயம் நான் உபாதானத்துக்குப் போயிருக்கும்போது ஏதோ நடந்

திருக்கிறது. இதனை நாளையே காண்போம்' என்று சிந்திக்கிறார். வழக்கம் போல மாலைகளைத் தொடுத்துப் பூக்கூடையில் வைத்து உபாதானத்துக்குப் போகாது மற்றோரிடத்தில் ஒளிந்து மறைவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

தந்தையார் அங்கே இல்லையென எண்ணிய கோதை வழக்கம் போலே ஒவ்வொரு மாலையாக எடுத்துக் கூந்தலில் சூடிக் கண்ணாடி முன் நின்று அழகு பார்க்கிறாள். ஆழ்வாரின் இருதயமே வெடித்துவிடும்போல் இருக்கிறது. கோபம் மேலிட, கண்களில் நீர் முத்து முத்தாகப் பெருக, "அம்மா, என்ன காரியம் செய்தாய்?" என்று கேட்கிறார். திருமாலின் பெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இத்தகைய அபசாரத்தை நாம் செய்யலாமா என்று அறிவுரை சொல்கிறார் "பயப்படாதே; அறியாத பிள்ளை நீ; செய்த பிழையைப் பெருமாள் மன்னித்து அருள்வார்; இனி இப்படிச் செய்யாதே" என்று தேறுதல் வார்த்தைகள் கூறி நந்தவனத்துக்குச் சென்று வேறு மாலைகளைத் தொடுத்துச் சந்நிதிக்கு விரைகிறார். "பெருமாளே, அடியேன் செய்த பிழையையும் பேதைப் பெண்ணாகிய கோதை செய்த பிழையையும் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டுகிறார்.

## பெருமாள் கனவு

அன்று இரவு வடபெருங் கோயிற் பெருமாள் கனவிலே தோன்றுகிறார். "எம்மிடத்தில் பாங்காய் இனிது அமரும் பூமடந்தை உம்மிடத்தில் புத்திரியாய் உற்பவித்தாள். அவளின் பூமாலையும் பாமாலையும் எனக்கு வேண்டும். பூமாலை சூடிக் கொடுக்கவும், பாமாலை பாடிக் கொடுக்கவும் அவள் அவதரித்தாள். அவள் சூடிக் கொடுத்த மலர் மாலைகளே நமக்கு உவப்பானவை. இன்று நீர் கொண்டு வந்த மாலைகள் நறுமணம் இல்லாத வெறும் மாலைகள் என்பதை அறிய மாட்டீர். இன்று தொடங்கி நீர் கட்டுகிற மாலைகளைக் கோதையைச் சூட்டிக் கொள்

ளச் செய்வித்துப் பின்னர் அவற்றை நமக்குச் சாத்தக் கடவீர்" எனத் திருவாய் மலர்ந்து அருளுகிறார்.

பெரியாழ்வார் திடுக்கிட்டுக் கண் விழிக்கிறார். ஆச்சரியம் மேலிட, நெஞ்சம் தடுமாற நேரே கோயிலுக்கு ஓடோடிச் செல்கிறார். அர்ச்சகர் ஆழ்வாரை வரவேற்கிறார்; "உம்முடைய புத்தம் புதிய மாலைகளைச் சாத்துகிற போதெல்லாம் பெருமாள் முகப்பொலிவு இழந்து காணப்படுகிறார்; வாடிய மாலைகளைச் சாத்தும்போது இருந்த முகப்பொலிவு அற்புதம்! அற்புதம்!! எனினும், இவற்றை உமக்கு நான் சொல்வதற்குத் தைரியம் இல்லாது இன்றுவரை இருந்தேன். இரவு சொப்பனத்தில் பெருமாள் தோன்றினார். உம்முடைய திருமகள் பூமிதேவியாகவே பெருமாளுடன் காட்சி தந்தாள். அவள் பாடிக் கொடுக்கவும் சூடிக் கொடுக்கவும் இந்நிலவுலகிலே அவதாரம் செய்திருக்கிறாள் என்பதையும் தெரிந்து கொண்டேன்" என வியப்பு மேலிடச் சொல்கிறார். "இன்று தொடங்கி கோதை சூட்டிக் கொண்ட மாலைகளையே இவ்விடம் தாங்கள் கொண்டுவர வேண்டும், இதுவே இறைவன் திருவுள்ளம்" என்றும் சொல்கிறார்.

## கோதையின் காதல்

ஆழ்வார் அளவிலா மகிழ்ச்சியுடன் வீடு திரும்புகிறார். 'சுடர்க்கொடியாம் நீ சூடிக் கொடுத்த மாலைகள் பொலிந்து பெருமாளை அழகு செய்கின்றன என்பதை உணர்ந்தேன். என்னை ஆண்டாள் நீயே! நான் பெற்ற பெரும்பேறு வேறு யார் பெற்றார்? இவ்வளவு நாளும் நீ சூடிக் கொடுத்தது போல் தினமும் கண்ணாடி முன் நின்று சூடி அழகு பார்த்த பின்னரே மாலைகளை என்னிடம் கொடுக்க வேண்டும்' என்று கேட்கிறார். கோதை நாணித் தலை குனிகிறாள். மாலைகளைச் சூடிக் கொடுக்கிறாள். கைங்கரியம் தொடர்ந்து நடக்கிறது.

காதலியின் உள்ளத்திலே பக்தி வெள்ளம் கரை புரண்டோடுகிறது. அந்த வெள்ளத்தின் வேகத்தில்

அகப்பட்டு ஆண்டாள் தடுமாறுகிருள். குறி பார்க்கிருள். குயிலோடு உறவாடுகிருள். கனுக் காண்கிருள். உள்ளம் மேகத்தைத் தூதுக்கு அழைக்கிறது. காதலியின் கலக்கம் பெரிதாகிறது. காதல் வெள்ளம் சுழித்து ஓடுகிறது. இந் நிலையிலே சூடிக் கொடுக்கும் சுடர்க் கொடியாள் பாமாலை களையும் பாடிக் கொடுக்கிருள்.

## ஸ்ரீரங்க யாத்திரை

'திருவரங்கம் சென்று மணவாளனைக் கண்டு வணங்க விரும்புகிறேன்' என்று பெரியாழ்வாருக்குக் கோதை தன் கருத்தைச் சொல்கிருள். கோதையின் வேண்டுகோளை ஏற்றுப் பெருங்கோயில் உடையானை வணங்கி, மூடுபல்லக் கில் அவளை ஏற்றிக் கொண்டு புறப்படுகிருர் ஆழ்வார்.

"ஸ்ரீரங்க நாதனின் கோபுரமும் விமானமும் தெரிகிற போது தயவுடன் எனக்குச் சொல்லுங்கள். நான் கோபு ரத்தைக் கண்டதும் கால் நடையாகவே சென்று தரிசிக்க விரும்புகிறேன்" என்று வழியிலே செல்லும்போது பெரி யாழ்வாருக்குத் கோதை தெரிவிக்கிருள். "பொன்ன ரங்கப் பொற்சிகரம் இதோ தெரிகின்றது" எனக் குரல் எழுப்புகிருர் ஆழ்வார். கோதை திருவரங்கர் சேவடியை அடைந்து திருமார்பிலே இடம் பிடித்துக் கொள்கிருள். "பல்லக்கில் பாரம் இல்லையே" என்று பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் ஆச்சரியத்துடன் சொல்கிருர்கள். ஆழ்வார் பல்லக்கைத் திறக்கிருர். அருமை மகளைக் காணுது திகைக்கிருர். சீரார் திருவரங்கர் செய்த களவை எண்ணி எண்ணிக் கல்லாய்ச் சமைகிருர். 'அஞ்சன்மின்; அஞ் சன்மின்' என்ற அபயக்குரல் கேட்கிறது. திருவரங்கப் பெருமாளின் திருமார்பில் கோதையை எல்லோரும் காண் கிருர்கள்.

"பெருமானே, வில்லிபுத்தூரில் யாவரும் காண என் திருமகளை நீர் மணமகளாகக் கொள்ள வேண்டும். அங்கே என் மகளுடன் நீர் வீற்றிருக்கும் கோலக் காட்சியை எல் லோரும் கண்டு களிகூரவேண்டும். நின் அருள் வெள்ளம்

அங்கே வழிந்தோட வேண்டும்" என்று வேண்டு கிறார் ஆழ்வார். "பங்குனி உத்தரத்தில் உன் திருமகளை வில்லிபுத்தூரில் திருமணம் செய்வோம்" எனப் பெருமா ளின் திருவாக்கு எழுகிறது. பெரியாழ்வாரின் மகிழ்ச்சி பெரிதாகிறது. திருமகளையும் அழைத்துக் கொண்டு திரு வரங்க நாதனிடம் விடைபெற்று வில்லிபுத்தூருக்கு வரு கிறார் ஆழ்வார்.

## கோதை திருமணம்

அழகிய மணவாளர், பங்குனி உத்தரத்தன்று கோதை யாரைத் திருமணம் செய்ய வரும் சுபசெய்தியை எல் லோருக்கும் அறிவிக்கிறார் ஆழ்வார் பந்தல்கள் எழுகின் றன. பங்குனி உத்தரமும் வருகிறது. மங்கள வாத்தி யங்கள் முழங்குகின்றன அழகிய மணவாளனை எதிர் நோக்கி எல்லோரும் இருக்கிறார்கள். கந்தருவர், கிம்புரு டர், கின்னரர், வித்யாதரர், சித்தர் முனிவர், இருடிகள் முதலாம் பதினெண் கணத்தார்களும் தேவர்களும் வில்லி புத்தூருக்கு விரைகிறார்கள். "கோதை வாழ்க! வாழ்க!" என்ற ஒலி வானைப் பிளக்கிறது. காரார் குழலாளை மஞ் சனம் ஆட்டி மங்களப் பட்டாடை புனைந்து மணக்கோலம் செய்கிறார்கள். வடபெருங் கோயில் அலங்கரிக்கப் படுகிறது. 'என் மணவாளன் இன்னமும் எழுந்தருளுவதாக இல்லையே' எனக் கவலை மேலிட மனமுருகிக் கருடாழ்வா ரைத் தோத்திரம் செய்து வேண்டுகிறாள். அவரும் எதிர் வருகிறார். "என் உயிர்த் தலைவனும் ஸ்ரீரங்க நாதனை அழைத்து வர வேண்டும் நாமும் அப்பெருமானும் வீற் றிருக்கின்ற ஆசனத்தில் உமக்கும் இடம் தருவோம்" எனச் சொல்லி அருள்கிறார் ஆண்டாள் கருடாழ்வார் உடனே புறப்படுகிறார். ஸ்ரீரங்கத்துக்குப் போய் எம்பெரு மானை வேண்டுகிறார். "தேவரீர், அரைக்கணம் காலம் தாழ்த்தால் கோதை உயிரையே விட்டு விடுவாள். உடனே எழுந்தருள வேண்டும்" என விண்ணப்பம் செய்கிறார் கருடாழ்வார். கருடாழ்வாரின் தோள்களிலே ஆரோகணித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறார் பெருமாள்.

பெரியாழ்வார் கோதையாருடன் வந்து எம்பெருமானை வணங்கி, "கோதையாரைத் தேவரீருக்குத் தந்தனம்" எனத் தாரை வார்த்துக் கொடுக்கிறார். பிரம தேவனும் விவாக உற்சவத்துக்கு வேண்டிய சடங்குகளை எல்லாம் நிறைவேற்றுகிறார். கோதையாருக்கு எம்பெருமான் திருமாங்கல்ய தாரணம் செய்து அருள்கிறார். எம்பெருமான் கோதையாரின் கால் மலர்களைத் தம் கை மலர்களால் தூக்கி அம்மி மிதிப்பிக்கிறார். அக்கினி வலம் வருகிறார். அருந்ததி காண்பிக்கிறார். உலக நடை பெருகி ஓங்குமாறு அநுக்கிரகம் செய்கிறார். வெள்ளை யானைமேல் எழுந்தருளி ஊர்வலம் வருகிறார்கள். கோதையாருடன் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு எழுந்தருளுகிறார்.

## தெய்விகக் காதல்

கற்பு நிலை அன்பு நிலையின் சிகரம். ஆண்டாளுக்கு ஆண்டவன் எதிரில் யாவும் சூனியம். அந்த நிலை தானற்ற நிலை.

*நான்அவ னென் றெண்ணினர்க்கும் நாடும்உளம் உண்டாதல்*
*நான்என ஒன் றின் றியே தான்அதுவாய் — நான்என ஒன்று*
*இல்லென்று தானே எனும்அவரைத் தன்னடிவைத்து*
*இல்லென்று தான்ஆம் இறை.*

எனச் சிவஞானபோதம் பேசுகின்ற நிலை. அதாவது, 'நான் என்று ஒரு முதல் காணப்படுமாறு இல்லை என்று உணர்ந்து அவ்விறைவன் தானே முழுதும் எனக் காணும் தெளிவுடைய ஆன்மாவை, தனது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்து தன்னை அன்றி வேறு காணப்படுமாறு இல்லை என்று தானே முழுவதுமாய்க் காணப்பட்டு நிற்பன் இறைவன்' என்பது சிவஞான போதக் கருத்து. ஆண்டாள் பரிபக்குவம் எய்திய ஆன்மா. அந்நிலையில் ஆன்மாவாகிய நாயகி சர்வ

ஆன்ம நாயகனும் இறைவனைத் தன் நாயகன் எனக் காண்கின்றது. இந்நிலையில் தன்னை மறந்து தன்நாமம் கெட்டுத் தலைவன் தாளில் தலைப்படுகின்றது; கண்ணன் காதலனுகிக் கணவன் ஆனன்.

*முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்*
*மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனுள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்ருள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்*
*தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*

இந்த அருமையான அப்பரின் தேவாரத்துக்கு நமக்கு இப்போது நல்லதொரு விளக்கமும் தெரிகிறது.

ஆண்டாள் ஆண்டவனிடத்திலே கொண்டது தெய் விகக் காதல். இறைவனிடத்திலே எழுகின்ற பேரன்பை— எல்லையில்லாப் பக்தியைக் காதல் என்றே கவின்பெறப் பாடுகின்ருர்கள் மெய்யடியார்கள். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி,

*வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்*
*ஆயும் அமருலகும் துஞ்சிலும்நீ துஞ்சாயால்*
*நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்*
*நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயே.*

என்று நம்மாழ்வார் பாடுவார்.

'காதல் மிகும் அணியிழையார் என வடுஉற்றேன்' எனத் தம் நிலைக்கு இரங்கிய தாயுமானவர்,

*'மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுளஎ*
*லாம்உறங்கும்*
*கண்ணுறங்கேன் எம்இறைவர் காதலால் பைங்கிளியே'*

எனப் பைங்கிளிக் கண்ணி பாடுவார்.

காமத்திற் சிறந்தது காதற் காமம் என்பது ஆன்றோர் வாக்கு. காதல், அன்பின் இறுதிப்படி காதல் பெருகி வருகின்றபோது அன்பின் முழுமையாகும். காதல் கனிந்த உள்ளத்தின் தூய்மையையும், அதன் வாயிலாகக் கடவுள் அன்பை அளந்து அறியும் பெருமையையும், இவ்விரண் டுக்கும் உள்ள ஒற்றுமையையும் தமிழ் நாடு என்றைக்கோ கண்டது. இந்த அடிப்படையிலேயே அற்புதமான ஆயிரம் ஆயிரம் பாடல்கள் எழுந்தன.

காதலின் கோலம்

"*பாட்டு உள்ளதை உள்ளவாறே கூறத் தேவை இல்லை ஆயின், வெறுங் கற்பனையாக அமையாமல் உள் ளதை ஒட்டிக் கூறுவதாகவோ அல்லது விளக்கி உரைப்ப தாகவோ அமைய வேண்டும்" என்று பிராட்லே என்ற அறிஞர் கூறுகிறார்.

காதலினல் பால் கசக்கும்; படுக்கை வெறுக்கும் எனப் பாட வருகிறார் பாரதியார் இன்பம் தரும் பொருள் கள் துன்பம் தருவதாகவே பாடி விடுகிறார்.

வேண்டும் பொருளை எல்லாம் — மனது
வெறுத்து விட்ட தடி !......
தாயினைக் கண்டாலும் — சகியே
சலிப்பு வந்ததடி......
பாலும் கசந்ததடி — சகியே
படுக்கை நொந்ததடி
கோலக் கிளிமொழியும் — செவியில்
குத்தல் எடுத்ததடி

காதலால் மனங் கலங்கியவர்கள் விலங்கு பறவைக ளோடும், உயிர் இல்லாப் பொருள்களோடும் பேசுவதாகக் கற்பனை செய்து காவியங்கள் எழுகின்றன.

---

*poetry, though no copy of reality, should not be mere fancy, but should refer to, and interpret, that reality.

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுவலிய நெறியால்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர்.

என்று தொல்காப்பியம் (செய்யுளியல்) இலக்கணம் வகுப்பதால், காதலால் மனங் கலங்கியவர்களின் கூற்றுக்களாக எழும் கற்பனைகள் பொருள் உடையனவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியன என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமே இல்லை.

வைஷ்ணவ தர்மமாகிய பிரபத்தியின் சரணமாக அடைதல் முக்கிய அம்சங்கள் மூன்று அவையாவன, அநந்ய சேஷத்துவம் (திருமாலன்றி வேறெவர்க்கும் எப்பொருளுக்கும் அடிமையாகாமை), அநந்ய சரணத்துவம் (திருமாலன்றி வேறெவரையும் எப்பொருளையும் உபாயமாகப் பற்றாமை, அநந்ய போகத்துவம் (திருமாலன்றி வேறெவராலும் எப்பொருளாலும் இன்பம் துய்க்காமை) ஆண்டாள் கொண்ட அன்பு அநந்ய போகத்துவம். அது பக்திக் காதல்.

ஆண்டாளது பக்திக் காதலின் ஏற்றத்துக்குச் சான்று சொல்கின்றது நாச்சியார் திருமொழி.

வானிடை வாழும்அவ் வானவர்க்கு
    மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
    கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனுடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
    உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
    வாழ்கிலேன் கண்டாய் மன்மதனே.

'கண்ணபிரானுக்கென்றே வாழ்க்கைப்பட இருக்கும் எளியேன், மானிடர்க் கென்று பேசப்பட்டால் வாழ்கிலேன்

கண்டாய்' என மன்மதனுக்குத் தன் தீராக் காதலை நேரா கச் சொல்கிறாள். வானவர்க்கு வகுத்த அவிப்பாகத்தைக் கானிடைத் திரியும் நரி வந்து காலால் கடந்தும் மூக்கால் மோந்தும் பார்ப்பது பொருத்தம் ஆகுமா?

கண்ணன் மேல் காதல் கரை புரண்டு ஓடுகின்ற நிலையிலே இன்னதுதான் செய்ய வேண்டும் என்று தெரியாது குறி பார்க்கிறாள்; குயிலோடு உறவாடுகின்றாள்; குயிலைக் கெஞ்சுகிறாள்; கொஞ்சுகிறாள் கோதை.

என்பு ருகிஇன வேல்நெடுங் கண்கள்
இமைபொருந் தாபல நாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறுதுழல் கின்றேன்
அன்புடை யாரைப் பிரிவுறு நோயது
நீயும் அறிதி குயிலே
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணி யனைவரக் கூவாய்.

காதலர் பிரிவதால் வரும் துன்பத்தைக் குயிலும் அறிந்திருக்கிறது என்ற பெரு நம்பிக்கையினால், 'புண்ணியனை வரக்கூவாய்' என வேண்டிக் கொள்கிறாள்.

## காதற் கனவுகளும் நினைவுகளும்

மாயவன் மணம் செய்வதாகக் கண்ட தூய நற்கனவைத் தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள்.

வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றுஎதிர்
பூரண பொற்குடம் வைத்துப்புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்;

"தோழி, புண்ணிய தீர்த்தங்களைப் பெரியோர்கள் கொண்டு வந்து புரோட்சித்து மணமக்களை வாழ்த்தி இடையூறு ஏற்படா வண்ணம் காப்புநாண் கட்ட நான் கனாக் கண்டேன்."

சகல மங்கல வாத்தியங்களும் முழங்குகின்றன; கல்யாணப் பந்தலுக்குள்ளே மாப்பிள்ளை வருகிறார்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன்வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

கண்ணனை மைத்துனன் என்றே உரிமை பாராட்டுகிறாள்; கலியாணப் பந்தலுக்குள்ளே வந்து பாணிக்கிரகணம் செய்ததைச் சொல்லிவிட்டு,

வாய்நல்லார் நல்லம றையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல்ப டுத்துப்ப ரிதிவைத்து
காய்சின மாகளிறு அன்னான்என் கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்.

என்று தீவலம் வரும் நிகழ்ச்சியைச் சொல்கிறாள். அக்கினி சாட்சியாகத் திருமணம் நிகழ்கிறது. ஓமாக்கினியைப் பிரதட்சிணம் செய்து,

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்.

திருக்கையால் தன் கையைப் பற்றினான் என்றே பெருமையுடன் சொல்கிறாள். அம்மட்டுமா? இல்லை; தன் காலைப் பிடித்து அம்மி மிதிக்கவும் செய்தான் என்றும் பெருமிதத்தோடு சொல்கிறாள்.

இவ்வாறு எல்லாம் பட்டர்பிரான் கோதை பக்திக் காதலால் கனாக் காண்கிறாள். பத்மநாபன் ஊதுகின்ற பாஞ்சசன்னியத்தைக் கேட்கின்றாள் :

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்து இருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

'ஏ பாஞ்சசன்னியமே, அந்த மாதவனின் வாய்ச் சுவையும் நாற்றமும் நீதானே அறிவாய். அவற்றைப் பண்ணும் பருகும் பாக்கியம் பெற்ற நீ, விருப்புற்றுக் கேட்கும் எனக்கும் சொல்ல வேண்டும்.''

*மன்னாகி நின்ற மதுசூதன் வாய்அமுதம்*
*பன்னாளும் உண்கின்றாய் பாஞ்சசன் னியமே*

என்று அங்கலாய்க்கிறாள்.

சங்குக்குக் கிடைத்த செல்வம் தனக்குக் கிடைக்க வில்லையே என்பதுதான் அவள் கவலை. சங்கின் பாக்கியத்தை நினைந்து, 'உன் பெருமையே பெருமை; உன் செல்வமே செல்வம்' என்று கதறுகின்றாள்.

செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலுக்குத் தன்னையே கொடுத்து விட்ட காரார்குழல் அணங்கைக் கண்ணபிரான் கைப்பிடிக்காமல் இருப்பானா? கோதையின் காதல் பக்திப் பெருங்காதல். அவளது பக்திப் பெருக்குக்குப் பெருமான் தலை வணங்காமல் இருக்க முடியுமா, என்ன? சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாளின் மனம் பொருந்திய மணம் நிறைவேறுகிறது.

*சீரார் பிரமன் செறிந்துஆ குதிசெய்ய*
*ஏரார் பெரியாழ்வார் பல்லாண்டு எடுத்துஏத்த*
*ஆராத காதல் அடியார் குழாம்புகழக்*
*காரார் குழல்அணங்கைக் கண்ணபிரான்*

*கைப்பிடித்தான்.*

பாணிக்கிரகணமும் இனிதே நிறைவேறுகின்றது.

பத்து நாயகிகளால் தன் நிலையைக் காட்டியது திருப்பாவை. நேராக வெளிப்படுத்தியது நாச்சியார் திருமொழி. கோதையின் இலட்சியக் காதல் நமக்கும் ஏற்படுமேயானால் நாமும் பாக்கியசாலிகள்!

# திருப்பாவை

திருப்பாவையும் திருவெம்பாவையும் சைந்நெறித் தமிழர்க்குக் கிடைத்த, தெய்விக மணம் கமழும் தீந்தமிழ்ப் பூங்குவியல்கள். இக்குவியல்களின் நன்மணம் ஒரு காலத்தில் தாய்லந்து (Thailand) முதலிய நாடுகளிலேயும் கமழ்ந்திருக்கின்றது. திருப்பாவையும் திருவெம்பாவையும் வெவ்வேறு தெய்விகச் சார்பு உடையனவாயினும் ஒரு பொதுக் குறிப்பு உடையன. திருப்பாவை திருமாலின் திவ்விய புகழை நாவாரப் பாடுகின்றது. திருவெம்பாவை சக்தியை வியந்து சிவனின் திருப்பாதத் திறம் பாடுகின்றது. 'பாவாய்' என்று முடிவு பெறுவதால் இந்தப் பிரபந்தங்களைப் பாவைப் பாட்டு என்கிறோம். திருப்பாவைப் பிரபந்தத்தில் 'நம்பாவைக்குச் செய்யும் கிரிசைகள்' என்றும் 'நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்' என்றும் பாவையைக் குறித்து ஆண்டாள் பாடுகின்றாள். ஆனால், திருவெம்பாவையில் 'எம்பாவாய்' என்ற சொற்றொடர் பாடல்களின் இறுதியில் வருவதைத் தவிரப் பாவை என்ற சொல் பாடல்களில் இடம் பெறவில்லை. பாவை என்ற சொல் நோன்பு, திருவுருவம் என்ற பொருளிலே திருப்பாவையிலே இடம் பெறுகின்றது.

மங்கையர் மணிவண்ணனை மனம் குளிரப் பாடிப் புனிதமான மணல் எடுத்துப் பராசக்தியின் திருவுருவஞ் செய்து போற்றுவர். மணற் பாவையைத் தேவியாக வழிபட்ட மாண்புறு மங்கையர் மழை பொழிந்து நாடு செழிக்க வேண்டும் என்றார்கள்; நல்ல கணவனுடன் நயந்து வாழவேண்டும் என்றார்கள். இந்த வழிபாட்டைப் பாவை நோன்பு என்று சொல்வார்கள். இப்பாவை நோன்பின் ஏற்றம் பாகவதத்திலேயும் பாராட்டப் படுகின்றது. நோன்பு நோற்கும் நங்கையர் தாம் மேற்கொண்டுள்ள நியமங்களைத் திருப்பாவையிலே பேசுகின்றார்கள். இதோ அந்தத் திருப்பாவை;

**வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடிபாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**
**செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
**உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்**

இங்கே பற்றிக் கொள்வன, விட்டு விடுவன என்ற இரு தலைப்பிலே பாவை நோன்புக்கு உரிய நியமங்களைச் சங்கற்பித்துக் கொள்கிறார்கள். பரமன் அடி பாடுதல், நாட்காலே நீராடுதல், ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கொடுத்தல், உய்யுமாறு எண்ணி உவந்திருத்தல் என்பன பற்றிக் கொள்வன ; நெய், பால் உண்ணாமை, மைஇட்டு எழுதாமை, மலர்இட்டு முடியாமை, செய்யாதன செய்யாமை, தீக்குறளை சென்று ஓதாமை விட்டு விடுவன. விதிகளும், விலக்குகளும் எடுத்த காரியம் சித்தி பெற வேண்டுவனவாகும். இந்நியமங்களினால் அகத்தின் அழகு பெருகுகிறது ; சேவடி படரும் செம்மல் உள்ளம் வாய்க்கின்றது. இவர்களே வாழத் தெரிந்தவர்கள்.

## பாவை நோன்பின் உயிர்நிலைப் பொருள்

ஆண்டாள் உபநிடதம் திருப்பாவை ; ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைகின்ற பெரும் தத்துவத்தைத் திருப்பாவையிலே பாடிக் கொடுத்திருக்கின்றாள் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள். அந்தச் செம்மனச் செல்வி இலௌகிகக் கருத்தை மனத்திலே வாங்கிக் கொண்டு சமயப் பேருண்மையைப் பிரபந்தத்திலே பாடுகிறாள்.

விளையாட்டாக, வேடிக்கையாகக் கோதை கட்டி எழுப்பிய செல்வச் சிங்கார மாளிகையிலே — மந்திரப் பாட்டிலே — கருத்துக் கானமயில் ஆடுகிறது ; கொள்கைக் குயில் கூவுகிறது ; நல்ல விளக்கங்கள் என்ற புள்ளிமான்

துள்ளி விளையாடுகிறது; செந்தமிழ் அணங்கும் அங்கே சிரித்து விளையாடுகிறாள்.

ஆண்டாள் தன்னுடைய அன்புக் காதலின் மகத்தான குறிக்கோளை நிறைவேற்ற வேண்டி நோற்ற நோன்பு பாவை நோன்பு — மார்கழி நோன்பு தீங்கு இன்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய வேண்டும் என்பதும், நல்ல கணவனைப் பெறுவதற்கு எல்லாம் வல்ல எம்பிரானின் திருவருள் நலன் பெருக வேண்டும் என்பதும் பாவை நோன்பின் உயிர் நிலைப் பொருள்களாகும்.

ஆண்டாளுக்குப் பகவானிடத்திலே எவ்வளவு பக்திக் காதல் உண்டோ, அவ்வளவு பக்திக் காதல் நமக்கும் உண்டாக வேண்டும். தான் பெற்ற இன்பம் வையகம் பெறவேண்டும் என்ற மேலான கண்ணோட்டத்தினால் எழுந்தது திருப்பாவை. திருப்பாவையிலே தெய்விகக் காதல் ஏறுநடை போடுகின்றது; பெண்மைப் பெட்பு நிழல் ஆடுகின்றது; ஊடல் உருக் கொள்கின்றது; ஆற்றாமை அணைகடந்து செல்கின்றது.

*பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்*
*வேதம் அனைத்துக்கும் வித்தாகும் — கோதைதமிழ்*
*ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்பதும் வம்பு.*

(கோதை — ஆண்டாள்; ஐயைந்தும் ஐந்தும் — முப்பது)

'கோதை பாடிய முப்பது திருப்பாடல்களையும் பாடிப் பாடிப் பயன் அடைய முடியாத மக்களை இந்தப் பூமி எதற்காகச் சுமந்து கொண்டிருக்கின்றதோ நாம் அறியோம்' என்று சொல்வது திருப்பாவையைப் படிக்க வேண்டும் என்ற அறக்கட்டளையாகும்.

பக்தியின் சிகரத்திலே வாழ்ந்தவள் கோதை. பகவானிடம் கொண்ட பகவத் காம வேகத்தைப் பாட்டுக்களால் பாடிக் காட்டுகிறாள். "இறைவன் கேட்கத் தக்கவன், நினைக்கத் தக்கவன், தியானம் செய்யத் தக்கவன், பார்க்

கத் தக்கவன்'' என்கின்றது வேதம். பகவான் காதலிக்கவும் தக்கவன் என்கின்றது திருப்பாவை. அன்பு தோன்றி ஆர்வம் மேலிட்ட நிலையிலே காதல் வளர்கின்றது. ஆண்டவனிடத்திலே செலுத்தும் அன்பு ஆர்வ மேலீட்டினுல் பக்தியாகின்றது. பக்தன் பரவச நிலையிலே பெண் பாவத்தை மேற்கொண்டு இறைவனை அடையத் துடிக்கிருன். ஆண்டாள் இந்நிலையிலேயே எம்மையும் தம்மையும் நாயகிகள் ஆக்கித் திருவருள் இன்பம் துய்க்கப் பாடுகின்ருள்; திருப்பாவை எழுகின்றது.

## பத்து நாயகிகள்

கண்ணனை அடைய நோன்பு நோற்கும் அத்தனை நாயகிகளையும் ஆண்டாள் கோபியர் ஆக்குகின்ருள். ஊரே ஆயர்பாடி ஆகின்றது. யாவர்க்கும் கண்ணனிடம் தீராத காதல். ஆனுல், கோபியர்களின் போக்கு வேறு வேருக இருக்கின்றது. கண்ணபிரானிடத்திலே அன்பு காட்டுவதில் ஒருத்தி புதியவள். அவள் நோன்பின் சுவடு அறியாதவள். நோன்பின் சுவடு அறிந்தவள் ஒருத்தி. ஆனுல். மெய்ம்மறந்து கிடந்த பேய்ப் பெண் அவள். நோன்பின் பலமும் பயனும் உடையாள் கண்ணனையே அசைக்கும் வீறு உடைய பாவை வேருெருத்தி. கண்ணன் வருகிறபோது வரட்டும் என்று ஆத்திரம் இல்லாமல் தூபம் கமழத் துயில் அணைமேல் கண்வளரும் மாமான மகள் இன்னெருத்தி. கும்பகர்ணனை உறக்கப் போட்டியில் வென்ற அனந்தல் உடையாள் ஒருத்தி. அவள் கிருஷ்ண பக்தி என்ற சொர்க்கத்தில் உறங்கிக் கிடப்பவள். கண்ணனை நாம் தேடிப் போக முடியாது; அவனே நம்மிடத்து வரட்டும் என்ற பக்தியின் உச்சிப் படியிலே நிற்கும் குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடி ஒருத்தி. கண்ணனை அன்றி வேருெருவரையும் அறியாத நற்செல்வன் தங்கை ஒருத்தி. கண்ணனின் கல்யாண குணங்களை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து உருகும் போதரிக் கண்ணினுள் பிறிதொருத்தி. 'எல்லோரையும் நானே முன்னே வந்து

எழுப்புவேன்' என்று சொல்லி மறந்த நங்கை ஒருத்தி. எல்லோரும் திரண்டு வந்து தன்னை எழுப்ப வேண்டும்; திரண்டு வரும் அந்தக் கூட்டத்தைக் கண்ணாரக் கண்டு களிகூர வேண்டும் என்ற நினைவிலே படுக்கையை விட்டு எழுந்திராத இளங்கிளி ஒருத்தி.

இவ்வாறு திருப்பாவையில் துயில் எழுப்பும் பத்துப் பாசுரங்களில் பத்து நாயகிகள் பேசப்படுகிறார்கள். பக்தர்கள் வெவ்வேறு படித்தரங்களிலே இருப்பவர்கள்தானே! பெருமானை அடைய அங்கலாய்ப்பவர்கள், ஆண்டவன் வான் பழித்து மண் புகுந்து ஆட்கொள்வான் என்ற பக்தியின் சிகரத்திலே இருப்பவர்கள், 'சும்மா இரு சொல் அற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்று தூங்காதே தூங்கிச் சுகம் பெறுபவர்கள், ஒன்றும் வேண்டாம், நீயே வேண்டும் என்ற விழுச்செல்வம் பெற்று வாழ்பவர்கள், நினைந்து நினைந்து உருகும் பழுத்த மனத்து அடியார்கள், புறம் புறம் திரிந்த செல்வமே என்று சிக்கெனப் பிடிக்கும் தவச்செல்வர்கள், கர்ம யோகிகள், ஞான வீரர்கள் என்றெல்லாம் பக்தர்கள் கூட்டத்திலேதான் படித்தரம் எத்தனை! எத்தனை!! கோதை நாச்சியார் அத்தனை பக்தர்களின் மனப் பான்மையையும் பிரதிபலிக்கப் பாவை பாடுகிறாள்.

## கேட்கும் வரம்

கண்ணனின் அன்பைவிட வேறொன்றும் வேண்டாம் என்று உறுதி கூறி, அந்த அன்பிலே மலர்ந்த ஒரு வாழ்வு வேண்டும் என்ற பெரு நோக்கத்தைப் பாட்டாக வடிக்கிறாள் கோதை. 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று மணிவாசகர் எழுப்பிய குரல் இந்த உயிர்நிலைப் பாட்டிலிருந்தும் எழுகின்றது. "உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்ற உயிர் நிலை திருப்பாவையிலே துள்ளி விளையாடுகிறது பாடல் இதோ:

சிற்றம் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரைஅடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துஉண் ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

"கண்ணபிரானே, உன்னிடம் நாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல; "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்." 'தேவரீருடைய எவ்வவதாரங்களிலும் தேவரீருடைய உறவு உடையவர்களாகக் கடவோம். தேவரீருக்கே நாங்கள் அடிமை செய்யக்கடவோம்; எங்களுக்கு வேறு பொருள்களில் உண்டாகும் விருப்பங்களைத் தவிர்த்தருளவேண்டும்' என்று வரம் வேண்டுகிறார்கள். அவர்களின் உள்ளக் கமலத்திருந்து உதித்து எழுந்த இந்த அற்புதமான வேண்டுகோள் நம்முடைய பிரார்த்தனையாகவும் இருக்க வேண்டும். உலகப் பொருள்களிலே இருக்கின்ற காமங்களை மாற்ற வேண்டும் என்ற ஒரு நினைவு இலகுவாக நம் உள்ளத்திலே வந்துவிடாது; வரவேண்டும். வருமேயானால் திருவடிப்பேற்றுக்கு உரிய செவ்வி வாய்க்கும். அப்போது,

பண்ணினேர் மொழியாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

என்ற வாழாப்பத்தை நாமும் பாடலாம்.

இறைபணிக்கே கரணங்கள் என்ற நினைவு நமக்கு வேண்டும். மனம், மொழி, மெய் அனைத்தும் அரன் பணிக்காகவே பயன்பட வேண்டும். சிதம்பர மும்மணிக் கோவையிலே குமரகுருபரர் ஒரு வரம் கேட்கிறார்:

.................................................

*மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண*
*வரம்ஒன்று இங்குஎனக்கு அருளல் வேண்டும் அதுவே*
*பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி*
*பலதொடுத் திசைத்த ஒருதுணி அல்லது*
*பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்*
*கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்கு*
*இடம்பிறிது இல்லை யாக கடும்பசிக்கு*
*உப்பின்று அட்ட புற்கைஊண் அல்லது*
*மற்றோர் உண்டி வாய்விட்டு ஆற்றினும்*
*ஈகுநர் இல்லை யாகநாள் நாளும்*
*ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி*
*மெய்த்தவர் குழாத்தொடும் வைக இத்திறம்*
*உடனிங் களவும் உதவிக் கடவுள்நின்*
*பெரும்பதம் அன்றியான் பிறிதொன்று*
*இரந்தனன் வேண்டினும் ஈந்திடா தருவே.*

இவ்வாறு ஒரு வரம் கேட்கும் நிலைக்கு நம்மை நாமே உயர்த்திக் கொள்ளத் திருப்பாவை வழி காட்டுகிறது.

## தீயினில் தூசாக்கும் திருப்பாவை

அப்பரைப் பல்லவ மன்னன் கல்லிலே கட்டிக் கடலிலே போட்டபோது, கடலிலே கல் படகாக வந்த கதை நாம் அறிந்தது. "நற்றுணை ஆவது நமச்சிவாயவே" என்ற மிடுக்கு, பல்லவ இராச்சியத்தையே அசைத்துக் குலுக்கி அதிரச் செய்தது. நம்முடைய பற்றுக்களை ருசிவாசனை இன்றி ஒழிக்கவும், பழவினைகளின் தொடர்பை அறுக்கவும் பகவானுடைய நாம சங்கீர்த்தனம் வழிகாட்டும். 'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று பாடுவதில் பெருமிதம் கொள்கின்றார் திருமங்கை ஆழ்வார்.

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலம்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாரா யணாஎன்னும் நாமம்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நல்லன எல்லாம் தரும் வன்மை உடையது நாம சங்கீர்த்தனம். அது பெரும் சக்தி வாய்ந்தது; பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூன்று வினைகளையுமே வலி அழித்துவிடும். காட்டுத்தீ கானகத்திலே இருக்கின்ற பச்சை மரங்களைத் துச்சமாக எண்ணி நீறு ஆக்குவதுபோலே, நாம சங்கீர்த்தனம் தீயாகிப் பாவங்களைத் தூசாக்கி நீறுக்கும். முன்பு செய்த பாவங்களையும் இனிமேல் வர இருக்கும் பாவங்களையும் நாமசங்கீர்த்தனம் தீயிலிட்ட பஞ்சுபோல் ஆக்கிவிடும். திருநாமத்தை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தால் மூச்சினிலே ஒரு சக்தி பிறக்கும். தீயினில் தூசாக்கும் திருப்பாவை இதோ:

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

## பாடல்களின் பயன்

பாவைப் பாட்டைப் பாடி உள்ளபடி நோற்றால் திங்கள் மும்மாரி பெய்யும்; நீர்வளம், நிலவளம், நெல்வளம், பால்வளம் என்ற இன்னோரன்ன வளம் எல்லாம் நிறைந்து பொலியும்.

பாவை நோன்பினாலும் திருப்பாவைப் பாட்டினாலும் நாட்டிலும் வீட்டிலும் ஞானச் செல்வம் பெருகிச் சமய மணம் கமழும்; சமயப் பண்பு வளரும். திருப்பாவை மனித குலத்தை மாண்புடன் நன்னெறியிற் செலுத்தி வாழ்வை வளமாக்கும்.

பாவை நோன்பு மிகப் பழமையானது. அது சிஷ்டாசாரமாக அநுட்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆண்டாளே தன் திருப்பாவையிலே, "மாலே, மணிவண்ணா மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்று பாடி, இது பண்டைத் தமிழ் நோன்பு என்கின்றாள் இது ஒரு நாட்டினருக்கு மட்டும் உரியதன்று. 'உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே' என்று கோதை கண்ணனை உலகுக்கு ஒரு மாபெரும் தெய்வமாக்கி விடுகிறாள்.

கோதை தமிழ் இன்பப் புதையல்; இலக்கியப் பெட்டகம்.

மார்கழித் திங்களில் வாதவூரரின் வண்ணத் தமிழாம் திருவெம்பாவையும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் பாடிக் கொடுத்த சீர்மல்கு திருப்பாவையும் முழங்க வேண்டும் முழங்கினால் முதல்வனது கங்குகரையற்ற கருணைப் பெருக்காம் பெருமழை பொழியும்; நாடு செழித்து வளமாகும் அறம் பல பெருகும் நல்ல கணவர்களை நங்கையர் பெற்று எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்து வாழலாம்.

எனவே. சித்தம் அழகியராய் மாதொருபாகனைப் பாடுவோம். 'மாலே மணிவண்ணா' என்று குரல் எழுப்பி மார்கழி நீராடுவோம். பாடினால், ஆடினால் இறைவன் ஞானம் தருவான்; சீலம் தருவான்; பேரருட் பெருமழை பொழிந்து நம்மை வாழ்விப்பான்.

# தேவீமாஹாத்மியம்

யாதேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு சாந்திரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு ச்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு தயாரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு துஷ்டிரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

யாதேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

புத்தி, சக்தி, சாந்தம், சிரத்தை, தயை, திருப்தி, தாய் வடிவம் கொண்டு எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்றளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.